# இந்துவணிகன்

# INTHU VANIHAN

LIBRARY
CHAVAKACHCHERI HINDU COLLEGE

1993 1994

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

0040

சாவகச்சேரி இந்துக் கல்லூரி

உயர்தர

வர்த்தக மாணவர் மன்றம்

# இந்து வணிகன்

## INTHU VANIHAN

இரண்டாவது மலர்

CHC
ACCESS No: M 256
CLASS No;

1993 1994

0040

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

சாவகச்சேரி இந்துக் கல்லூரி

உயர்தர வர்த்தக மாணவர் மன்றம்

## அகத்துள்.........

- ஆசியுரை
- இதழாசிரியர் இதயத்திலிருந்து
- மீண்டும் ஒருமுறை "இந்து வணிகன்"

LIBRARY
...ACHCHERI HINDU COLLEGE

### கணக்கியல்:

1. நிதிப் பாய்சல் கூற்று
   திரு. க. யோகநாதன் - உதவி விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்
2. வியாபார நோக்கமற்ற தாபன கணக்குகள்
   செல்வன். வே. சிவாகரன்
3. இலங்கை கணக்கியல் நியமனம் 31
   செல்வன். த. கதிரமலை
4. கணக்கியல் எண்ணக் கருக்கள்
   திரு. க. பாலகிருஷ்ணன்

### வர்த்தகமும் நிதியும்:

1. இலங்கையின் பங்குச் சந்தை
   திரு. க. தேவராஜா சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்.
2. செய்திக் தொடர்பு
   செல்வி சோ. மாலதி

### பொருளியல்

1. தேசிய வருமான கருத்தும் கணிப்பீடும்
   திரு. அ. கேதீஸ்வரன் - உதவி விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்.
2. தனியார் மயமாக்கமும், மக்கள் மயமாக்கமும்
   செல்வன். ஞா. இன்பகரன்

### புவியியல்:

1. பிரித்தானியாவின் இரும்புருக்கு கைத்தொழில் வளர்ச்சியின் அண்மைக்காலப் போக்கு
   திரு. த. ரவீந்திரன் - உதவி விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்.
2. மண்ணின் விருத்தி, குறுக்குவெட்டுமுகம், அதன் வகைகள்
   செல்வன். மா. தயாகுமாரன்

### இந்துநாகரீகம்:

1. வைசசித்தாந்த நோக்கில் ஆன்மா பற்றிய எண்ணக்கரு
   திருமதி. எ. என். கிருஸ்ணவேணி - விரிவுரையாளர் யாழ்பல்கலைக் கழகம்.
2. சங்ககால சமய மரபு
   செல்வன். ந. அகிலன்

# அதிபரின் ஆசிச் செய்தி

எமது கல்லூரியின் வணிக மன்றத்தினர் "இந்து வணிகன்" என்ற இச்சஞ்சிகையை இரண்டாவது மலராக வெளிக்கொணர்தல் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இவ்வெளியீட்டில் உந்துசக்தியாகப் பணியாற்றிய மாணவர்களும் பக்கபலமாக நின்றுழைத்த ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இம்மலர் மாணவர்களின் சுயசிந்தனை வளர்ச்சிக்கும், சுயஆக்க முயற்சிக்கும் ஏற்ற சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதோடு கல்விச்செயற்பாட்டை உயிர்ப்புடையதாக்கவும் தன்னம்பிக்கையை விருத்தி செய்வதற்கும் உகந்த நாண்டற்களமாகவும் விளங்குகின்றது. இன்றைய உலகில் புதிய அறிவின் வளர்ச்சிவேகம் பல்மடங்கு விரிவடைந்துள்ளது. இவ் வேகத்துக்குத் தாய்மொழிக்கல்வியின் மூலமே மாணவர்களால் ஈடுகொடுக்கமுடியும். எனினும் புதிய அறிவியல் நூல்கள் தமிழ்மொழியில் மிக அருகலாகவே உள்ளன. வாழ்வியல் முக்கியத்துவம் கொண்ட தாய்மொழியில் நூல்கள் பல வெளிவர வேண்டிய தேவை இன்று அதிகரித்துள்ளது. அத்தேவையின் ஒரு பகுதியையாவது வணிகமன்றத்தினர் இச்சஞ்சிகை மூலம் நிறைவேற்றி வருதல் தன்னிறைவைக் கொடுக்கும் ஒரு முயற்சியாகும்.


இதில் இடம் பெற்றுள்ள தனித்தன்மையும் மேதா விலாசமும் மிக்க தேர்ந்த அறிஞர்களின் தரம்மிக்க ஆக்கங்கள் மாணவர்களில் உள்ளார்ந்த திறன்களையும் உலக நோக்கையும் ஆழஅகலமாக்கும் வலுமிக்கவை; பயன்படு தன்மை கொண்டவை. வணிக மன்றத்தினரின் இப்பயன்மிக்க பணி தொடர் அறாது மலர வேண்டும். மாணவர்களைப் பூரண மனிதர்களாக மலர்விக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

திரு. க. சந்திரசேகரா,
அதிபர்

# எங்கள் அதிபர்

J/Chavakachcheri Hindu College
PERMANENT REFERENCE
0040



திரு. க. சந்திரசேகரா, B. A. Dip in Edu.

# நல்லாசிகள்

LIBRARY
CHAVAKACHCHERI HINDU COLLEGE

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வணிக மன்றத்தின் சார்பில் வெளியிடப்படவுள்ள "இந்து வணிகன்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடசாலை மட்டத்தில் வெளிப்படும் சஞ்சிகை மாணாக்கர்களது ஆக்க திறன் வெளிப்பாட்டிற்கு நிலைக்களனாக அமைகின்றன. 'இந்து வணிகன்' உயர்தர ஆண்டுகளில், வர்த்தக நெறிபயிலும் மாணாக்கர்களது கருத்து வெளிப்பாட்டிற்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் சமகால வர்த்தக பொருளாதார தத்துவங்களை முதன்னிலைப் படுத்தும் கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் என்பது எனது நம்பிக்கை.

"இந்து வணிகன்" அறவெனும் ஆறுடன் ஒரு நல்ல ஊற்றாக கலந்திட எனது நல்லாசிகள்.

தென்மராட்சிக் கல்விக்கோட்டம்,
சாவகச்சேரி.

திருமதி. P. கணேசலிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்.

# ஆசிச்செய்தி

வண்டமிழறிஞர்கள் வாழும் தென்மராட்சிப்பகுதியில், கல்வி ஒளி பரப்பும் கல்லூரிகளுள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதன்மை நிலையைப் பெற்றுத் திகழ்கின்றது. இக்கல்லூரி பாடவிதானச் செயற்பாட்டிலும், இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் முன்னணியில் திற்பதை நன் கறிந்து பழையமாணவன் என்ற ரீதியில் பெருமகிழ்ச்சியடைகின்றேன், என்னை இந்நிலைக்கு உயர்த்திய என்னன்னையாகிய கல்லூரியின் "இந்து வணிகன்" இரண்டாவது மலருக்குப் பணிவன்போடு ஆசி வழங்கு வதைப் பெரும்பேறாகக் கருதிப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரியில் 1977 இல் வணிகவியல் கற்பிக்கும் முயற்சிகள் தொடக்கப்பெற்று இன்று வரையும் படிப்படியாக வளர்ச்சியுடன் பீடுநடை போட்டு வருவது நாமறிந்ததேயாகும். வணிகத்துறை மாணவரிடையே எழுத்தாற்றலையும், துறைசார் விடயங்களையும், அதற்குரிய சிந்தனை களையும் வளர்ப்பதில் இம்மலர் முனைந்திருப்பது பாராட்டுக்குரியது வணிகவியல் பற்றி "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்" அப்பொருள் இம்மலரினுள்ளிருப்பதைக் கண்டு வியப்படைகின்றேன்.

இம்மலரை ஊக்கத்துடனும், ஆக்கத்துடனும், ஆர்வத்துடனும் வெளியிட்ட சகலரையும் பராட்டுவதில் மகிழ்சியடைகின்றேன். இம்மலர் நீண்ட தூரம் கல்விப் பயணத்தைத் தொடர வேண்டுமென வாழ்த்தி, அதற்கான வலுவை அருளவேண்டி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**வ. க. பாலசுப்பிரமணியம்**
*சிறப்பலுவலர் (வணிகவியல்)*

**கல்வித்திணைக்களம்,**
*(வலயம் I)*
*யாழ்ப்பாணம்.*
*1994 - 10 - 25*

## மன்றப் பொறுப்பாசிரியரின்

# ஆசிச்செய்தி

எமது கல்லூரியின் உயர்தர வர்த்தக மாணவ மன்றத்தின் இரண்டாவது மலராக "இந்து வணிகன்" பொலிவுடன் கைகளில் வலம் வருவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலரில் இடம்பெற்றுள்ள பல ஆக்கங்கள், வர்த்தக மாணவர்களுக்கு பாட விடய அறிவையும் தெளிவான சிந்தனைகளையும் வழங்கி அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு துணையாக அமையுமென்பதில் ஐயமில்லை.

தடைகள், தாமதங்கள் பல மிகுந்த இக்காலப் பகுதியிலே மாணவ மன்றத்தின் இச்செயற்பாடு ஒரு அரும்பணியாக அமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும். இம்மலர் பொலிவுடன் வெளிவர ஆக்கங்களை அளித்து ஒளியூட்டிய கட்டுரையாளர்கள், மாணவர்களுக்கு பாராட்டுக்களும், நன்றிகளும் உரித்தாகுக.

மன்றமானது இம்மலர் வெளியீட்டுக்கான அதிஷ்டச்சீட்டிழுப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்தியபோது நிதி உதவிநல்கிய மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகளுக்கும் இத்தருணத்தில் நன்றிகளை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இம்மலர் வெளியீட்டிற்கு ஊக்கமும் உறுதுணையும் அளித்த எமது கல்லூரி அதிபர், உபஅதிபர்கள், மன்றத்தின் ஆசிரியர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் நன்றிகள் தெரிவிப்பதோடு, வணிகக் கல்விக்கு வளமூட்டும் வகையில் தனது அறிவு ஒளியைப்பரப்பி இந்து வணிகன் தொடர்ந்தும் வெளிவரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**க. பத்மகாந்தன்**

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

# மன்ற முன்னைநாள் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தில் தனிப்பண்பினை தன்னகத்தே கொண்டு **1993 - 5 - 12** ல் வெளிவந்த "இந்து வணிகன்" மலரின் இரண்டாவது பிறப்புக்கண்டு பெருமகிழ்ச்சி கொள்வதுடன் இவ் மலருக்கு கடந்த ஆண்டு மன்ற தலைவர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருவுவகை அடைகின்றேன்.

எமது கல்லூரியின் வளர்ச்சியுற்ற துறைகளில் ஒன்றாக அமையும் வர்த்தக துறையின் **94**ம் **-95**ம் ஆண்டு மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் படைப்பாக இவ் மலர் அமைகின்றது. அத்துடன் நெருக்கடியான இக்காலப் பகுதியில் வர்த்தகத்துறை மாணவர்களின் உயர்தரப் பரீட்சைக்கு உதவக் கூடிய வகையிலும், வர்த்தகதுறை சார் பொது அறிவை வளர்க்க கூடிய முறையிலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும் கல்லூரி வர்த்தகத்துறை மாணவர்களினதும் ஆக்கங்களை கொண்டு வெளிவரும் இரண்டாவது இந்து வணிகன் படைப்புக்கு காரணகர்த்தாவாக அமையப் பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவிப்பதுடன் அடுத்துவரும் ஆண்டுகளிலும் இந்து வணிகன் வெளியீடு மாணவருக்கு உதவ வேண்டும் என்பது எனது பேரவா.

சி. தவாசன்

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து.........

தேசியக் கல்லூரியாக உயர்ந்த யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வணிக மாணவ மன்றத்தினால் ''இந்து வணிகனின்'' இரண்டாவது மலரை வெளியிடுவதில் மனப்பூரிப்பு அடைகின்றேன்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு விதமான கஷ்டங்களின் மத்தியில் இந்த சஞ்சிகை வெளியிடுவதற்கு எமது கல்லூரியின் அதிபர், மன்றத்தின் காப்பாளர், ஆசிரியர்கள், சகோதர சகோதரிகள் உறுதுணையாக இருந்தனர் அத்துடன் எமது மன்ற உறுப்பினர்களும் நிர்வாகக் குழுவினரும் நல்கிய அயராத ஒத்துழைப்பே இம்மலர் சிறப்பாக மலர்வதற்குக் காரணமாயிற்று.

எமது மன்ற உறுப்பினர்களின் வளர்ச்சியை இந்த சஞ்சிகை பிரதிபலிக்கின்றது. என்று கூறினால் அது மிகையாகாது. வணிகத்துறையில் சிறந்த அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும் மாணவர்களின் கருத்துக்களையும் உள்ளடக்கி ''இந்து வணிகன்'' இரண்டாவது மலர் மலர்கின்றான். வணிகத்துறை மாணவர்களுக்கு இந்த சஞ்சிகை ஒரு துணைநூலாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தச் சஞ்சிகையை சிறப்புற வெளியிடுவதற்கு ஆக்க பூர்வமான விடயங்களை எமக்கு தந்துதவியர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். மேலும் எமது நிதிப் பற்றாக்குறையை நீக்கி நிதி உதவி செய்தவர்க்கும் விளம்பரங்கள் தந்து உதவியவர்களுக்கும் புகைப்படங்களைத் தெளிவாக எடுத்துதவிய ''ஜெயா'' படப்பிடிப்பாளர்களுக்கும் இந்த மலரைச் சிறந்த முறையில் அச்சுவடிவில் அமைத்த ''ஸ்ரீ லங்கா'' அச்சகத்திற்கும் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் கூறிக் கொள்வதுடன் ''இந்து வணிகன்'' எதிர் காலத்தில் ஓங்கி வளர்ந்து ஒளி வீசிட வாழ்த்துகிறேன்.

''மொட்டாய் மலர்ந்து — இந்துத்தாய்
மடியினிலே தவழ்ந்து, பட்டொளி வீசிடும்
''இந்து வணிகனே வாழிய வாழிய''

இ. அருள்வேல்
— இதழாசிரியர் —

# நிகழாண்டு நிர்வாகக் குழு 1993 - 94

| | |
|---|---|
| காப்பாளர்:- | திரு. க. சந்திரசேகரா (அதிபர்)<br>திரு. ம. அருணாசலம் (துணை அதிபர்)<br>திரு. செ. சபாரத்தினம் (மேலதிக துணை அதிபர் |
| உதவிக்காப்பாளர்:- | திரு. க. பத்மகாந்தன்<br>திரு. வே. கந்தசாமி<br>திரு. த. இரத்தினம்<br>திரு. ந. பாலச்சந்திரன்<br>திரு. த. பாலகிருஸ்ணன்<br>திருமதி. சி. சுந்தரமூர்த்தி<br>திருமதி. க. பாலசுப்பிரமணியம்<br>திருமதி. இ. சந்திரதேவன்<br>திருமதி. க. இராதாகிருஸ்ணன்<br>திருமதி. எம். கணேசன்<br>திருமதி. என். சிவராம்<br>செல்வி. இ. முருகுப்பிள்ளை<br>செல்வி. வா. கதிரேசு |
| மன்றப் பொறுப்பாசிரியர்:- | திரு. க. பத்மகாந்தன் |
| தலைவர்:- | செல்வன். ஞா. இன்பகரன் |
| உபதலைவர்:- | செல்வன். க. தனுராஜ் |
| செயலாளர்:- | செல்வன். பி. தோமஸ் எடிசன் |
| உபசெயலாளர்:- | செல்வன். நி. சயந்தன் |
| பொருளாளர்:- | செல்வன். வே. சிவாகரன் |
| இதழாசிரியர்:- | செல்வன். இ. அருள்வேல் |
| விளம்பரக் குழு:- | செல்வன். செ. ரவிதரன்<br>செல்வன். ம. சுரேஸ்வரசர்மா |
| உதவிச் செயற்குழு:- | செல்வன். தி. வாகீசன்<br>செல்வி. மு. சுயந்தா<br>செல்வன். கு. கனகேஸ்வரன்<br>செல்வி. அ. கௌசல்யா<br>செல்வன். சி. சிவரஞ்சன்<br>செல்வி. ஜெ. தீபாஷினி<br>செல்வன். க. சந்திரசேகரன்<br>செல்வி. இ. சுவர்ணா<br>செல்வி. சு. தீபா<br>செல்வி. நா. அகல்யா |



LIBRARY
...AVAKACHCHERI HINDU...

இருப்பவர்கள் - இடமிருந்து வலமாக:-
செல்வி. வா. கதிரேசு, திருமதி. சி. சுந்தரமூர்த்தி, செல்வன். வே. சிவாகரன் (பொருளாளர்), திரு. ந. பாலச்சந்திரன், திரு வே. கந்தசாமி, செல்வன். பி. தோமஸ் எடிசன் (செயலாளர்), திரு. ம. அருணாசலம் (துணைஅதிபர்), செல்வன். ஞா. இன்பகரன் (தலைவர்), திரு. க. சந்திரசேகரா (அதிபர்), திரு. செ. சபாரத்தினம் (மேலதிக துணை அதிபர்), திரு. த. பாலகிருஸ்ணன், திரு. த. இரத்தினம், திரு. க. பத்மகாந்தன் (மன்றப் பொறுப்பாசிரியர்)

முதலாம் வரிசையில் நிற்பவர்கள் - இடமிருந்து வலம்:-
செல்வன். சி. சிவறஞ்சன், செல்வி சு. தீபா, செல்வி. நா. அகல்யா, செல்வி. மு. சயந்தா, செல்வி. அ. கௌசல்யா, செல்வி ஜெ. தீபாஷினி, செல்வி. இ. சுவர்ணா, செல்வன். க. தனுராஜ்

இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள் - இடமிருந்து வலம்;-
செல்வன். தி. வாகீசன், செல்வன். இ. அருள்வேல் (இதழாசிரியர்), செல்வன். கு. கனகேஸ்வரன், செல்வன். நி. சயந்தன், செல்வன். செ. ரவிதரன்

சமூகமளிக்காதோர்:-
திருமதி. க. பாலசுப்பிரமணியம், திருமதி. இ சந்திரதேவன், திருமதி. க. இராதாகிருஸ்ணன், செல்வி. இ. முருகுப்பிள்ளை, திருமதி. எம். கணேசன், திருமதி. என். சிவராம், செல்வன். ம. சுரேஸ்வரசர்மா, செல்வன். க. சந்திரசேகரன்

மீண்டும் ஒரு முறை

## "இந்து வணிகன்"

தித்திக்கும் வண்ணம் புதுவொளியாய்
திலங்கிடும் எங்கள் இந்து அன்னை
எப்பேறு பெற்றதோ அதன் பெயர்
எங்கெங்கும் எதிரொலியாய் ஒலிக்க
அதன்தன் உதிபரோடாசிரியர்கள்
அகிலத்து அனைவரதும் ஒத்துழைப்பால்
வர்த்தகத்துறை வானுயர்ந்திட
வந்தனர் நல்வரவுடன் புது அணியினர்
ஆழமான சிந்தனையை தூண்டி
அமுத ஊற்றாக விளங்கும் ''வணிகனை''
நூலாக்கி நற்றமிழ் உலகுக்கு
நல்க வேண்டும் எனும்
நல்லெண்ணம் பலருள் குடிகொள்ள
இறங்கினர் செயற்கரிய செயற்பாட்டில்
இறையருள் துணை கொண்டு
தொண்ணூற்றுனாலில் சஞ்சிகையாக்க
தொகையாய் நிதிவழங்கியோர் வாழ்கவே
வர்த்தக பெருந்தகைகள் பலரும்
வாரி வழங்கிய பெருநிதியை
நானிலம் இருக்கும் வரை
நாமனைவரும் என்றும் மறவோம்
கற்றோர் வல்லோர் மற்றோர் செய்நன்றியால்
கட்டுரைகள் பல தன்னுள் அடக்கி
அழகிய விளம்பரங்களையும் அகத்துள்
ஆங்காங்கே காட்டி நிற்கும்
''வணிகன்'' பாரிலுள்ளோர்க்கு
வாண்மையுடன் ஒளிதந்து
மாபெரும் கல்விக் களஞ்சியமாய்
மாணவர் சமுதாயத்துக்கு
ஆண்டாண்டு காலமாக
ஆலமர விழுதுகளாய் நிலைத்து
சித்தனை ஒளியூட்டிட
சிறந்திடுக வளம்மிகு திருநாட்டினில்
கண்டது கற்போர் களிகூர
காசினி யெங்கும் மலர்ந்து நிற்க
வருகிறான் மீண்டும் ஒரு முறை
''இந்து வணிகன்''
அவன் புகழ் ஓங்கி ஒலிக்கட்டும்
அவன் பெயர் நீடித்து நிலைக்கட்டும்
இனிதான அறிவுப் பொக்ஷமாய்
இங்குள்ளோருக்கு பயன்படட்டும்.

செல்வன். பீ. தோமஸ் எடிசன்
வர்த்தகப் பிரிவு
ஆண்டு 94 C II

# நிதிப்பாய்ச்சல் கூற்று (FUNDFLOW STATEMENT)

க. யோகநாதன்
உதவி விரிவுரையாளர்
வணிக முகாமைத்துவ துறை
கலைப்பீடம்-யாழ் பல்கலைக் கழகம்.

**வரைவிலக்கணம்:**

ஒரு நிறுவனத்தின் நிதியானது எவ்வாறு உள்ளே வந்தது அதாவது உட்பாய்ச்சல் இடம் பெற்றது என்பதையும் அவ்வாறு பெறப்பட்ட நிதி எவ்வாறு பிரயோகிக்கப் பட்டது என்பதையும் வெளிகாட்டும் ஒரு கூற்றே நிதிப்பாய்ச்சல் கூற்றாகும்.

மறுவளமாகக் கூறின் நிதியினது மூலங் களையும், பிரயோகத்தினையும் சேர்த்து வெளிப்படுத்தும் ஒரு கூற்றே இதுவாகும்

**நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுவ தன் நோக்கம்:**

1) முதலீட்டுத் திட்டத்திற்கும் மூலதன விரிவாக்கத்திற்கும் நிதி பெறப்பட்ட விதத்தைக் கூறுதல்.
2) நிறுவனத்தின் தொழிற்பாட்டினால் குறிப்பிட்ட காலத்தில் உருவாக்கப் பட்ட நிதியை வெளிப்படுத்தல்.
3) பங்கு மீட்புக்களுக்கும், தொகுதிக்கடன் மீட்புக்கும் நிதி பெறப்பட்ட வழியை தெளிவு படுத்தல்.
4) பங்கு வழங்கல்தொகுதிக்கடன் வழங்கல் என்பவற்றின் மூலம் நிதி திரட்டப்பட்ட தாயின் அதுபற்றிய விபரத்தைக் கூறல்.
5) தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்கல்
6) நிலையான சொத்து மாற்றத்தை எடுத்துரைத்தல்.
7) கடன் நிலைமைகளை வெளிப்படுத்த லும் மாற்றத்தை இனங்காண உதவுத லும்.
8) இலாப நிலைமைகளை எடுத்துவிளக்கல்

இலங்கைக் கணக்கீட்டு நியமனம் 09 (SLAS-9) இன்படி நிதிப்பாய்ச்சல் கூற்றா னது வருமானக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் தயாரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப் படுகின்றது.

**நிதிப்பாய்ச்சல் கூற்றினது பிரதி கூலங்கள்:**

1) விபரமான, தெளிவான விபரங்கள் இடம் பெறாமல் நிதிமூல நிதிப் பிரயோ கங்களே காட்டப்பட்டுள்ளன.
2) பெறுமானத்தேய்வு ஒரு நிதியற்ற அசைவு என சுட்டிக் காட்டப்படுவது அது ஒரு நிதிமூலம் என்ற பிரமையை ஏற்படுத்துகின்றது.
3) முகாமையின் இறுதித் தீர்மானங்கள் திருத்தத்திற்கு உட்படுத்தப்படுவது போன்ற பிரச்சினைகள் தோன்றலாம்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 09 இன்படி ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டி னால் பெறப்பட்ட நிதி அல்லது பிரயோகிக் கப்பட்ட நிதி, அந்நிறுவனத்தின் பிற நிதி மூலகங்கள், பிரயோகங்கள் என்பவற்றில் இருந்து புறம்பாகக் காட்டப்படல் வேண்டும் எனவும் நிறுவனத்தின் வழமையான கருமங் களுடன் சம்பந்த மில்லாத வழமைக்கு முரணான விடயங்கள் தனியாகக் காட்டப் படல் வேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

நிதிப்பாய்ச்சல் கூற்றானது நிதி ஆய்வா ளர்களாலும், முகாமையாளர்களாலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு நிதி ஆய்வாளரால் கேட்கப்படக் கூடிய பின் வரும் வினாக்களுக்கு நிதிப்பாய்ச்சல் கூற்றி னைப் பயன்படுத்தி விடையளிக்க முடியும்.

1) தேறிய வருமானம் அதிகரித்துள்ள போதும் ஏன் தொழிற்படுமூலதனம் குறைந்துள்ளது? அல்லது இதற்கு எதிர்மாறாக.
2) நடைமுறை ஆண்டின் தேறிய இலாபத்திற்கு மேலதிகமாக (OR நட்டமேற்பட்டுள்ள போது) பங்குலாபம் வழங்குவது எவ்வாறு சாத்தியமாயிற்று?
3) மூலதனச் செயற்திட்டங்களுக்கு எவ்வாறு நிதி பெறப்பட்டது.
4) தொகுதிக் கடங்கள் OR முன்னுரிமைப் பங்குகள் எவ்வாறு மீட்கப்பட்டன?
5) நிலையான சொத்து விற்பனை நிதி எவ்வாறு பிரயோகப்பட்டது?
6) தொழிற்படு மூலதன அதிகரிப்பிற்கு எவ்வாறு நிதியளிக்கப்பட்டது?
7) இலாபம் மூலம் பெறப்பட்ட நிதி எங்கு சென்றது?
8) பங்குகள், தொகுதிக்கடன்கள் வழங்கலின் மூலம் அல்லது நீண்டகாலக் கடன்கள் மூலம் பெறப்பட்ட நிதி என்ன தேவைக்கு பயன் படுத்தப்பட்டது.

நிதி மூலகங்களாவன:

1) இலாபம்
2) நிலையான சொத்து விற்பனை
3) மேலதிக மூலதனம், (காசுக்குப் பங்கு வழங்கல் தொகுதிக்கடன் வழங்கல்)
4) வருமதியாளர் குறைவடைதல்
5) இருப்பு குறைதல் OR விற்பனை
6) சென்மதியாளர் அதிகரிப்பு
7) கடன் பெறல்

நிதிப் பிரயோகங்களாவன

1) நட்டம்
2) நிலையான சொத்துக் கொள்வனவு
3) பற்று/பங்கு, தொகுதிக்கடன் மீட்டல்
4) வருமதியாளர் அதிகரித்தல் / இருப்பு அதிகரித்தல்
5) கொள்வனவுகள்
6) சென்மதியாளர் குறைவடைதல்
7) கடன் திருப்பிச் செழுத்துதல்
8) வரி, பங்கு இலாபம் செலுத்துதல்

நிறுவனத்தின் நிதி நிலைமையை தெளிவு படுத்தக் கூடிய வகையில் இரு கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

I நிதிப்பாய்ச்சல் கூற்று
Fundflow Statement:

இது மேற்காட்டிய விளக்கங்களையும் அட்டவணை I, அட்டவணை II ஆகியவற்றில் தரப்படும் மாதிரி வடிவத்தையும் உடையது.

II காசுப்பாய்ச்சல் கூற்று
Cashflow Statement:

இது நிறுவனத்தின் காசு வரவுகளையும் காசு வெளியேற்றத்யைும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுவதாகும் காசுப் பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தப்படும் இலாப மானது ''காசு இலாபம்'' ஆகும் ஏனைய நிதிமூலங்கள் பிரயோகங்கள் என்பன நிதிப்பாய்ச்சல் கூற்றில் இடம்பெறுவதைப்போன்றே இருக்கும் நிதிப்பாய்ச்சல் கூற்றோடு ஒப்பிடுமிடத்து இது வேறுபட்டுக் காணப்படும் இது நிறுவனத்தின் திரவத் தன்மையை வெளிக்காட்டும் ஒருகூற்றாகும். இதற்கான மாதிரி வடிவம் அட்டவணை III இல் தரப்படுகின்றது.

* இலங்கைக் கணக்கீட்டு நியமம் 09 இன்படி (SALS-09) நிதிநிலை மாற்றம் பற்றிய கூற்றுக்களில் வழமைக்குப் புறம்பான விடயங்கள் புறம்பாகக் காட்டப்படும் போது அவற்றிலும் நடப்பு ஆண்டின் நிதி அசைவுடன் தொடர்பு படாதவிடயங்களை நீக்குவது தொடர்பான சிராக்கங்கள் இடம் பெறவேண்டும் எனக் கூறப்படுகின்றது.

※ SALS-09இன்படி நிறுவனத்தின் செயற்பாடுகள் மூலமான நிதி உருவாக்கம், நிதிப்பிரயோகம் என்பவற்றைக் காட்டுவதற்கு வேறுபட்ட முறைகள் பயன்படுத்தப்பட முடியும். ஆயினும் ஒவ்வொரு நிறுவனமும் அல்லது நிறுவனத் தொகுதியும் சூழ்நிலைக்கு ஏற்றதாக அதிகளவு தகவல்களை வழங்கத்தக்க விதத்தில் நிதிநிலை மாற்றம் பற்றிய கூற்றினை வெளியிடுவதில் பொருத்தமான தொரு வடிவத்தினை பின்பற்றுதல் வேண்டும்.

நிதிப்பாய்ச்சல் கூறானது பின்வரும் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

1) நிதிமூல பிரயோகக் கூற்று
Source and application of fund

2) நிதி அசைவுக் கூற்று
Novement of fnnds statement

3) நிதிநிலை மாற்றக் கூற்று
Statement of chasges ni financial position

இலாப நட்டக்கணக்கிலும் ஐந்தொகைகளிலும் காணப்படும் விபரங்களினைச் சுருக்கி வகைப்படுத்திய ஒரு அம்சமாகவே நிதிப்பாய்ச்சல் கூற்று கணப்படுகின்றது அது ஆரம்ப ஐந்தொகை இலாபநட்டக் கணக்கு இறுதி ஐந்தொகை என்பவற்றிற் கிடையிலான முக்கியமான தொடர்புகளைக் காட்டுவதாக அமைகின்றது.

''நிதி'' என்பதை இலங்கைக் கணக்கிட்டு நியமம் 9 பின்வருமாறு குறிப்பிடுகின்றது அதாவது காசும் காசுக்குச் சமனானவை அல்லது தொழிற்படு மூலதனம் எனக் குறிப்பிடுகின்றது.

நிதிப்பாய்ச்சல் கூற்றின் அனுகூலங்கள்

1) நிதி அசைவுகளை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எவ்வாறு ஏற்பட்டது என்பதை அறியலம்

2) நிதிப்பற்றாக்குறை மேஜதிக நிதியீட்டம் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளலாம்

3) எதிர்காலத் திட்டங்களை நிதிப்பற்றாக்குறை ஏற்படாதவாறு திட்டமிட முடியும்

4) எதிர்காலத்திற்குத் தேவையான தொழிற்படுமுதலை அறிந்து கொண்டு அதற்கேற்றபடி திட்டங்களைத் தீட்டலாம்.

5) நிறுவனத்தின் கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலைமையினை கடன்கொடுத்தோர் கடன்பட்டோர் ஆகியோரை மையமாக வைத்து அறியலாம்

X எனும் நிறுவன மொன்றின் நிதிப்பாய்ச்சல் கூற்றினது மாதிரி வடிவம் அட்டவணை I

19XX இல் முடிந்த வருடத்திற்கான X கம்பனியின் நிதிப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| உள்வாரி மூலம் | | 1 |
| வரிக்கு முந்திய வியாபாரஇலாபம் | | XXX |
| (+) நிதியற்ற அசைவு பெறுமானத்தேய்வு | | XX |
| தொழிற்பாட்டினால் உருவாக்கப்பட்ட நிதி. | | XXX |
| +) வெளிவாரி மூலங்கள் | | |
| பங்குவழங்கியது | XX | |
| தொகுதிக்கடன் வழங்கியது | XX | |
| நிலையான சொத்து விற்பனை | XX | |
| பெற்ற கடன் | XX | |
| | | XXX |
| —) பிரயோகங்கள் | | XXX |
| நிலையான சொத்து கொள்வனவு | XX | |
| கடன் செலுத்தியது | XX | |
| செலுத்திய பங்கிலாபம் | XX | |
| தொகுதிக் கடன் மீட்பு | XX | |
| செலுத்திய வருமான வரி | XX | |
| பங்கு மீட்பு | XX | XXX |
| | | XXX |
| தொழிற்படுமுதல் அதிகரிப்பு (குறைவு) | | |
| இருப்பு அதிகரிப்பு | XX | |
| வருமதியாளர் அதிகரிப்பு | XX | |
| வங்கி, காசு அதிகரிப்பு | XX | |
| கடன் கொடுத்தோர் அதிகரிப்பு | (XX) | XXX |
| | | XXX |

Y எனும் நிறுவனத்தின் நிதிப்பாய்ச்சல் கூற்றினது மாதிரிவடிவம்

அட்டவணை II

19xx இல் முடிந்த வருடத்திற்கான Y கம்பனியின் நிதிப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| **ஆரம்ப தொழிற்படு மூலதனம்** | | |
| இருப்பு | XX | |
| கடன்பட்டோர் | XX | |
| காசும் வங்கியும் | XX | |
| கடன் கொடுத்தோர் | (XX) | XXX |
| **(+) உள்வாரி மூலம்** | | |
| வரிக்கு முந்திய வியாபார இலாபம் | XXX | |
| (+) நிதியற்ற அசைவு: பெறுமானத் தேர்வு | XX | XXX |
| | | XXX |
| **(+) வெளிவாரி மூலங்கள்** | | |
| பங்கு வழங்கியது | XX | |
| தொகுதிக் கடன் வழங்கல் | XX | |
| நி. சொத்து விற்பனை | XX | |
| பெற்ற கடன் | XX | XXX |
| | | XXX |
| **(—) பிரயோகங்கள்** | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | XX | |
| செலுத்திய கடன் | XX | |
| பங்கு மீட்பு | XX | |
| தொகுதிக் கடன் மீட்பு | XX | |
| செலுத்திய வருமான வரி | XX | |
| செலுத்திய பங்கிலாபம் | XX | XXX |
| | | XXX |
| **இறுதித் தொழிற்படு முதல்** | | |
| இருப்பு | XX | |
| கடன் பட்டோர் | XX | |
| காசும் வங்கியும் | XX | |
| கடன் கொடுத்தோர் | (XX) | XXX |

19xx இல் முடிந்த வருடத்திற்குரிய Z கம்பனியின் காசுப் பாய்ச்சல் கூற்று. அட்டவணை III

| | | |
|---|---|---|
| ஆரம்ப காசு வங்கிமீதி | | XX |
| (+) உள்வாரி மூலம்: | | |
| வரிக்கு முந்திய வியாபார இலாபம் | XXX | |
| கடன் பட்டோர் (அதிகரிப்பு) குறைவு | (XXX) | |
| இருப்பு (அதிகரிப்பு) குறைவு | (XXX) | |
| கடன் கொடுத்தோர் அதிகரிப்பு (குறைவு) | XX | |
| பெறுமானத் தேய்வு | XX | |
| | | XXX |
| தொழிற்பாட்டினாலான காசு இலாபம் | | XXX |
| (+) வெளிவாரி மூலம்: | | |
| பங்கு வழங்கல் | XX | |
| தொகுதிக் கடன் வழங்கல் | XX | |
| நிலையான சொத்து விற்பனை | XX | |
| பெற்ற கடன் | XX | |
| | | XXX |
| | | XXX |
| (—) பிரயோகங்கள்: | | |
| நி. சொத்துக் கொள்வனவு | XX | |
| செலுத்திய கடன் | XX | |
| பங்கு மீட்பு | XX | |
| தொகுதிக் கடன் மீட்பு | XX | |
| வருமான வரி | XX | |
| பங்கு இலாபம் | XX | XXX |
| இறுதிக் காசு வங்கிமீதி | | XX |

"இந்து வணிகன்" இரண்டாவது மலர் சிறப்புடன்
வெளிவர எமது நல்லாசிகள்.

தரமான சுவையான

சிற்றுண்டி வகைகள்

பாண் பணிஸ் கேக்

ரொபி பிஸ்கட்

பாடசாலை உபகரணங்கள்

அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்

# நாதன்ஸ் கூல்
# அண்ட் கோப்பியார்

யாழ்வீதி ★ சங்கத்தானை ★ சாவகச்சேரி.

"இந்து வணிகன்" மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்

சகல விதமான மளிகை பொருட்களையும்

ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்.

# சிவா றேடிங்கோ

டச்சுவீதி, ★ சாவகச்சேரி.

உலக வியக்க விளங்கி நிற்கும் வர்த்தக மணம் பரப்பி
மாணவர் உலகிற்கு வளம் கிடைக்க வரு விருந்தே
இந்து வணிகனே வாழ்க!

# ஆர். பி. என்.
# அரிசி ஆலை

யாழ்வீதி, சாவகச்சேரி.

எங்கள்

## விளம்பரதாரர்களை

## ஆதரியுங்கள்

உயர்தர வர்த்தக மாணவர் மன்றம்.
சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

LIBRARY
CHAVAKACHCHERI HINDU COLL

# வியாபார நோக்கமற்ற தாபன கணக்குகள்

செல்வன் வே. சிவாகரன்
வர்த்தகப்பிரிவு 94

அங்கத்தவர்களுக்கும் சமூகத்திற்கும் சேவையை வழங்குவதைநோக்கமாகக்கொண்டும் இலாபம் உழைக்கும் நோக்கம் அற்றும் உருவாக்கப்படும் தாபனங்கள்வியாபார நோக்கமற்ற அல்லது இலாப நோக்கமற்ற தாபனங்கள் என அழைக்கப்படும்

உதாரணமாக:-

சமூகமுன்னேற்ற சங்கங்கள்

சனசமூக நிலையங்கள்

இவ்வகைத் தாபனங்களின் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான செயற்பாடுகளை அறியும் பொருட்டு சில கணக்குகள் அல்லது கணக்கு ஏடுகளை பராமரித்து வருகின்றன இவ்வகையாக இவை பராமரிக்கும் கணக்கு ஏடுகளாவன.

- ஆரம்ப நிதி நிலைமைக் கூற்று
- கொள்ளல் கொடுத்தல் கணக்கு
- சந்தாக் கணக்கு
- வருமான செலவின கணக்கு
- நோக்கத்திற்கு புறம்பான கணக்கு
- இறுதி நிதி நிலைமைக் கூற்று

## ஆரம்ப நிதி நிலமைக் கூற்று

சேவையை நோக்கமாகக் கொண்ட தாபனங்கள் தொடர்ந்து இயங்கிவருகின்ற பட்சத்தில் குறித்த நிதி வருட ஆரம்பத்தில் தாபனத்தில் காணப்படும் சொத்துக்கள் பொறுப்புக்களை ஒப்பீடு செய்து ஆரம்ப திரண்ட முதலை அல்லது திரண்ட நிதியை கணிப்பீடு செய்ய தயாரிக்கப்படும் கூற்று ஆரம்ப திரண்ட நிலமைக் கூற்று என அழைக்கப்படும்.

இத்திரண்ட நிதி ஆனது அங்கத்தவ சந்தாப் பணமாகவோ அன்பளிப்புகள் நன்கொடைகள் மூலமோ பெறப்பட்டு காணப்படலாம்.

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு /பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு RECEIVE AND PAYMENT ACCOUNTS

சேவையை நோக்கமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்கள் குறிப்பிட்ட நிதி ஆண்டு காலத்தில் இடம் பெறும் காசு பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் பதியப்பயன்படுத்தும் ஏடு இதுவாகும்.

இது இலாப நோக்கமுள்ள நிறுவனங்களால் தயாரிக்கப்படும் காசுக்கணக்கைப் போன்றது காசுப்பெறுவனவுகள் கொள்ளல் பக்கத்திலும் காசுக் கொடுப்பனவுகள் கொடுத்தல் பகுதியிலும் பதியப்படும்.

## சந்தாக் கணக்கு/ஒப்பப்பணக் கணக்கு/ உறுப்புரிமைக் கணக்கு / அங்கத்துவ கட்டண கணக்கு

சேவையை நோக்கமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்கள் தமது இயக்கும் செலவுகளை மேற்கொள்ளவும் உறுப்புரிமையை மதிப்பளித்து கட்டுப்படுத்தவும் அங்கத்தவர்களிடம் இருந்து மாதாந்தம் அல்லது வருடாந்தம் அறவிடும் கட்டணம் சந்தா ஆகும்.

இச் சந்தாக்கணக்கு ஆனது நிறுவனங்களால் இருவழிகளில் தயாரிக்கப்பட்டு அல்லது பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. அவை,

காசு அடிப்படையிலான சந்தாக் கணக்கு அட்டுறு அடிப்படையிலான சந்தாக் கணக்கு என்பனவாகும்.

இங்கு காசு அடிப்படையிலான சந்தா கணக்கு எனும்போது காசு பெறப்பட்ட உறுப்புரிமை மட்டும் கணக்கில் கொள்ளப் படும் பெறவேண்டிய சந்தா உறுப்புரிமை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

அட்டுறு அடிப்படையிலான சந்தாக் கணக்கு ஆனது இவ்வாண்டில் பெற்ற சந்தாவுடன் பெறவேண்டிய சந்தா சேர்க்கப்பட்டும் முற்பண சந்தா விலக்கப்பட்டும் இம் முறையில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

## வருமான செலவின கணக்கு INCOME AND EXPENDITURE ACCOUNT

சேவையை குறிக்கோளாகக் கொண்டு இயங்கிவரும் நிறுவங்களால் குறித்த நிதியாண்டில் செயற்பாடுகளின் விளைவால் வரவிலும் கூடிய செலவா அல்லது செலவிலும் கூடிய வரவா என்பதை அறிந்துகொள்வதற்கு இவ் ஏடு பேணப்பட்டு வரப்படுகின்றது.

இங்கு நிறுவனத்திற்கு கிடைத்த வருமானங்கள் பிற இலாபங்கள் வருமான செலவு கணக்கின் செலவிலும் செலவினங்கள் பிற நட்டங்கள் வருமானச் செலவு கணக்கில் வரவிலும் பதியப்பட்டு இது துணியப்படும் இக் கணக்கு ஆனது சாதாரண இலாப நட்டக் கணக்கைப் போன்றதாகும்.

## நோக்கத்திற்கு புறம்பான கணக்கு

சேவையை நோக்கமாக கொண்டு இயங்கும் நிறுவனங்கள் சிலவேளைகளில் அங்கத்தவர் நலன் கருதி சிறிய வர்த்தக முயற்சிகளில் ஈடுபடலாம் அவ்வாறு ஈடுபடுமானால் அவ்வகை வர்த்தக இலாபம் அல்லது நட்டத்தை அறிய தயாரிக்கப்படும் கணக்குகளை இது குறிக்கும்

உதாரணம்:- சிற்றுண்டிசாலை
மதுபானசாலை

என்பவற்றை நடாத்தும் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் வியாபாரக் கணக்கு இலாப நட்டக் கணக்கு போன்றவற்றைக் குறிக்கும்

## இறுதி நிலவரக் கூற்று

சேவையை நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் நிறுவனங்கள், குறித்த நிதியாண்டு செயற்பாட்டால் நிறுவனத்தில் ஏற்பட்ட மாற்றங்களை சொத்துப் பொறுப்புப் பக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களை வெளிக்காட்டும் முகமாக தயாரிக்கப்படும் கூற்று இறுதி நிலவரக் கூற்று ஆகும் இது நிதியாண்டு முடிவில் இவ் நிறுவனங்களால் தயாரிக்கப்படும்.

எனவே வியாபார நோக்கமற்ற தாபனங்கள் தமது செயற்பாட்டின் இறுதி விளைவை அறிந்து கொள்ள அல்லது தெரிந்து கொள்வதற்கு இக் கணக்குகள் பெரிதும் உதவுவன வாகக் காணப்படுகிறது.

## வியாபார நோக்கமற்ற நிறுவனக் கணக்குகள் தொடர்பான சில குறிப்பேட்டுப் பதிவுகள்

1. சந்தாவைக் காசாகப் பெறும் போது
   - கொள்ளல் கொடுத்தல் கணக்கு — வரவு
   - சந்தாக்கணக்கு — செலவு
2. சந்தாவை முற்பணமாகப் பெறும்போது
   - கொள்ளல் கொடுத்தல் கணக்கு — வரவு
   - முற்பணசந்தாக் கணக்கு — செலவு

KARACHCHERI HINDU COLLEGE

3. சந்தா வருமதியாக உள்ள போது
 வருமதி சந்தாக் கணக்கு வரவு
 சந்தாக் கணக்கு செலவு

4. செலவினங்கள் காசாக ஏற்படும் போது
 உரிய செலவினக் கணக்கு வரவு
 கொள்ளல் கொடுத்தல் கணக்கு செலவு

5. வருமானங்களைக் காசாகப் பெறும் போது
 கொள்ளல் கொடுத்தல் கணக்கு வரவு
 உரிய வருமானக் கணக்கு செலவு

குறிப்பு:- 1 வருமானங்களோ செலவினங்களோ உரியஏடுகளுக்கு ஏற்றவாறு மாற்றப்படும்

உ + ம்;- கொள்வனவு மதுபானம் 500 ரூபா ஆயின்
 கொள்வனவு கணக்கு / வியாபாரக் கணக்கு வரவு 500
 கொள்ளல் கொடுத்தல் கணக்கு செலவு 5000

 2 வாடகை 500 ரூபா கொடுக்கப்படின்
 வாடகைக் கணக்கு / வருமானச் செலவினக் கணக்கு வரவு 500
 கொள்ளல் கொடுத்தல் கணக்கு செலவு 500

குறிப்பு:- 2 நன்கொடைகள் பெறப்படும் போது அதன் பெறுமதி 5000 ரூபாவிற்கு கீழ்ப் படின் வருமான செலவின கணக்கிலும் மேற்படின் நிதி நிலமைக் கூற்றிலும் வெளிக்காட்டப்படும்.

பயிற்சி:-

அபர்ணா விளையாட்டுக்கழகத்தில் 300 உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கின்றார்கள் இவர்கள் வருடாந்தம் 50 ரூபா சந்தா செலுத்தி வருகின்றனர் இவ்விளையாட்டுக் கழகத்தின் நிதியாண்டு ஜனவரி 1தொடக்கம் டிசம்பர் 31வரையாகும். 01 - 01 - 1993 இல் இவ் விளையாட்டுக்கழகத்தில் காணப்பட்ட மீதிகள் வருமாறு.

| | |
|---|---|
| விளையாட்டு உபகரணம் | 10000/- |
| உறுப்பினர் தளபாடம் | 22000/- |
| சரக்கிருப்பு மதுபானசாலை | 5000/- |
| முற்பண சந்தா | 1700/- |
| வருமதி சந்தா | 1450/- |
| வியாபார வழங்குனர் | 3000/- |
| காசு | 4650/- |

விளையாட்டு கழகத்தின் நிகழாண்டுக் காலத்தின் காசுக் கொடுக்கல் வாங்கல்கள்

| | | | |
|---|---|---|---|
| சந்தா | 93 | 13100/- | |
| | 92 | 1400/- | |
| | 93 | 1150/- | 15650/- |

| | |
|---|---|
| மதுபானசாலை வருமானம் | 54630/- |
| மதுபானசாலை கொள்வனவு | 39400/- |
| வாடகை செலுத்தியது | 3250/- |
| பழைய பத்திரிக்கை விற்பனை | 350/- |
| மதுபானசாலை கூலி | 7550/- |
| தொலைபேசி கட்டணம் | 4500/- |
| எழுது கருவி காகி தாகி | 2200/- |
| பிரவேச கட்டணம் | 300/- |
| நன்கொடை பெற்றது | 6000/- |
| வியாபார வழங்குனருக்கு வழங்கியது | 1800/- |
| விளையாட்டு உபகரண கொள்வனவு | 7250/- |
| 10 - 07 - 93 இல் 5% முதலீடு | 4000/- |

விளையாட்டுக் கழகத்தின் 31 - 12 - 93 இல் காணப்படும் விபரங்கள்

| | |
|---|---|
| விளையாட்டு உபகரணம் | 16500/- |
| உறுப்பினர் தளபாடம் | 20250/- |
| சரக்கிருப்பு | 4750/- |
| கணக்காய்வுக் கட்டணம் | 3000/- |

சிறப்பாகக் கூறாத விடத்து செலவினங்களும் வருமானங்களும் காசாக எழுந்தன எனக்கொண்டு விளையாட்டுக் கழகத்தின் 31 - 12 - 1993 இல் முடிவுற்ற ஆண்டில் காணப் படுகின்றவாறு பின்வரும் ஏடுகளை தயாரிக்குமாறு கேட்கப்படுகிறீர்.

கொள்ளல் கொடுத்தல் கணக்கு

சந்தாக் கணக்கு

வருமான செலவின கணக்கு

நோக்கத்திற்கு பிறம்பான கணக்கு

நிதிநிலமைக் கூற்றுக்கள்

### சந்தாக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வருமான செலவீனக் க/கு | 15000 | கொள்ளல் கொடுத்தல் க/கு | 13100 |
| | | முற்பண சந்தா க/கு | 1700 |
| | | வருமதி சந்தா க/கு | 200 |
| | 15000 | | 15000 |

### முற்பண சந்தாக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சந்தாக் க/கு | 1700 | மீதி / கீ / கொ / வ | 1700 |
| மீதி / கீ / கொ / செ | 1150 | கொள்ளல் கொடுத்தல் க / கு | 1150 |
| | 2850 | | 2850 |
| | | மீதி / கீ / கொ / வ | 1150 |

### வருமதி சந்தாக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி / கீ / கொ / வ | 1450 | கொள்ளல் கொடுத்தல் க / கு | 1400 |
| சந்தாக் க / கு | 200 | மீதி / கீ / கொ / செ | 250 |
| | 1650 | | 1650 |
| மீதி / கீ / கொ / வ | 250 | | |

### விளையாட்டு உபகரணக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி / கீ / கொ / வ | 10000 | பெறுமானத்தேய்வு | 750 |
| கொள்ளல் கொடுத்தல் க / கு | 7250 | மீதி / கீ / கொ / செ | 16500 |
| | 17250 | | 17250 |
| மீதி / கீ / கொ / வ | 16500 | | |

### 01 - 01 - 1993 இல் அபர்ணா விளையாட்டுக் கழகத்தின் நிதி நிலமைக்கூற்று

| பொறுப்பு | தொகை | சொத்து | தொகை |
|---|---|---|---|
| திரண்டநிதி | 38400 | நிலையான சொத்து | |
| | | விளையாட்டு உபகரணம் | 10000 |
| நடைமுறை பொறுப்பு | | உறுப்பினர் தளபாடம் | 22000 |
| | | நடைமுறை சொத்து | |
| முற்பணசந்தா | 1700 | சரக்கிருப்பு மதுபானசாலை | 5000 |
| | | வருமதி சந்தா | 1450 |
| வியாபார வழங்குனர் | 3000 | காசு | 4650 |
| | 43100 | | 43100 |

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீதி / கீ / கொ / வ | 4650 | மதுபாவசாலை கொள்வனவு | 39400 |
| சந்தா 92 - 1400 | | வாடகை | 8250 |
| 93 - 13100 | | தொலைபேசி | 4500 |
| 94 - 1150 | 15650 | எழுதுகருவி காசிதாதி | 2200 |
| மதுபானசாலை வருமானம் | 54630 | மதுபானசாலை கூலி | 7550 |
| பழைய பத்திரிகை விற்பனை | 350 | வியாபார வழங்குனர் | 1800 |
| பிரவேச கட்டணம் | 300 | விளையாட்டு உபகரண கொள்வனவு | 7250 |
| நன்கொடை | 6000 | 5% முதலீடு | 4000 |
| 5% முதலீட்டு வருமானம் | 100 | மீதி / கீ / கொ / செ | 6750 |
| | 81680 | | 81680 |
| மீதி / கீ / கொ / வ | 6730 | | |

அபர்ணா விளையாட்டுக்கழக மதுபானசாலை வியாபார கணக்கு 01 - 01 - 93 தொடக்கம் 31 - 2 - 93 வரை

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 5000 | விற்பனை வருமானம் | 54630 |
| கொள்வனவு | 39400 | | |
| | 44400 | | |
| கூலி | 7550 | | |
| மொத்த சரக்கின் கிரயம் | 51950 | | |
| இறுதி இருப்பு | (4750) | | |
| விற்ற சரக்கின் கிரயம் | 47200 | | |
| வியாபார இலாபம் | 7430 | | |
| | 54630 | | 54630 |

## அபர்ணா விளையாட்டுக்கழகத்தின் வருமான செலவின கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| வாடகை | 8250 | சந்தா கணக்கு | 15000 |
| தொலைபேசி | 4500 | பழைய பத்திரிகை விற்பனை | 350 |
| எழுதுகருவி காகிதாதி | 2200 | பிரவேச கட்டணம் | 300 |
| விளையாட்டு உபகரண தேய்வு | 750 | 5% முதலீட்டு வருமானம் | 100 |
| உறுப்பினர் தளபாட தேய்வு | 1750 | மதுபானசாலை வருமானம் | 7430 |
| கணக்காய்வுக் கட்டணம் | 3000 | | |
| செலவிலும் கூடிய வரவு | 2730 | | |
| | 23180 | | 23180 |

## 31 - 12 - 1993 இல் முடிவுற்ற திகதியில் அபர்ணா விளையாட்டுக்கழகத்தின் நிதி நிலமை கூற்று

| பொறுப்பு | தொகை | தொகை | சொத்து | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| திரண்ட நிதி | | 38400 | நிலையான சொத்து | | |
| செலவிலும்கூடியவரவு | | 2730 | விளையாட்டு உபகரணம் | 17250 | |
| | | 41130 | (—) பெறுமானத் தேய்வு ஏற்பாடு | (750) | 16500 |
| நன்கொடை | | 6000 | உறுப்பினர் தளபாடம் | 22000 | |
| நடைமுறை பொறுப்பு | | | (—)பெமானத்தேய்வு ஏற்பாடு | (1750) | 20250 |
| வழங்குனர் | 1200 | | 5% முதலீடு | | 4000 |
| முற்பண சந்தா | 1150 | | நடைமுறை சொத்து | | |
| சென்மதிகணக்காய்வு கட்டணம் | 3000 | 5350 | இறுதி சரக்கு | 4750 | |
| | | | வருமதி சந்தா | 250 | |
| | | | காசு | 6730 | 11730 |
| | | 52480 | | | 52480 |

# இலங்கை கணக்கீட்டு நியமங்கள். (S. L. A. S)

ந. கதிரமலை
வர்த்தகப்பிரிவு
ஆண்டு 94 C 11

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்படுவதும், தொடர்புடைய அமைப்புக்களால் பின்பற்றப்பட வேண்டியதும் வளர்ச்சியினால் நாளாந்த மாற்றத்துக்கும் உள்ளாகக்கூடிய கணக்கீட்டு கொள்கைகள், நிபந்தனைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் எனப்படும்.

இந்த வகையில் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் இறுதியாக முன்வைக்கப்பட்ட கணக்கியல் நியமம் 31 பற்றி சில குறிப்புக்கள் தரப்படுகின்றன.

இலங்கை கணக்கீட்டு நியமம் 31
(Sri Lanka Accounting Standard 31)

கூட்டு முயற்சியாளரின் நிதியறிக்கைகள் தயாரித்தல்
(Financial Reporting of interests in Joint Ventures)

இந் நியமத்தில் கூட்டு முயற்சியாளர் தமது முடிவுக்கணக்குகளை தயாரிக்கும் போதும், சமர்ப்பிக்கும் போதும் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றி கூறப்படுகின்றது.

கூட்டு முயற்சி (Joint Venture)
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூட்டு அதிகாரத்தினால் ஓர் தற்காலிக பொருளாதார நடவடிக்கைக்காக ஓர் முயற்சியை ஒப்பந்த அடிப்படையில் நடாத்துதல் எனக் கூறப்படுகின்றது.

அதிகாரம் (Control)
பொருளாதார நடவடிக்கையினால் நன்மைகளைப் பெறுவதற்காக, நிதிச் செயற்பாட்டு கொள்கைகளை ஆளுகை அதிகாரம் எனப்படுகிறது.

கூட்டு அதிகாரம் (Joint Control)
பொருளாதார நடவடிக்கையை ஒப்பந்த அடிப்படையில் பங்கீடு செய்தல் எனக் கூறப்படுகின்றது.

முக்கியமானதாக்கம் (Significant Intduence)
அதிகாரமோ, கூட்டு அதிகாரமோ அற்ற ஆனால் ஒரே பொருளாதார நடவடிக்கைகட்கு நிதி அல்லது செயற்பாட்டுத் தீர்மானங்களில் பங்கு கொள்ளவல்ல வலு எனக் கூறப்படுகின்றது.

முயற்சியாளன் (Venturer)
கூட்டு முயற்சியில் கூற்று அதிகாரம் உள்ள ஒரு கட்சியினர் எனக் கூறப்படுகின்றது.

முதலீட்டாளர் (Invester)
கூட்டு முயற்சியில் கூட்டு அதிகாரம் அற்று கூட்டு முயற்சியில் பங்கு பற்றும் ஒருவர் எனக் கூறப்படுகின்றது.

கூட்டு அதிகார செய்கைகள்
(Jointly Controlles Operations)
ஒரு உற்பத்தியாளன் பல்வேறு பகுதிகளை ஒவ்வொரு கூட்டு முயற்சியாளனும் ஏற்று செலவுகளை தாமே மேற்கொண்டு ஏற்படும் இலாபத்தில் ஒரு பங்கினை பெறல் எனக் கூறப்படுகின்றது.

உதாரணமாக:-

விமான உற்பத்திக் கூட்டு முயற்சியில் ஒவ்வொரு உதிரிப்பாகங்களையும் ஒவ்வொரு முயற்சியாளர் வழங்குதல்.

LIBRARY
KARAKACHCHERI HINDU COLL...

கூட்டு அதிகாரத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் (Jointly Controlles Assets)

ஒரு கூட்டு முயற்ச்சியை நடாத்த கூட்டு முயற்ச்சியாளர் ஒன்று சேர்ந்து செலவு செய்து உருவாக்கும் சொத்து எனக் கூறப்படுகின்றது.

உதாரணமாக;-

I எண்ணை வினியோகிக்க மூன்று நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து எண்ணைக் கால்வாய் அமைத்தல்.

II கூட்டு முயற்சியை நடாத்த கட்டிடம், பொறிபோன்றவற்றை கூட்டாக அமைத்தல்.

## கணக்குகள் தயாரித்தல் என்ற வகையில்

✣ கூட்டுமுயற்சிக்கென்று புறம்பான எவ் முடிவுக் கணக்குகளையும் தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் முகாமை அம் முயற்சியில் இருந்து பெறப்படும் பலாபலனை அறிய தீர்மானித்தால் செலவுகளையும்வருமானங்கும் கொண்டு இலாப நட்டக் கூற்று தயாரிக்கலாம்.

✣ கூட்டு முயற்ச்சியாளர் தமது முடிவுக் கணக்குகளைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.

1 கூட்டு முயற்ச்சியாளர் கூட்டு முயற்ச்சிக்கு சொத்துக்களை வழங்கியிருப்பின் அது உண்மையில் கூட்டு முயற்ச்சிக்கு உரிமை மாற்றப்பட்டிருப்பின் இதனால் மற்றைய கூட்டு முயற்ச்சியாளர் இழக்கும் தொகையை வழங்கியவர் தனது நிதிக் கூற்றில் இலாபமாகக் காட்ட வேண்டும்.

2 கூட்டு முயற்ச்சியாளர் கூட்டு முயற்சியில் இருந்து சொத்துக்களை பெறும் போது நட்டம் ஏற்படுமாயின் அதனை அவர் தனது நிதிக்கூற்றில் உடனடியாக பதிய வேண்டும். இலாபமாயின் அவர் அச்சொத்தை விற்ற பின்னரே இலாபமாக காட்ட முடியும்.

3 கூட்டு முயற்ச்சியை நடாத்த கூட்டு முயற்ச்சியாளர் கூட்டாக சொத்துக்களை உருவாக்கி இருப்பின் அதனை தத்தமது ஐந்தொகையில் சொத்தாகவோ அன்றி முதலீடாகவோ காட்டலாம். முதலீடாகக் காட்ட S. L. A. S 27 இடமளித்தாலும் சொத்தாககாட்டுவதே சிறந்ததாகும்.

## வெளிப்படுத்தல் என்ற வகையில்

1 கூட்டு முயற்ச்சியாளரின் கூட்டுமுயற்ச்சி சம்பந்தமான சொத்து, பொறுப்பு, செலவு, வருமானம் தெளிவாக அவர்களது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

2 சொத்துக்கள் கூட்டு முயற்சியாளரின் ஐந்தொகையில் அவற்றிற்கேற்ப தலையங்கப்படுத்தி வெளிப்படுத்தப்பட வேண்டும்.

3 பொறுப்பு என்ன வகையில் உள்ளது என்பது கூட்டு முயற்ச்சியாளரின் ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட இலங்கை கணக்கியல் நியமம் - 31 01 - 01 - 1993ல் இருந்து பின்பற்றப்பட வேண்டியதாகும்.

"இந்து வணிகனே" அறிவு சார் தகவலை தன்னகத்தே கொண்டு சிறப்புடன் வெளிவருக!!

சிற்றுண்டி வகைகள்
குளிர்பான வகைகள்
உணவு வகைகள்
சுவை மிக்க இனிப்பு வகைகள்
சுவைத்திட நாடுகள்!

# திருயோன் குளிர்பான நிலையம்

2. புதிய சந்தை ★ யாழ்வீதி ★ சாவகச்சேரி.

இந்து வணிகன் இரண்டாவது மலர் பொலிவுடன் சிறக்க எமது வாழ்த்துக்கள்

சகல விதமான பலசரக்கு பொருட்களையும்
நியாய விலையில்
பெற்றுக் கொள்ள
இன்றே நாடுங்கள்

# முருகன் களஞ்சியம்

யாழ்வீதி ● மீசாலை.

# அடிப்படைக் கணக்கியல் எண்ணக்கரு
# BASTC ACCOUNTING CONCEPTS

திரு. க. பாலகிருஷ்ணன் - *B. Com.*

பொருளாதார அலகு ஒன்றில் கணக்கீட்டு அறிக்கை தயாரிக்கையில் பின்பற்ற வேண்டிய ஆரம்ப நியதிகள், சட்டதிட்டங்கள், வழக்காறுகள் ஆகியன கணக்கியலின் எண்ணக்கருக்களும் முடிவுகளும் என அறிமுகம் ஆகின்றன; கணக்கியல் எண்ணக்கருக்களும் போதிய கருதுகோள் தொகுதிகளும் இல்லாவிடில் கணக்கீட்டு அறிக்கை தயாரிக்கப்படும் போது பல் வேறு சிந்தனைகள் தோன்றுவதற்கு இடம் ஏற்படலாம்.

தீர்வுகள், கணக்கியல் நிறுவனங்களும் கணக்கியல் நிபுணர்களும் ஏற்படுத்திக் கொள்ளும் விதிகளாகும். இவ்வாறான எண்ணக் கருக்களும் முடிவுகளும் முக்கியப் படுவது பொருளாதார அலகொன்றைத் தயார் செய்யும் நிதியறிக்கை பற்றிய வேறுபட்ட கொள்கைகளைத் தவிர்த்துக் கொள்ளவும், அதன் மூலம் ஒருமைத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளவும் தயாரித்துக் கொள்ளும் அறிக்கைகள் மூலம் காட்டப்படும் விஞ்ஞாபனத்தை உரிய கட்சிக்காரர் இலகுவாகப் புரிந்து கொள்ளவும், அதிலிருந்து முடிவுகளைப் பெறவும் ஏதுவாக இருக்கும்.

கணக்கியல் நிபுணர்களால் கணக்கீட்டு எண்ணக்கருக்களும் முடிவுகளும் பல்வேறு முறைகளில் விளக்கப்பட்டுள்ளன. அவ் எல்லா வகையான எண்ணக்கருக்களும் கணக்கு வைத்தலின் முக்கிய மூலாதாரங்களாகக் காட்ட முடியும். சில சமயங்களில் கணக்கியல் எண்ணக் கருக்களும் முடிவுகளும் நிலையற்ற தன்மைக்கான காரணம் பொருளாதார அலகின் இயல்பு அதன் நோக்கம் கணக்காளர்களின் அனுபவங்கள்! பரிச்சயங்கள் விஞ்ஞாபனத்தைப் பெறும் கட்சியாளரின் தேவைகளும், சட்டத் தேவைகளும் பொருளாதார சமூகக் காரணிகளால் வேறுபடுவதனால் ஆகும்; நிலையற்ற பொருளாதாரம் ஒன்றில் கணக்கியலானது நிலையற்ற விடயமாக அமைவது. இவ்வாறு வேறுபட்ட தன்மைக்கு ஏற்ப அமைவதனாலாகும். இதனால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு எண்ணக் கருக்கள் எதிர்காலத்தில் வேறுபடவும், புதிய எண்ணக் கருக்கள் தோன்றவும் முடியும். கணக்கீட்டு எண்ணக்கரு அமைப்புள் கணக்கியல் அறிவு இருக்க வேண்டியது எவ்வாறு? என்பவற்றை நிருபிக்கும் நிகழ்கால உபயோகத்தில் உள்ள கணக்கீட்டு எண்ணக் கருக்கள் பல கீழே தரப்பட்டுள்ளன.

1. வியாபார அலகுசார் எண்ணக்கரு
   Business Entry Concept
2. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
   Historical Cost Concept
3. கால எண்ணக்கரு
   Period Concept
4. பண அளவு எண்ணக்கரு
   Money Measurement Concept
5. தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு
   Geing Concern Concept
6. பாதுகாப்பு எண்ணக்கரு
   Conservatism Concept
7. வெளிப்படுத்தும் எண்ணக்கரு
   Disclosure Concept
8. அட்டுறு எண்ணக்கரு
   Accrued Concept
9. தேறிய அல்லது கைக்கெட்டிய எண்ணக்கரு Realization Conept

10. பொருள்சார் எண்ணக்கரு Materiality Concept

11. பழமை பேணும் எண்ணக்கரு Consistancy Concept

12. இரட்டை விளைவு எண்ணக்கரு Dual Aspect Concept

13. இணைத்தல் அல்லது செலவுகளை வருமானங்களோடு பொருந்த வைத்தல் Matching Concept

14. பணத்தின் உறுதித் தன்மை எனும் எடுகோள் Assumption of Stability of Currency

15 கணக்கீட்டு நடைமுறை / கணக்கியல் நியமம்

1. வியாபார அலகுசார் எண்ணக்கரு / தொழில் முழுமைக்கூற்று எண்ணக்கரு / கணக்கீட்டு உள்ளமை பற்றிய எண்ணக்கரு / ஆளுமை எண்ணக்கரு / தனிமனித எண்ணக்கரு. (Entity Concept)

இவ்வெண்ணக்கருவால் கருதப்படுவது, முயற்சி உடமையாளரிடம் இருந்து வேறாக்கப்பட்ட அலகு என்பதைக் கருது கோளாகக் கொண்டு கணக்கு வைத்தல் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதாகும். அல்லது நிறுவனத்துக்கு நிதியீட்டுபவரும் நிறுவனமும் இரு கூறுகளாக ஏற்பதாகும். கணக்கீட்டு உள்ளீடுகள் பதியப்படுவது நிறுவனத்தின் ஏடுகள் என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும் சட்டரீதியாக நோக்கும் போது தனியார் சொத்துவத்திலும் பங்குடமையிலும் அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து வேறுபட்ட ஒரு தன்மை நிலைமை இருப்பதாகக் கணக்கீட்டின் போது கருத்திற் கொள்ளப்படும் தனியார் சொத்துவம் ஒன்றிற்கும் அதன் உரிமையாளருக்குமிடையில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுவதனால் இக்கூற்று உறுதியாகின்றது.

2. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு (Historical Cost Concept)

நிறுவனமொன்றில் நிலையான சொத்துத் தொடர்பான கணக்குகள் நிதி அறிக்கைகளின் பதிவு செய்யப்பட வேண்டியது அவற்றின் கிரயத்துக்கு ஏற்ப என்பது இவ்வெண்கருவால் கருதப்படுகின்றது. ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கிரயம் காட்டப்பட்டுள்ளது. இது பொதுவான அடிப்படையாகும். இதன்படி நிலையான சொத்துக்களின் உபயோகத்தின் தேய்மானத்தைக் கணிக்க முடியும். சொத்துக்களின் உண்மைப் பெறுமதி இதனால் வெளிக்காட்டப்படுவதில்லை என மேற்கூறிய இக்கூற்றை மறுப்போர் குறிப்பிடுவர் இக்குறைகளை நிவர்த்திப்பதற்காக தற்காலத்தில் பணவீக்கக் கணக்கியற் தொழில்நுட்ப முறை பயன்படுத்தப்படுகின்றது.

3. கால எண்ணக்கரு / காலவரை முறை எண்ணக்கரு / ஆவர்த்தன எண்ணக்கரு Period Concept)

தொடர்ந்து செல்லும் நிறுவன எண்ணக் கருவின்படி நிறுவனம் தொடர்ந்து நடைபெற்று வரும் எனக்கருதப்படுகின்றது. அதன்படி நிறுவனத்தின் பொறுப்பேற்றைப் பார்ப்பதற்காக நிறுவனம் ஒடுக்கும் வரை காத்திருக்க வேண்டும். இவ்வாறு யதார்த்தமாக முன்கூறியபடி கணிக்கும் போது வியாபாரத்தின் வாழ்வுக் காலம் தொடர்சியானதாயினும் பல தேவைகள் காரணமாக நிறுவனம் ஒடுக்கும் தினம் வரை இருக்காது அக்காலத்தைப் பகுதிகளாகப் பிரித்து கால வேளைகளுக்கேற்ப பெறுபேறுகளைக் கணிப்பது ஒரு பொது விதியாகக் கணக்கியலாளர் பின்பற்றுவர். இவ்வழமை கால எண்ணக்கரு எனப்படும். இதற்காகப் பெரும்பாலும் ஒரு வருட காலத்தைக் கொள்வது. விசேட தேவைக்காக இதில் குறைந்த காலத்தையும் கால இடைவெளியாகக் கொள்வர் நிறுவனங்களின் முதலீட்டாளர்களுக்கு பிரதிபலனாக இலாபமும் இலாபப் பங்கீடும் வழங்கல் சட்ட ரீதியான தேவை என்பவைக்கட்காக (1982 இன் 17ம் இலக்க கம்பனிச் சட்டம், எஸ். எல். ஏ. எஸ் - 7 அரசின் வரிக் கொள்கை) நிதி அறிக்கைகள் வெளியிடல் முகாமைத்துவ முடிவுகளை மதிப்பீடு செய்தல் எதிர்கால

LIBRARY
TELLIPPALAI... CHAVAKACHCHERI HINDU COLL...

முகாமைத் தீர்மானங்கள் எடுப்பதற்கான மதிப்பீடுகள் தயாரித்தல் ஆகியன இவ்வெண்ணக்கரு மூலம் புலனாகின்றன.

4. பண அளவு எண்ணக்கரு (Money Madsurement Concept)

பொருளாதார அலகொன்றின் பண அலகொன்றை உபயோகித்தல் பற்றி இவ்வெண்ணக்கரு உருவாகி உள்ளது. பொருளாதார அலகொன்றின் செயற்பாட்டினுள் பணத்தினால் கணிக்கக் கூடியவற்றை மாத்திரம் கணக்கீட்டுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். பணத்தால் அளவிட முடியாதவைகளும் உண்டு பல கருதுகோள்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும், அவற்றுட் சில,

1- பணத்தின் பெறுமதி மாறாது.

2 பணத்தால் எல்லாவற்றையும் அளவிடலாம்.

3. பணம் சொத்துக்களாகவும் வேறு வகைகளுக்கும் பரிமாற்றம் செய்யலாம்.

இதன்படி அளவிடும் அலகான பணம் நிலையான அலகல்லாவிடினும் அது ஒரு அலகாக இவ்வெண்ணக்கருவால் கருதப்படுகின்றது. இவ்வெண்ணக்கருவில் காணப்படும் குறைபாடானது, எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஏதாவது பணப் பெறுமதியைத் தொடர்பு படுத்தி மதிப்பீடு செய்வதன் பிரச்சனையையும், பண அலகின் செயற்பாட்டுத் திறன் மாறுபடுவதால் (விசேடமாக பணவீக்கம் ஏற்பட்ட நிலையில்) எழும் பிரச்சனைகட்கும் ஏற்ப நிறுவனத்தில் சகல நடவடிக்கைகளும் பற்றிய உண்மையான நிலை வெளிக்காட்டப்படமாட்டாது.

5 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு / செயற்படும் வியாபார அமைப்பு
Going Concer Concept

ஏதாவது ஒரு பொருளாதார அலகில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கையில் அந்நிறுவனத்தை மூடிவிடல் அல்லது ஒதுக்கல் நிகழும் என்று கருதாது ஒரு நீண்டகாலத்துக்கு அந்நிறுவனம் நடாத்திச் செல்லப்படும் எனக் கருதப்படுவதே இவ்வெண்ணக்கருவாகும். இவ்வெண்ணக்கருவை ஏற்பதனால் நிறுவனத்தின் ஒடுக்குதலைக் கருத்திற் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது. இரு காரணிகளுக்காக இவ்வாறு செய்யப்படுகின்றது.

1. ஒடுக்கிவிடும் நோக்குடன் கணக்குகள் அறிக்கைகள் தயாரிக்கப்படின், அவ்வாறான குறுங்கால நிறுவனங்களுக்கு முதலீட்டாளர்களதும் கடன் கொடுனர்களதும் ஒத்துழைப்புக் கிடைக்காமற் போவதுடன் ஊழியரைப் பெற்றுக் கொள்வதும் கடினமாகின்றது.

2. ஒடுக்கல் செய்யும் நோக்கில் கணக்கு வைத்தல் நடைபெற்றால் கணக்கு வைக்கப்படவேண்டிய ஒடுக்கல் மூலம் பெறக்கூடிய பெறுமதியின் அடிப்படையிலே ஆகும் இங்கு உண்மையான பெறுமதியைக் காட்டுவதற்கு உண்மையிலேயே சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டியதால் ஒடுக்கல் செய்யும் நோக்குடன் கணக்கு வைத்தல் ஒரு முடியாத காரியமாகும்; இந்த எண்ணக்கரு காரணமாக கால எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு, கிரய எண்ணக்கரு எனப்பல எண்ணக்கருக்கள் தோன்றியுள்ளன. நிதிக்கூற்றுக்கள் இலாபநட்டக்கணக்கு ஐந்தொகையென வெவ்வேறாகத் தயாரிக்கப்படுவதும் இவ்வெண்ணக்கரு காரணமாகவே ஆகும். தெரிவு செய்யப்பட்ட காலத்துக்கான செயற்பாட்டின் இலாப நட்டம் கணிக்கப்படல் வேண்டும். இலங்கை கணக்கியல் நியமம் (S.L A.S) 3ன் படி அடிப்படையான கணக்கீட்டு எண்ணக்கருக்களாக 3 எண்ணக்கரு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் தொடர்ந்து இயங்கும் அமைப்பு எண்ணக்கருவும் ஒன்றாகும்.

6. பாதுகாப்பு எண்ணக்கரு / காப்புநிலைப் பண்பு / நேனிய / குறைந்துகூறல் எண்ணக்கரு/முன்னெச்சரிக்கை எண்ணக்கரு (Conservatism Concept)

இது ஒரு கொள்கையாகக் கருதப்படுகிறது சம்பிரதாய முறைப்படி நிதிக்கூற்றுக்கள் மூலம் நிறுவனம் ஒன்றின் செயற்பாட்டு இலாபமும் நிதித் தன்மையும் தெளிவுபடுத்தப்படுகையில் இக்கொள்கை முக்கியமானதாகும். இவ்வெண்ணக்கருப்படி போலியா ஒரு நல்ல நிலமையை உண்டாக்கும் நிலை தடைப்படும். இவ்வெண்ணக்கருவைச் செயற்படுத்தினால் தேறப்படாத இலாபக் கணக்குகள் பதிவாவதைத் தவிர்ப்பதுடன், எதிர்காலத்தில் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படும் நட்டங்களுக்காக ஒதுக்கலும் நிகழும். அதனால் இவ்வெண்ணக்கரு உபயோகத்தின் போது இலாபத்தைக் குறித்துக்காட்டும் வகையில் பதிவு செய்தல் நிகழும். ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு செய்தல் இருப்புச் சக்கரத்தை மதிப்பிடு செய்தல் கிரயம் அல்லது தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்ததைப் பதிதல் போன்றன, இவ்வெண்ணக் கருவின் படி நிகழும். மேலும் மூலதனச் செலவை வருமானச் செலவாகக் கணித்துக் கணக்கு வைத்தல் அல்லது வருமானச் செலவை மூலதனச் செலவு எனக் கணக்கு வைத்தல் ஆகியன இதனால் தவிர்க்கப்படும்.

7. வெளிப்படுத்தும் எண்ணக்கரு (Disclosure Concept)

இவ்வெண்ணக்கரு வெளியாக்கும் எண்ணக்கரு என்றும் அழைக்கப்படும். கணக்கீட்டுக்கூற்றுக்களை விமர்சிக்கையில் போதியளவு தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்ற கருத்தை ஏற்பதால், அவ்வகையில் இக்கொள்கை மிகவும் முக்கியமானது. இவ்வெண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் மூலமாகக் காட்டப்படும் நிதி நிலமை, செயற்பாட்டு விளைவுகளின் பெறுபேறுகளைத் தெளிவாகவும் போதிய அளவிலும் வெளிப்படுத்துகின்றது. இதனால் நிலையான சொத்துக்கள் தேய்வடைதல் போன்ற மிக முக்கியமான விடயங்களுக்கான சீராக்கங்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் பயன்படுத்தும் கட்சியினர் அதிலுள்ள தகவல்களின் காரணமாக அதன் உண்மைத் தன்மையை விளங்கித் தீர்மானங்களை எடுக்க முடியும், கம்பனிச்சட்டப்படி முறையேற்பாடுகளைச் செய்ய இவ்வெண்கரு இடம் கொடுப்பதில்லை.

பாதுகாப்பு எண்ணக்கருவிற்கும் வெளிப்படுத்தல் எண்ணக்கருவிற்கும் இடையே நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உடன்பாடு ஏற்படலாம் அதாவது, பாதுகாப்புக் கொள்கையை தேவைக்கு மேல் செயற்படுத்துகையில் இருப்புக்களைக் குறைத்து மதிப்பிடல், நிலையான சொத்துக்களின் மீது பெறுமானத் தேய்வு, பெறுமானத்தைக் கூட்டிக் கணிப்பிடல், வரிக்காக அதிகமாக ஏற்பாடு செய்தல் ஆகியவை மூலமாக இலாபம் குறைத்துக் காட்டப்படுகின்றது. இதன் மூலம் மறை ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது நிலைய நிதிக் கூற்றுக்களை பரிசீலனை செய்பவர்களுக்கு நிறுவனத்தின் உண்மையான நிலையை விட ஒரு மோசமான நிலையை முன்வைப்பதாகும்.

8. அட்டுறு எண்ணக்கரு / சேர்வுறல் (Accrual Concept)

நிதிக் கூற்றுக்களை அட்டுறு எண்ணக் கருவின் அடிப்படையிலேயே தயாரிக்க வேண்டும். நிதிக் கூற்றுக்களில் வருமானங்களும் செலவுகளும் கணக்கீட்டுக் காலத்துக்கு ஏற்ற அளவில் உள்ளடக்க வேண்டும். வருமானங்களைப் பதியும்போது அவ்வேடத்துக்குரிய பணமாகப் பெற்றதும், பெற வேண்டியதுமான தொகை வருமான (வியாபார இலாப நட்டக் கணக்குகள்) கணக்குகளில் செலவு வைக்க வேண்டும் அவ்வாறே ஆண்டுக்குரிய, பல காலத்தால் தீர்த்தும், தீர்க்க வேண்டியளவுமான செலவுகள் அக்கணக்குகளில் வரவில் பதியப்படல் வேண்டும். காசுக் கணக்கிலும் (Cash

Accountancy) நிதிக் கணக்கியலும் (Financial Accountarcy) இவ்விதியில் அடிப்படையிலேயே வேறுபடுகின்றன. அன்றேல் இது பணி அடிப்படையில் இருந்து அட்டுறு அடிப்படைக்கு மாற்றம் அடைவதாகும். இம்மாற்றத்தின் போது செலவின் காரணமாகச் சொத்துக்கள் போன்று பொறுப்புக்களும் தோன்றுகின்றன. இவ்வெண்ணக்கருவிக் கால எண்ணக்கரு மிகக் கூடிய செல்வாக்குச் செலுத்துகின்றது. இலங்கை கணக்கியல் நியமம் (S.L.A.S) 3ன் படி அடிப்படையான கணக்கீட்டு எண்ணக்கருக்கள் 3 அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அட்டுறுக் எண்ணக்கருவும் ஒன்றாகும்;

9. தேறிய / கைக்கெட்டிய எண்ணக்கரு (Realization Concept)

விற்பனை ஒன்றில் வருமானம் தேறிய சந்தர்ப்பமாகக் கருதப்படுவது அப்பொருள் விற்கப்படும் வேளையினாகும். பொருளை எடுத்துச் சென்ற அல்லது பணம் செலுத்திய சந்தர்ப்பங்கள் இங்கு கவனத்திற் கொள்ளப்படுவதில்லை இவ்வெண்ணக்கருவின்படி இலாபத்தைத் தீர்மானிக்கையில் இலாபம் உழைத்தது எச்சந்தர்ப்பத்திலோ அதுவும் சேவை ஒன்றில் அது வழங்கப்பட்ட சந்தர்பத்திலும் வருமானம் தேறியதாகக் கருதப்படும் (வாடகைக் கொள்வனவு விற்பனை முறை தவிர்த்து);

10. பொருள்சார் எண்ணக்கரு / உண்மைக் கோட்பாடு அல்லது முக்கியத்துவக் கோட்பாடு (Materiality Concept)

கணக்கு கூற்றுக்களில் வருமானங்களும் செலவுகளும் வகைப்படுத்தப்படல் வேண்டும். அது அவற்றின் பொருள்சார் அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றது. இதை வகைப்படுத்துகையில் காலத்தினதும், ஏற்படும் செலவினதும் அடிப்படையில் வருமானத்துக்கு அதிகமாக பாதிப்பை ஏற்படுத்தாதாயின் அவ்வாறு வகைப்படுத்தாது கணக்குக் கூற்றுக்களைத் தயாரிக்கலாம் என்பது இதனால் கூறப்படுகின்றது. எல்லா விடயங்களும் வெவ்வேறாகக் காட்டப்படுவதனால், தீர்மானம் எடுப்பதில் சிரமம் ஏற்படலாம். அதனால் இவ்எண்ணக்கருவின் அடிப்படையில், அதாவது ஒரு விடயத்தைப் பொருத்தமான முறையில் வகைப்படுத்தப்படும் போது கணக்காளர் விருப்பம் போல் பொருத்தமான வகையில் தீர்மானம் எடுக்கலாம். அதாவது அதனை வகைப்படுத்துவதற்கு ஏற்படும் செலவு காலமும் அவ்விடயத்தின் பெறுமானத்தைவிட அதிகமாயின் பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுப்பதன் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலுக்குச் சிரமம் செய்யலாம்;

11. பழமை பேணும் எண்ணக்கரு / கொள்கை மாறாமை / இசைவுத்தன்மை / இயல்பான எண்ணக்கரு / பொருத்தமாகும் எண்ணக்கரு. (Consistancy Concept)

நடைமுறையில் உள்ள கணக்கு முறையொன்று மூலமாகத் தேறிய வருமானத்தையும், நிதிநிலமையையும் மிகவும் நியாயமான முறையில் வெளியிடும் சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்ட கணக்கு முறையை மாற்றுவதற்கு பழமை பேணும் எண்ணக்கருவின் காரணமாகத் தடை ஏற்படுகின்றது. நடைமுறையில் உள்ள நிலைமையை விடக் கூடிய தேறிய வருமானத்தையும் சிறந்த நிதி நிலைமையையும் காட்டுவதாக

இருந்தால் மாத்திரமே தற்போது பின்பற்றப்படும் கணக்கு முறையில் ஏதும் நுட்ப முறைகளை மாற்றி அதற்கு பிரதியீடு செய்யும் முறையில் வேறோர் கணக்கு முறையை அறிமுகஞ் செய்யலாமென இவ்வெண்ணக்கரு கூறுகின்றது உதாரணமாக தேய்மானத்தில் நேர்கோட்டு முறை. ஒடுங்கு பாக முறை ஆகிய பல தேய்வுக் கணிப்பு முறைகள் இருந்த போதிலும் அதாவது ஒரு வருடத்தின் நேர்கோட்டு முறையினைப் பயன் படுத்தினால் தொடர்ந்தும் அம்முறையையே பயன்படுத்த வேண்டும். அதனை மாற்ற வேண்டுமாயினு மேலே குறிப்பிட்டவாறு ஏதாவது நியாயமான காரணத்தின் அடிப்படையிலேயே அது சாத்தியமாகும். இலங்கை கணக்கியல் நியமம் (S. L. A. S.) 3ன் படி அடிப்படையான கணக்கீட்டு எண்ணக்கருவில் இதுவும் ஒன்றாகும்.

12. இரட்டை விளைவு எண்ணக்கரு (Dual Adpect Concept)

இதுவே கணக்கியலின் அடிப்படையான இரட்டைப் பதிவுக் கோட்பாடாகும். இதன்படி வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் இரண்டு விளைவுகளை ஏற்படுத்தி ஒரு விளைவு சொத்திலும் மற்றைய விளைவு அச் சொத்துக்கெதிரான பொறுப்பிலும் தாக்கம் உண்டு பண்ணுகின்றன. இவ்வடிப்படையிலேயே பின்வரும் கணக்கியல் சமன்பாடு பெறப்பட்டது.

சொத்துக்கள் = கடன் பொறுப்பு + உரிமை மூலதனம்

13. இணைத்தல் அல்லது செலவுகளை வருமானங்களோடு பொருந்த வைத்தல் (Matching Concept)

ஒரு கணக்காண்டுக்கான தேறிய வருமானம் (தேறிய இலாபம்) அக்காலப் பகுதிக்கான வருமானங்கள் செலவுகளைத் தொடர்பு படுத்துவதன் மூலமும் இணைப்பதன் மூலமும் பெறப்படும். வருமானங்களைச் செலவுகளுடன் இணைத்துத் தேறிய வருமானம் கணிக்கும் பொழுது அவ்வருமானங்களை பெறுவதற்கு ஏற்பட்ட செலவினங்கள் அனைத்தும் (அவை எக்காலப் பகுதியைச் சார்ந்ததானாலும்) வருமானங்களுடன் இணைக்கப்படல் அல்லது தொடர்பு படுத்தப்படல் வேண்டும்.

14. பணத்தின் உறுதித் தன்மை எனும் எடுகோள் (Assumption of Stadility of Currency)

கணக்கியலில் பணத்தின் பெறுமதியின் அடிப்படையிலேயே பணரீதியான அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் பணச்சுருக்கம் போன்ற வற்றினால் பணத்தின் முழுப்பெறுமதி உண்மையான பெறுமதியைக் காட்டாது என்பதினைக் கருத்திற் கொள்ளவேண்டும். எனவே பணத்தின் பெறுமானம் நிலையாக இருக்கும் என்ற கற்பனை எடுகோளின் அடிப்படையிலேயே நிதிக் கூற்றுக்களும் அறிக்கைகளும் தயாரித்துக் கொள்ளப்படுகின்றன.

13. கணக்கீட்டு நடைமுறை / கணக்கியல் நியமம்

வியாபாரத்தில் நீண்டகாலப் பாவனைக்குரிய வாகனங்களை நிலையான சொத்தாகவும் மறு விற்பனைக்கான வாகனங்களை நடைமுறைச் செலவாகவும் வெளிப்படுத்தல் வேண்டும்:

இன்றைய சூழல் இனிய வணிகத் துறைசார் தகவல் கொண்டு இனிது மலராய் இந்துவணிகன் இலங்க வாழ்த்துக்கள்

...RARY
...KACHCHERI HINDU COLL

என்றும் நிச்சயமானது எழுகதிர்

எவரும் உச்சரிப்பது எழுகதிர்

சகலவிதமான பலசரக்கு பொருட்களையும்

- நிதானவிலையில்
- மொத்தமாகவும்
- சில்லறையாகவும்
- பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்

# எழுகதிர் விற்பனை நிலையம்

(சன்றைஸ் றேடேர்ஸ்)

இலக்கம் 6 கச்சாய்வீதி, சாவகச்சேரி.

இந்து வணிகனே இலங்கு தமிழ் மண்ணில்
இரண்டாவது மலராக இந்துவின்
வர்த்தக மலராக மணம்பரப்பு
நல் வாழ்த்துக்கள்!

அன்பளிப்பு

# இராஜம் அரிசி ஆலை

யாழ் வீதி, சாவகச்சேரி.

இந்து வணிகன் இதழ் மலர்வுக்கு இதய
பூர்வ வாழ்த்துக்கள்!

கண்ணுக்கு மை அழகு
கவிதைக்கு பொய் அழகு
வானத்தில் மதி அழகு
பலசரக்கு பொருளுக்கு "ஜெயமதி" அழகு
சகல விதமான பலசரக்கு பொருட்களுக்கும்

# ஜெயமதி ஸ்ரோர்ஸ்

யாழ் வீதி, சாவகச்சேரி.

# இலங்கையின் பங்குச் சந்தை

க. தேவராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்

## 1.0 அறிமுகம்

இலங்கையின் நிதிச் சந்தையிலே மூலதனச் சந்தை பிரதான இடத்தை வகிக்கின்றது. இச் சந்தையிலிருந்தே வியாபாரத்துக்கு தேவையான இடைத்தர நீண்டகால நிதிகள் பெற்றுக்கொள்ளப்பட முடிகின்றது இத்தகைய இடைத்தரக்கால. நீண்டகால நிதிகளைப் பெற்றுக்கொள்ளும் அமைப்பாக பங்குச் சந்தை காணப்படுகின்றது இச்சந்தையில் விற்கப்படும் பங்குகள். சரக்குமுதல்கள், தொகுதிக் கடன்கள், முறிகள் போன்றவற்றால் முதலீட்டு நிதிகள் திரட்டப்படுகின்றன. இலங்கையிலும் கம்பனிகளுக்கு தேவையான நீண்டகால நிதிகள் பங்குச் சந்தை அமைப்புக்கள் மூலமே திரட்டப்பட வேண்டியிருப்பதனால் பங்குச் சந்தை முக்கியம் பெறுகிறது.

## 2.0 பங்குச் சந்தையின் வரலாறு.

இலங்கையின் பங்குச் சந்தையானது பெருந்தோட்டத்துறையின் வளர்ச்சியுடன் தொடர்புடையது என்பதனால் நீண்டகால வரலாற்றை உடையதாகும். இலங்கையிலே 1896 ம் ஆண்டில் கொழும்பு பங்குத்தரகர் சங்கம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட பங்குச்சந்தை 1904 ஆண்டிலே கொழும்பு தரகர் சங்கம் என்ற பெயர் கொண்டதாக மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு உருவாகிய இலங்கையின் பங்குச் சந்தை ஒரு உள்நாட்டு பங்கு முதற் சந்தையாகவே காணப்பட்டது. சர்வதேச பங்கு முதற் சந்தைகளான

லண்டன் பங்குச் சந்தை
நியூயோக் பங்குச் சந்தை
டொக்கியோ பங்குச் சந்தை

என்பனபோல் வளர்ச்சியுற்ற பங்குச்சந்தை சந்தையாகக் காணப்படவில்லை. இதற்குக் காரணம் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த தேசிய மயமாக்கும் கொள்கைகளாகி கம்பனி அமைப்புக்கள் பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்காமையேயாகும்.

இலங்கையில் தற்போதை அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் அறிமுகப்படுத்திய தாராளமயமாக்கும் கொள்கையே பங்குச் சந்தையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது. இந்த அரசாங்கம் 1982 ம் ஆண்டில் கொண்டு வந்த கம்பனிச் சட்டம் பல புதிய வகையான கம்பனிகளின் உருவாக்கத்துக்கு வகை செய்தது. இத்தகைய கம்பனிகள் தமக்குத் தேவையான மூலதனத்தைத் திரட்டிக்கொள்ள கொழும்புத் தரகர் சங்கம் மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. இதன் காரணமாக 1984 ம் ஆண்டில் "வரையறுத்த பங்குத் தரகர் சங்கம்" எனும் இன்னொரு பங்குச் சந்தையை அரசாங்கம் உருவாக்கியது. இதனைத் தொடர்ந்து 1985 ம் ஆண்டில் இலங்கையிலிருந்த இரு பங்குச் சந்தை அமைப்புக்களையும் ஒன்றாக இணைத்து "வரையறுத்த கொழும்பு ஆவணமாற்று" என்ற பெயரில் பங்குச்சந்தை உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனமே மீண்டும் பெயர் மாற்றம் பெற்று 1990 ம் ஆண்டில் "வரையறுத்த கொழும்பு சரக்குமுதல் கைமாற்று" (CSE) என்ற பெயர் கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது. இந்த அமைப்பே இலங்கையின் பங்குச் சந்தையையும் சர்வதேச பங்குச் சந்தையின் தரத்திற்கு உயர்த்தியுள்ளது.

இலங்கையின் பங்குச் சந்தையின் வளர்ச்சியைத் தொடர்ந்து "வியாபாரத் தளம்" (Trading Floor) என்பதன் தொழிற்பாடுகள் நவீனமயப்படுத்தப் பட்டுள்ளன. பங்குச்சந்தையின் தொழிற்பாடுகள் கணனிமயப்படுத்தப்பட்டு விரைவாகவும் தவறு

கள் இன்றியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக முதலீட்டாளருக்கு உதவ ''பங்கு விலைச் சுட்டெண்'' போன்றன வெளியிடப்படுவதுடன் முதலீட்டாளருக்கான எல்லாத் தகவல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பங்கு விற்பனைக்கு வசதியாக தரகர் நிறுவனங்களது எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டுள்ளன. இன்று மொத்தம் 15 பங்குத் தரகர் நிறுவனங்கள் இலங்கை முழுவதிலும் இயங்கி வருகின்றன.

## 3.0 பிணையங்கள் பரிமாற்று ஆணைக் குழு.

இலங்கையின் பங்குச் சந்தையின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டதே இந்த அமைப்பாகும். 1987 ம் ஆண்டில் ''பிணையங்கள் பேரவை'' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பே இன்று இப்பெயரைப் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த அமைப்பே பங்குச் சந்தை நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு பொறுப்பானதாகும். இதனால் பங்குத் தரகர் தொழிலில் ஈடுபட்டிருப்போர் எல்லோரும் இந்த அமைப்பிடம் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த அமைப்பே இலங்கையின் பங்குச் சந்தைக்கான உயர் அமைப்பு என்பதால் மத்திய வங்கியின் துணை ஆளுனர் திறைசேரியின் துணைச்செயலாளர், கம்பனிப் பதிவாளர், பட்டயக் கணக்காளர் சங்கத்தின் தலைவர், நிதியமைச்சின் நியமன உறுப்பினர் என்போர் நிர்வாக சபையில் இடம் பெறுவர்.

பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு உருவாக்கப்பட்ட பின்னர் அதனால் பல பணிகள் ஆற்றப்படவேண்டும் எனக் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக

1. பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்களது பதிவை ஏற்றுக் கொள்ளுதல்.
2. பங்குச் சந்தை நடவடிக்கைகள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
3. பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர்களுக்கு ஏற்படும் எதிர்பாராத நட்டத்திற்கு ஈடு கொடுத்தல்.
4. பங்குதாரர் நன்மைகாக முறையற்ற பங்கு மாற்றங்களை இரத்துச் செய்தல்
5. நிலை கூறப்பட்ட கம்பனிகளின் தவறான நடவடிக்கைகளை பிரசித்தப் படுத்தல்

என்ற வகையில் முக்கிய பணிகளை இந்த ஆணைக்குழு ஆற்றுவதன் மூலம் பங்குச் சந்தை முதலீட்டாளரின் நலனைப் பாதுகாத்து வருகின்றது.

## 0.4 மத்திய வைப்புத் திட்டம் [Central Deposit Tory Syspem]

பங்குச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களை இலகுவில் தீர்த்துக் கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமே இதுவாகும். இதற்காகவே ''மத்திய வைப்பு முறைகள் (சொந்த) கம்பனி'' எனபது உருவாக்கப்பட்டது. பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புவோர் பங்குத் தரகர் நிறுவன மொன்றின் ஊடாக பணத்தை வைப்புச்செய்து கணக்கொன்றை ஆரம்பித்தல் வேண்டும்'' இதனூடாக மத்திய வைப்புத்திட்ட முறைகள் கம்பனியே இக்கொடுக்கல் வாங்கலைத் தீர்த்து வைக்கும். ''பணக் கொடுக்கல் வாங்கல் எதுவுமின்றி கணக்குப் பதிவுகள் ஊடாகவே இக்கொடுக்கல் வாங்கல் தீர்த்துக் கொள்ளப்படும். அத்துடன் பங்குகளைக் கைமாற்றும் நோக்கத்திற்காக அவற்றைப் பெற்றுப் பாதுகாத்தல், பங்குக் கைமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை உள்ளடக்கிய கணக்குகளைப் பராமரித்தல், மாதாந்த கணக்குகளை பங்குதாரருக்கு அறிவித்தல் தொடர்பான பணிகளை மத்திய வைப்புத் திட்டம் மேற்கொண்டு வருகின்றது. இந்த அமைப்பே பங்குச் சந்தையின் தீர்க்கும் வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றது. கணனிகளைப் பயன்படுத்தி மிகக் குறுகிய காலத்தில் கொடுக்கல் வாங்கல்கள் தீர்த்து வைக்கப்படுகின்றன. இவ்

காரணமாக இலங்கையின் பங்குச் சந்தையின் முக்கிய அமைப்புக்களில் ஒன்றாக மத்திய வைப்புத்திட்டம் அமைகின்றது.

மத்திய வைப்புத் திட்டத்தின் ஊடாக பங்குச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள் தீர்த்து வைக்கப்படுகின்றன. மத்திய வைப்புத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கையின் பங்குச் சந்தையானது நான்கு தீர்வுத் திகதிகளைக் கொண்டிருந்தது. இதற்கமைய கொள்வனவாளருக்கு இரண்டாம் நான்காம் புதன்கிழமைகளும், விற்பனையாளருக்கு இரண்டாம் நான்காம் வெள்ளிக் கிழமைகளும் தீர்வுத் திகதிகளாக இருந்தன. ஆனால் புதிய நடைமுறையின்படி T + 5, T + 7 என்ற தீர்வுத் திகதிகள் உள்ளன. இதில் T என்பது வியாபார நாளைக் (Trading Day) குறிக்கும். இதற்கமைய கொள்வனவாளர் தனது கொடுப்பனவை வியாபாரம் இடம்பெற்ற தினத்திலிருந்து ஐந்தாம் நாளில் செலுத்துவார். அதே போல் விற்பனையாளர் தனது கொடுப்பனவுகளை வியாபாரம் நடைபெற்ற ஏழாம் நாளில் பெற்றுக்கொள்வர். இக் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் இப்பொழுது கணனி மயப்படுத்தப்பட்ட வகையில் கணக்குப் பதிவுகள் ஊடாக மத்திய வைப்புத் திட்டக் கம்பனியின் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன. இதன்காரணமாக பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல் விரைவாகவும் தவறுகள் இன்றியும் நடைபெறுவதனைக் காண முடிகின்றது.

## 5.0 நம்பிக்கை அலகு - (Unit Trust)

குறைந்த மூலதனம் வைத்திருப்போர் தமது பணத்தை வங்கிகளில் முதலீடு செய்ய வாய்ப்பாக அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்பே இதுவாகும். இந்த அமைப்பு அலகுகளை விற்பனை செய்வதன் மூலம் பணத்தைத் திரட்டிக் கொள்ளும். திரட்டப்பட்ட பணம் பங்குகளில் முதலீடு செய்யப்படும். இந்த முதலீட்டினால் கிடைக்கும் இலாபம் அலகு உடமையாளர்களுக்கிடையே பகிரப்படும். இந்த நம்பிக்கை அலகிலே

1. அலகு உடமையாளர்
2. நம்பிக்கைப் பொறுப்பாளர்
3. முகாமைக் கம்பனி

ஆகிய மூவர் சம்பந்தப்படுவர். அலகு உடமையாளர் முதலீட்டாளராகவும் நம்பிக்கைப் பொறுப்பாளர் முதலீட்டைத் திரட்டுபவராகவும் காணப்படுவர். இவர்களுக்கிடையிலான உடன்பாட்டினையே "நம்பிக்கை உறுதி" எனக் கொள்ளப்படும். முகாமைக் கம்பனியென்பது முதலீட்டாளரதும் நம்பிக்கைப் பொறுப்பாளரதும் நலனைப் பாதுகாப்பதாகும். எப்பொழுதும் "புளுசிப்ஸ் கம்பனி" (Blue Chips Company) என்பதில் நம்பிக்கை அலகுகள் முதலீடு செய்ய விரும்பும். உயர்வாகவும் உறுதியாகவும் பங்கு விலைகளைக் கொண்ட கம்பனியே புளு சிப்ஸ் கம்பனியாகும்.

இலங்கையில் பல நம்பிக்கை அலகுகள் தொழிற்பட்டு வருகின்றன.

- பிரமிட்ஸ் நம்பிக்கை நிதியம்
- தேசிய ஒப்புரவு நிதியம்
- கொம் டிறஸ்ட் வண்டு
- சீமாஸ் நம்பிக்கை அலகு

என்பன இலங்கையில் இயங்கிவரும் நம்பிக்கை அலகாகும். இதில் பிரபலம் பெற்றிருப்பது இலங்கை வங்கியின் சீமாஸ் நம்பிக்கை அலகு ஆகும். இது இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் அலகு உடமையாளர்களைத் திரட்டும். இங்கு ஆயிரம் ரூபாவைச் செலுத்தி உறுப்பினராகலாம். முழுயும் இலங்கையில் சிற்றளவான முதலீட்டாளர் பெருமளவில் இருப்பதனால் நம்பிக்கை அலகு பிரபலம் பெற்றுள்ளது.

## 6.0 முடிவுரை

எந்தவொரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் மூலதனச் சந்தையின் வளர்ச்சி வலியுறுத்தப்படுகின்றது. இச் சந்தையே முதலீட்டுக்குத் தேவையான நிதியை வழங்கக் கூடியதாகும். இதன் காரணமாகவே 1977ல் பதவிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் மூலதனச் சந்தையின் பிரதான அங்கமான பங்குச் சந்தையின் மீது அதிக அக்கறை காட்டி வருகின்றது. இதன்பிரகாரம் இலங்கையின் பங்குச் சந்தையை சர்வதேச பங்குமுதற் சந்தையின் தரத்துக்கு உயர்த்த அரசாங்கம் முயற்சித்ததுடன் வெற்றியும் கண்டுள்ளது.

# செய்தித் தொடர்பு
# COMMUNICATION

செல்வி சோ. மாலதி
வர்த்தகப் பிரிவு
ஆண்டு 96

செய்தித் தொடர்பு என்பது தகவல்கள் ஆலோசனைகள் என்பவற்றை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குப் பரிமாற்றும் ஓர் நடவடிக்கையாகும். அதாவது ஒரு நிறுவனத்தில் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குத் தகவலானது எவ்வாறு பரிமாற்றப் படுகின்றது என்பதனை செய்தித் தொடர்பு எடுத்துக் காட்டுகின்றது.

பின்வரும் காரணங்களிற்காக ஒரு நிறுவனத்தில் செய்தித் தொடர்பானது மிகவும் முக்கியமானதாகும்;

(1) முகாமையாளர் ஊழியர்களுக்குக் கட்டளை அனுப்புவதற்கு.

(2) ஊழியர்கள் தமது கருத்துக்கள் ஆலோசனைகளை முகாமையாளர்களுக்குத் தெரிவிப்பதற்கு.

(3) ஒரு நிறுவனம் தனது கொள்கைகளை எடுத்துக் கூறுவதற்கும் அத்துடன் தேவையான அறிவித்தல்களைப் பொருத்தமானவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவதற்கும்:

(4) ஒரு நிறுவனத்தில் சரியான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு;

ஒரு செய்தியானது செய்தி கிடைக்கப் பெறுபவர்கட்கு உரிய நேரத்தில் உரியவர்கட்கு சரியான தகவலை வழங்கினால் அதனை ஓர் சரியான செய்தித் தொடர்பு என அழைக்கலாம்.

செய்தி அனுப்புபவர் → செய்தி → செய்தியைப் பெறுபவர்
Sender → News → Receiver

செய்தியை அனுப்புபவர் எதனைத் தெரிவிக்க வேண்டும் என்பதனை முதலில் தீர்மானித்து பின்பு அதனை செய்தி வடிவத்தில் இட்டு ஒரு பொருத்தமான செய்தித் தொடர்பு மூலம் உரியவர்கட்கு அனுப்புகின்றனர் உரியவர் அச்செய்தியினைப் பெற்றபின் அதனுடைய கருத்தை எடுக்கின்றனர் இப்போது செய்தியை அனுப்புபவர் எக்கருத்தினைச் சொல்ல முற்பட்டாரோ அக்கருத்தினையே செய்தியைப் பெறுபவரும் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் அது ஒரு சரியான செய்தித் தொடர்பு எனலாம். சில சந்தர்ப்பங்களில் செய்தியைப் பெற்றுக் கொண்டவருக்கு செய்தியை அனுப்புகின்றனர் வழங்க நினைத்த கருத்திலும் பார்க்க வேறுபட்ட ஓர் அர்த்தத்தினை அச்செய்தி வழங்கலாம்.

செய்தித் தொடர்புக்குத் தடையான காரணிகள்

ஒரு நிறுவனத்தில் ஒரு திறமையான செய்தித் தொடர்பிற்கு பின்வரும் காரணிகள் தடையாகலாம்.

(1) வித்தியாசமான புலனுணர்வு

(2) வித்தியாசமான சொற்கள், வித்தியாசமான கருத்துக்களை வழங்கல்;

(3) சத்தம். (Noise)

(4) சொற் பிரயோகங்களும் அங்க அசைவுகளும் வேறுபட்டுக் காணப்படல்;

(5) நம்பிக்கையின்மை.

(6) உணர்ச்சி வசப்படல்


LIBRARY

## முறைசாராத செய்தித் தொடர்பு
## Informal Communication

உத்தியோக பூர்வமற்ற வகையில் ஒரு செய்தியானது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குச் சென்றடைவதனை முறைசாராத செய்தித் தொடர்பு என அழைப்பர். ஒரு முறைசாராத செய்தித் தொடர்பானது பல் வேறு முறைகளில் ஏற்படலாம். அவற்றில் பிரதானமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) ஒருவர் மற்றொருவருக்குக் கூற அவர் இன்னொருவருக்குக் கூறுதல்
A→B→C→D———→K


2) ஒருவர் மற்றொருவருக்குக் கூறுதல்




3) குறிப்பிட்ட ஒருவர் ஒரு செய்தியினை எழுமாறாக ஒரு சிலருக்குக் கூறுதல்.




4) ஒருவர் ஒரு குறிப்பிட்ட செய்தியினை தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்குக் கூற அவர் தனக்குத் தெரிந்தவர்களுக்குக் கூறல்.




## செய்தித் தொடர்பில் தடைகளை நீக்குதல்

செய்தித் தொடர்பில் காணப்படும் பிரதானமான தடைகளை நீக்க பின்வரும் முறைகள் மேற்கொள்ளப்படும்;

1) செய்தியினைவிளக்கமாக அறிவித்தல் வேண்டும் இயலுமான போது யாருடன் செய்தித் தொடர்பினை மேற்கொள்ளு கின்றோமோ அவர்களைப் பற்றி அறிந்து அதற்கேற்ற முறையில் செய்தித் தொடர்பினை மேற்கொள்ள வேண்டும்

2) வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுக்கும் சொற்களைக் குறைத்தல் வேண்டும். நேரடியான கருத்தினை வழங்கக் கூடிய சொற்களையே பயன்படுத்த வேண்டும்;

3) சத்தத்தினைக் குறைத்தல்: சத்தம் செய்தித் தொடர்பிற்கு ஒரு தடையாக இருக்கலாம். எனவே சத்தத்தினைக் குறைப்பதன் மூலம் செய்தித் தொடர்பின் தடையைக்குறைக்க அல்லது நீக்க முடியும்.

4) செய்தியினை வழங்கும் போது செய்தித் தொடர்புச் சொற்களிற்கும் அங்க அசைவுகளிற்கும் இடையேயுள்ள முரண்பாட்டை நீக்கிக்கொள்ளுதல்.

5) செய்தியினை வழங்குகின்றவர் நம்பிக்கையீனமாக நடப்பின் அதுவும் செய்தித் தொடர்பிற்குத் தடையாக இருக்கும். எனவே செய்தியை வழங்குபவர், ஏற்போர் தம்மீது நம்பிக்கையினை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நடந்து கொள்ளும் போது செய்தித் தொடர்புத் தடையைக் குறைக்கலாம்.

6) உணர்ச்சி வசப்படுத்தலைக் குறைத்தல்

7) மீள வலியுறுத்தல் செய்தியினை மீள வலியுறுத்துவதன் மூலம் தடைகளைக் குறைக்கலாம்

## கீழ்நோக்கிய அல்லது மேல்நோக்கிய செய்தித் தொடர்பு

ஒரு நிறுவனத்தில் உயர் அதிகாரிகளிடம் இருந்து கீழ்மட்ட உத்தியோகர்களுக்கு செய்தி அனுப்பப்படுதலை கீழ் நோக்கிய செய்தித் தொடர்பு எனவும், மறு புறத்தில் கீழ் மட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து

மேல் மட்ட உத்தியோகத்தவர்களுக்கு அல்லது உயர் அதிகாரிகட்கு செய்தி அனுப்பப்படுவதை மேல் நோக்கிய செய்தித் தொடர்பு எனவும் அழைக்கப்படுகின்றது.

முகாமையாளர்
↓↑
உதவி முகாமையாளர்
↓↑
நிறைவேற்று உத்தியோகத்தர்
↓↑
லிகிதர்

கீழ் நோக்கிய செய்தித் தொடர்பு ↓ — ↑ மேல் நோக்கிய செய்தித் தொடர்பு

கீழ் நோக்கிய செய்தித் தொடர்பு கட்டளைகளாகவே காணப்படும். மேல் நோக்கிய செய்தித் தொடர்பு ஆலோசனைகளாகவோ அன்றி வேண்டுகோள்களாகவோ காணப்படும்.

## ஒரு வழிச் செய்தித் தொடர்பும் இரு வழிச் செய்தித் தொடர்பும்.

## One Way Communication and Two Way Communication.

செய்தியைப் பெற்றுக் கொண்டவரிடமிருந்து அச்செய்தியானது சரியான முறையில் அவருக்குக் கிடைத்துள்ளது என்பதனை உறுதி செய்யும் முறையை பின்னூட்டி முறை (Feed Back) என அழைப்பர். ஒரு செய்திக்கு பின்னூட்டி முறை பல வழிகளில் ஏற்படலாம்.

1) வாய் மூலமாக செய்தி கிடைத்ததினை உறுதிப்படுத்தல்.
2) ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தல் .
3) செயற்பாட்டின் மூலம் உறுதிப்படுத்தல்.

எந்தளவிற்குப் பின்னூட்டி முறை காணப்படுகின்றதோ அந்தளவிற்குக் குறிப்பிட்ட அச்செய்தித் தொடர்பானது திறமையானது என்பது அர்த்தமாகும். பின்னூட்டி முறையினால் குறிப்பிட்ட அச்செய்தியானது உரியவருக்குக் கிடைத்துள்ளது என்பதனையும் அவர் அதனைச் சரியான முறையில் விளங்கிக் கொண்டுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்த முடிகிறது பின்னூட்டி முறை இல்லையேல் குறிப்பிட்ட செய்தியானது அல்லது அறிவித்தலானது உரியவருக்குக் கிடைத்துள்ளது என்பதற்கும் உரியவர் அதனை சரியான முறையில் விளங்கியுள்ளார் என்பதற்கும் உத்தரவாதமில்லை. பின்னூட்டி முறை இல்லாது செய்தித் தொடர்பினை மேற்கொள்ளின் அது ஒருவழிச் செய்தித் தொடர்பாகும். செய்தியைப் பெற்றுக் கொள்பவர் பின்னூட்டி முறையை வழங்கின் அது இருவழிச் செய்தித் தொடர்பு ஆகும்.

உதாரணமாகச் செய்தியைப் பெற்றுக் கொண்டவர் அது சம்பந்தமாகக் கேள்விகளைக் கேட்கும் போது அது இரு வழிச் செய்தித் தொடர்பாகும். இருவழித் தொடர்பால் செய்தியைப் பெற்றுக்கொண்டவரும் செய்தியை வழங்குபவராக மாறுகிறார்.

---

செய்தி அனுப்புபவர் → பெறுபவர் (ஒருவழி செய்தித் தொடர்பு)
செய்தி அனுப்புபவர் ⇌ பெறுபவர் (இருவழி செய்தித் தொடர்பு)

---

ஒரு வழி, இருவழிச் செய்தித்தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுமூலம் பின்வரும் உண்மைகள் புலனானது.

1) ஒருவழிச் செய்தித் தொடர்பில் குறைவான நேரம் தேவைப்படும்; இருவழிச் செய்தித் தொடர்பில் கூடிய நேரம் தேவைப்படும்.

2) ஒரு வழிச்செய்தித் தொடர்பில் செய்தியைப் பெற்றுக்கொள்பவருக்கு குறிப்பிட்ட செய்தியை விளங்கிக் கொண்டுள்ளார் என்பதற்கு போதியளவு நம்பிக்கை கொள்ளப்படமாட்டாது:
இருவழிச் செய்தித் தொடர்பில் செய்தியை பெற்றுக்கொள்பவருக்கு குறிப்பிட்ட செய்தியை விளங்கிக் கொண்டுள்ளார் என்பதற்கு கூடியளவு நம்பிக்கையைக் கொண்டிருப்பர்.


3) ஒரு வழிச் செய்தித் தொடர்பில் ஓரளவே செய்தி சரியானதாகச் சென்றடையும்: இருவழிச் செய்தித் தொடர்பில் கூடியளவு செய்தி சரியானதாகச் சென்றடையும்.

4) ஒருவழிச் செய்தித் தொடர்பில் செய்தியை அனுப்புபவர்கள் தாக்கப்படமாட்டார்கள் இருவழிச் செய்தித் தொடர்பில் இலகுவில் தாக்கப்படலாம் என்ற உணர்வினைக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் இம் முறையில் கேள்விகள் கேட்பதற்கு அனுமதியுண்டு.


## செய்தித் தொடர்பில் வலைப் பின்னல்
## Communication network

நிறுவனத்தில் செய்தி அனுப்பப்படும் ஓர் ஒழுங்கு முறையினை வலைப் பின்னல் என அழைக்கலாம். முகாமையாளர்கள் நிறுவனத்தில் செய்தியினை அனுப்புவதற்கு ஏற்றதாக பொருத்தமான ஒரு செய்தித் தொடர்பினை அல்லது கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வர். இதனையே செய்தித் தொடர்பில் வலைப் பின்னல் என அழைப்பர் பல்வேறு முறைகளில் செய்தித் தொடர்பு வலைப்பின்னல் ஏற்படுத்தப்படலாம். சில சந்தர்ப்பங்களில் ஒரு ஊழியனது நேரடி மேற்பார்வையாளர்கள் தவிர வேறு எவருடனும் தொடர்பு கொள்ள முடியாத வகையில் வலைப்பின்னலை ஏற்படுத்திக் கொள்ள முடியும். பொதுவாக உயர்மட்ட முகாமையாளர்கள் தம் பொறுப்புக்களை குறைக்கும் வகையிலும் தம் அந்தஸ்தினைப் பேணு வகையிலும் இத்தகைய செய்தித் தொடர்பினைப் பேணுவார்கள். சில நிறுவனங்கள் எந்த ஒரு ஊழியரும் எந்தவொரு மட்டத்துடனும் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் வலைப்பின்னலை ஏற்படுத்தியிருக்கும். இதனால் தகவல்கள் சுதந்திரமாகப் பரிமாற்றப்படும் ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் நிறுவனங்கள் இத்தகைய செய்தித் தொடர்பு வலைப்பின்னலைப் பின்பற்றுகின்றன;

பல்வேறுவகையான செய்தித்தொடர்பு வலைப் பின்னல்கள் காணப்படுகின்றன. அவையாவன:





1) வட்டம் CIRCLE:- இங்கு B, A அல்லது C யுடன் மட்டுமே தொடர்பு கொள்ளலாம் E யுடன் தொடர்பு கொள்ள விரும்பின் A மூலமாகவோ அல்லது C, D மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.




2) சங்கிலி CHAIN:- இங்கு ஒவ்வொரு தனித்தனி உத்தியோகத்தருக்கும் ஒவ்வொரு நேரடியான உயரதிகாரிகள் காணப்படுகின்றனர். ஆனால் இந்நேரடியான இரண்டு உத்தியோகத்தருக்கும் ஒரே மேல்மட்ட உத்தியோகத்தர் காணப்படுகின்றார். எனவே இரண்டு வேறுபட்ட உத்தியோகத்தரும் இறுதியில் ஒரே முகாமையாளருடன் தொடர்பு கொள்கின்றனர்.




3) வை Y:- இங்கு A யும் B யும் நேரடியாக C யுடன் தொடர்பு கொள்ளலாம் E, D மூலம் C யுடன் தொடர்பு கொள்ளலாம் எனவே இறுதியில் C சகலருடனும் தொடர்பு கொள்ள முடியும்.




4) நட்சத்திரம் STAR:- இங்கு C நேரடியாக A, B, D, E ஆகியோருடன் தொடர்பு கொள்ளமுடியும் உதாரணமாக:- ஒரு மாவட்டத்தில் நான்கு வங்கிக்கிளைகள் உண்டு. ஒருமாவட்டத்திற்கு ஒரு மாவட்டக்கிளை உண்டு, மாவட்டக்கிளை வங்கிக்கிளைகளைக் கட்டுப்படுத்தும், வங்கிக்கிளைகள் நேரடியாக மாவட்டக்கிளையுடன் தொடர்புகொள்வது நட்சத்திர முறையை ஒத்தது.

இம்முறைகளில் நட்சத்திரம், வை ஆகிய செய்தித் தொடர்பு வலைப் பின்னல்கள் கூடியளவு மையப்படுத்தப்பட்ட செய்தித் தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. வட்டம், சங்கிலி ஆகிய முறையில் எல்லோரும் எல்லோருடனும் தொடர்பு கொள்ள முடியும்; எனவே பன்முகப்படுத்தப்பட்ட அமைப்பினை இச்செய்தித் தொடர்பு வலைப்பின்னல்கள் எடுத்துக் காட்டுகின்றன;

"இந்து வணிகன் தென்மராட்சியின் மாணவருலகம்
நன்மை பெற நயங்களுடன் வெளிவர வாழ்த்துக்கள்

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு சிறந்த
ஓர் தாபனம்

# இந்திரன்
# நகை மாடம்

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

இல.10 நவீனசந்தை, ★ சாவகச்சேரி.

---

இரண்டாவது அகவை காணும் இந்து வணிகனுக்கு
இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

சகல விதமான

★ எரிபொருட்களுக்கும் ★

நீங்கள் நாட வேண்டிய இடம்

# மாதவன்
# எரிபொருள் வாணிபம்

யாழ்வீதி, சாவகச்சேரி.

வர்த்தக துறையின் "இந்து வணிகன்" இதழ் வெளியீட்டுக்கு ஆதரவுகள் பற்பல.

# முருகன் அரிசி ஆலை

யாழ்வீதி, ★ சாவகச்சேரி.

---

தித்திக்கும் சுவைமிகு சிற்றுண்டி வகைகளுக்கும்,

சகல விதமான கேக் வகைகளுக்கும்,

கேக் தயாரிப்பதற்கான பொருட்களையும்

ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள.

இன்றே விஜயம் செய்யுங்கள்

# சுவையகம்

யாழ்வீதி, ★ சாவகச்சேரி.

LIBRARY
THIRUNELVELI/CHAVAKACHCHERI HINDU COLLEGE

# தேசிய வருமானம் கருத்துக் கணிப்பீடும்

அமரசிங்கம் கேதீஸ்வரன்
உதவி விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ் பல்கலைக் கழகம்.

தேசிய வருமானம் என்ற பொருளியல் கோட்பாட்டின் மெய்மை புலத்தை திறம்பட விளங்கிக்கொள்வது என்பதற்கு கோட்பாட்டு நிலைப்பட்ட தேசிய வருமான வட்டப்பாச்சல் கருதுகோளும் (Circular flow of National Income Harpothies) பகுப்பாய்வு நிலைப்பட்ட கணிப்பிடல் மாதிரிகளும் அவசியமானதாகும். குறித்த ஓர் நாட்டினது ஆக்கத்திறன் வெளிப்பாட்டு கணிப்பீடாகவும் ஆக்க வளங்களின் மெய்யான அதிகரிப்பின் வளர்ச்சி மதிப்பீட்டு கணிப்பீடாகவும் இது அமைந்துள்ளதனால் குறித்த நாட்டினது ஆக்க வளங்களின் உள்நாட்டு பயன்பாட்டினதும் நாட்டுக்கு வெளியிலான குறித்த நாட்டு வளங்களின் பயன்பாட்டு வெளியீட்டின் சார்பான மதிப்பீடாகவும் இது அமைந்து விடுகிறது இவ்வகையில் "தேசிய வருமானம் என்பது குறித்த நாட்டின் ஆழுகைப் பரப்பிலுள் உள்ளடங்கும். ஆக்கமூலங்கள் அனைத்தும் குறித்த காலப்பகுதியில் ஆக்கமுயற்சியில் ஈடுபடுவது மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உற்பத்தி செய்த இறுதிப்பொருட்கள் சேவைகளினது பணவடிவிலான மொத்த பெறுமதியினைக் குறிக்கும் பொருளியல் கோட்பாடுகளில் திட்டமிடல் மாதிரி பகுப்பாய்வு மாதிரி என்பனவற்றின் அறிமுகத்துடன் தேசிய வருமான கணிப்பீடுகள் உலக நிலையில் அவசியப்படுத்தப் பட்டன. உலகளாவிய நிலையில் ஒருமித்த பகுப்பாய்வுக்காகவும், ஒப்பீட்டாய்வுகளுக்காகவும் எல்லா நாடுகளிலும் ஒரே வகைப்பட்ட கணிப்பீட்டு முறைமை பேணப்படுவதன் அவசியத்தை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியது இந்தவகையால் உலகம் முழுவதிலும் தேசிய வருமான கணிப்பீடு என்பது முக்கியமான ஓர் செய்முறையாக இன்று இடம் பெறுகிறது.

## வருமான வட்டப் பாச்சல்

தேசிய வருமானம் என்பதன் கோட்பாட்டு விளக்கமாக இவ்வட்டப் பாச்சல் கருதப்படுகிறது தேசிய ரீதியில் ஓர் பொருளாதாரத்தில் உற்பத்தி, வருமானம், செலவினம் என்பவற்றின் செயலாக்கத்தை சுற்றோட்டமான வகையில் இக் கோட்பாடு விளக்குகிறது இவ்வகையில் ஓர் பொருளாதாரத்தின் இயங்கும் ஆற்றல், சமனிலை என்பவற்றையும் மெய் பணரீதியான வளர்ச்சியினையும் மதிப்பிடுவதற்கு உதவுகிறது. இவ்வகையில் இக்கோட்பாடு ஆக்கக் காரணிகளை நிலம், முதல், உழைப்பு, முயற்சி என்பவற்றின் உடமையாளர்களை வீட்டுத்துறையினராகவும் (Household) அந்த உற்பத்திக் காரணிகளை உள்ளீடாகக் கொண்டு ஆக்க முயற்சியில் ஈடுபடும் முயற்சியாளர்களாக நிறுவனத்துறையினரையும் (Farm) கருதுகிறது இதன்படி உற்தியாக்கம் ஒன்று இடம் பெறுவதற்காக நிறுவனத்துறையினர் வீட்டுத்துறையினரிடம் இருந்து உற்பத்திக் காரணி சேவைகளான நிலம் உழைப்பு முதல் முயற்சி என்பவற்றை பெற்றுக் கொள்கின்றனர். இதற்காக வாடகை, கூலி, வட்டி, லாபம் என்ற காரணி வருமானங்கள் வீட்டுத் துறைக்கு பங்கிடப்படுகிறது. இக் காரணி வளங்களை பயன்படுத்தி நிறுவனத்துறையினர் முடிவுப் பொருட்கள் சேவைகளை உற்பத்திசெய்து அவற்றை வீட்டுத்துறை சேவைக்கென வழங்க அதற்காக வீட்டுத் துறையினர் முடிவுப்பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பனவு என்ற வகையில் ஆக்ககாரணிகள் மீது பெற்ற வருமானத்தை செலவிடுவர் நிறுவனத்துறை சார்ந்து தமக்கிடையே நிகழும் இடைநிலை கொடுக்கல் வாங்கல்களின் பாச்சல் தவிர்ந்த

வேறு எந்தவகையிலும். சுற்றோட்டபங்கீடு மாறாத நிலையில் இருக்கும், ஏடு கோள்களை அடிப்படையாக கொண்ட சந்தை மாதிரி ஒன்றில் ஆக்கசாதனங்கள் பரிமாறப்பட்டது மூலம் வீட்டுத்துறை பெற்றவருமானங்களும். அதனை கொண்டு நிறுவனத்துறையினரிடம் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்களை பெறுவதற்கென செலவிடப்பட்ட கொடுப்பனவுகளும் நிறுவனத்துறை சார்ந்து வெளியிடப்பட்ட உற்பத்தியும் ஒன்றுடன் ஒன்று மாறுபடாத நிலையில் இருக்கும் இதுவே வீட்டுத்துறை நிறுவனத்துறை என்ற இரு பிரிவினரிடமும் மாறி மாறி சுழன்று கொண்டிருக்கும் வருமான சுற்றோட்டம் ஆகும். இந்த அடிப்படையில்தான் தேசியவருமான கணிப்பீடு என்பதில் உற்பத்திவழி, வருமானவழி, செலவு வழி என்பவற்றின் நியாயப்பாடு நிரூபிக்கப்படுகிறது. கொடுப்பனவுகளுக்கான மாறுபாடு இல்லா நிலையில் வேறுபட்ட மாதிரிகள் மூலம் கணிப்பினும் அவை ஒரேவகையான முடிவை தருபவையாக அமையும் இவ்வகையில் வீட்டுத்துறை நிறுவனத்துறை என்ற இருதுறைகள் மாத்திரமே இயங்குகின்றது என்பதும் இரண்டு துறையினரிடையேயும் கடங்கலற்ற கொடுப்பனவுகள் இடம் பெறுகின்றன என்பதும் அரசதலையீடற்ற நிலையில் வரிவிதிப்பு, மானியம் வளங்கல், போன்ற கொடுக்கல் வாங்கல்களினால் சுற்றோட்ட மாறுதல் இடம்பெறவில்லை என்பதும் ஏனைய நாடுகளுடனான ஏற்றுமதி இறக்குமதி நடத்தை இடம் பெறாத மூடப்பட்ட நிலையில் இயங்குகிறது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

மேற்போந்த எடு கோள்களுடன் ஓர் பொருளாதாரம் இயங்கும்போது வருமானமும் செலவினமும் சமப்படுவதாகவே இருக்கும் எனினும் யதார்த்தத்தில் இது பொருந்தக் கூடியதாக இல்லாதனால் திறந்த நிலை பொருளாதாரமாகவும் அரச தலையீடும், வீட்டுத்துறையினரின் சுதந்திர நடத்தையும். அனுமதிக்கப்பட்ட நிலையில் நோக்கின் வீட்டுத்துறையினரின் வருமானத்தில் ஒரு பகுதி சேமிக்கப்படுவதனை காண முடியும் இது வெளிப்பாச்சலாக கருதப்படும் சேமிப்பு நிறுவனத்துறை சார்ந்து முதலீடாக மாறும் போது வருமான வட்ட உட்பாச்சலாக கருதப்படும் இதனுடன் அரசதுறை சார்ந்த நடத்தையினை நோக்கின் அரச மானியங்கள் உட்பாச்சலாகவும் அரசாங்க வரிகள் வெளிப்பாச்சலாகவும் அமையும் வெளிநாட்டு தொடர்புடைய திறந்தபொருளாதார நிலையில் ஏற்றுமதிகள் உட்பாச்சலாகவும் இறக்குமதிகள் வெளிப்பாச்சலாகவும் அமையும் எனவே தொகுத்து நோக்கின் தேசியவருமான வட்டப்பாச்சலில் சேமிப்பு, அரசாங்கவரிகள், இறக்குமதிகள் என்பன வெளிப்பாச்சலாகவும் முதலீடு, அ செலவுகள், ஏற்றுமதிகள் என்பன உட்பாச்சலாகவும் அமையும் இவ்வகையில் வருமான சுற்றோட்ட உட்பாச்சல்களும் வெளிப்பாச்சல்களும் ஒன்றுக்கொன்று சமப்படுமிடத்து சமனிலை தேசிய வருமானம் என்பது நிர்ணயிக்கப்படும் இதுவே தேசிய வருமான சமனிலை எனவும் அழைக்கப்படும் திறந்தசந்தை பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமான செலவு உற்பத்தி வழிகளில் கணிப்பிட முடியும். இவ்வாறான கணிப்பீடுகளில் இவற்றின் முடிவுகள் ஒன்றுக்கொன்று சமப்பட்டே காணப்படும் அடுத்து இக்கணிப்பீட்டு முறைகள் பற்றி நோக்குவோம்.

## தேசிய வருமான கணிப்பீட்டு மாதிரிகள்

தேசிய வருமானத்தை கணிப்பீடு செய்கின்ற மாதிரிகளாக உற்பத்தி வழி, செலவு வழி, வருமானவழி என்பன கணிப்பீட்டு மாதிரிகளாக காணப்படுகின்றன. வருமான வட்டப் பாச்சலின் சுற்றோட்ட சமனிலை என்பது மூலம் கொடுக்கல் வாங்கல்கள் சமநிலையில் காணப்படும். என்பதனால் இக் கொடுப்பனவுகள் சமப்பட்டே இருக்கும். என்பதனால் வீட்டுத்துறை பெற்றுக் கொண்ட காரணி வருமானங்களும் இக் காரணி வருமானங்களும் செலவிடப்பட்ட உற்பத்திகளும் உற்பத்திகளை பெற செல

விட்ட செலவினங்களும் ஒன்றுக்கொன்று சமனாக அமையும் என்பதனால் உற்பத்தி செலவு, வருமானம் என்பனவற்றில் ஏதாவது ஒன்றை மதிப்பிடுசெய்வதன் மூலம் தேசிய வருமானம் கணிப்பிடப்படலாம்.

உற்பத்திவழிக் கணிப்பீடு:-

ஒரு நாட்டின் பல்வேறுபட்ட ஆக்க காரணிகளும் உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டதன் மூலம் துறை சார்ந்த வகையில் மொத்த தேசிய உற்பத்திக்கு ஏற்படுத்திய அதிகரிப்பை துறை சார்ந்த வகையில் கூட்டிக் கணிப்பிடுவதனை இது குறித்து நிற்கின்றது. இதன்படி ஒரு பொருளாதாரத்தின் காரணிகளின் பயன்பாட்டு புலத்தின் தன்மையினை கொண்டு விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைத்துறை என மூன்று வகையாக பிரிக்கலாம் உற்பத்தியாக்கத்துக்கான காரணிகளின் பயன்பாடும். உற்பத்தி நுட்பமும் இவ்வகை பாகுபாட்டை தீர்மானிக்கும் துறைசார்பங்களிப்பின் மதிப்பீடு என்பது பொருளாதாரங்களின் அமைப்பினை புலப்படுத்தவும், காரணிச் சேர்க்கை, காரணிநயம், என்பனவற்றை பகுப்பாய்வு செய்யவும் அவசியமானதாகும் இலங்கையில் உற்பத்திவழிக் கணிப்பீடும் செலவுவழிக் கணிப்பீடுமே இடம்பெறுகிறது இதற்கென விவசாயம், கைத்தொழில் சேவைகள் என மொத்தமாக நடவடிக்கைகளாக வகைப்படுத்தியுள்ளது. துறைசார்ந்த ரீதியில் ஏற்படுத்தப்படும் அதிகரிப்பை கூட்டுவதன் மூலம் உள்நாட்டு வளங்களின் பயன்பாட்டின் மூலம் பெறப்பட்ட வெளியீட்டை கணிப்பிட முடியும் இது மொத்த உள்நாட்டு உற்பத்தி எனப்படும். உள்நாட்டு வளங்கள் வெளிநாடுகளில் உற்பத்தி முயற்சியில் ஈடுபடுவதன்மூலம் பெற்றுக்கொள்ளும் வருமானங்கள் வெளிநாட்டில் இருந்து கிடைத்த காரணி வருமானங்கள் எனப்படும்.

இது உள்நாட்டு பொருளாதாரத்தின் உற்பத்திக்கு அதிகரிப்பை கூட்டக்கூடியதாகும். இதே போலவே உள்நாடு சார்ந்தும் ஏனைய நாட்டு காரணிகள் உள்நாட்டு காரணிகளுடன் இணைந்து உற்பத்தி முயற்சியில் ஈடுபடலாம். இந்த நடவடிக்கைக்காக பெற்றுக் கொண்ட வருமானங்கள் குறித்த நாடுகளுக்குரியன என்பதால் இவை வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானங்கள் எனப்படும். வெளிநாட்டில் இருந்து கிடைத்தவற்றை கொடுத்தவற்றில் இருந்து கழிக்கவருவது வெளிநாட்டில் இருந்து கிடைத்த தேறியகாரணி வருமானம் எனப்படும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டில் இருந்து கிடைத்த தேறிய காரணி வருவாயை கூட்டவருவது மொத்த தேசிய உற்பத்தி ஆகும் மொத்ததேசிய உற்பத்தியில் இருந்து மூலதனத் தேய்மானங்களை கழிக்கவருவது தேறிய தேசிய உற்பத்தியாகும் ஆக்கசாதனங்களின் ஆக்க முயற்சியின் போது ஏற்படும் மெய் இழப்பை கழிப்பதன் மூலமே உண்மையான உற்பத்தியை கணிப்பிட முடியும் என்பதனால் தேறிய தேசியஉற்பத்தி முக்கியமானதாகும் உற்பத்தி வழிக்கணிப்பீட்டில் விலைகளை மையமாக கொண்டு காரணி விலையிலான கணிப்பீடு சந்தை விலையிலான கணிப்பீடு என்பன முக்கியம் பெறுகின்றன ஆக்கக் காரணிகளின் கொடுப்பனவுக்கான விலைகளில் கணிப்பிடும் போதும் காரணிவிலை கணிப்பீடு எனவும். காரணிவிலை தேசிய உற்பத்தியுடன் சந்தையின் நடத்தை தாக்கங்களை இணைத்து கணிப்பிடும் போது அது சந்தைவிலை தேசிய உற்பத்தி எனவும். அழைக்கப்படும். சந்தை நடத்தை கருவிகளான நேரில்வரி. மானியம், என்பனவற்றினால் விலையில் ஏற்படும் தாக்கங்கள் இதில் இணைக்கிருக்கும் இதன்படி காரணி விலைகளுடனான தேசிய உற்பத்தியுடன் தேறிய நேரில்வரிகளை கூட்டவருவது சந்தைவிலை தேசிய உற்பத்தியாகும். இதே போல வருமான பகுப்பாய்வு கணிப்பீடுக்கு இலகுவான வகையில் நடைமுறை விலைகளிலும் நிலையான விலைகளிலும் இதனை கணிப்பீடு செய்யமுடியும். நடைமுறையில் சந்தையில் காணப்படும் விலைகளில் மதிப்

பிடப்பட்டதே நடைமுறை விலை தேசிய உற்பத்தியாகும் இதுபணவீக்க பணச்சுருக்க விளைவுகளின் காரணத்தால் மெய்பெறுமானத்துக்கு வேறுபட்டு காணப்படலாம் இதனை தவிர்பதற்கு நிலையான விலைகளில் இதனை கணிப்பீடு செய்யமுடியும். நடைமுறை விலைகளிலான தேசிய உற்பத்தியை தேசிய உற்பத்தி சுருக்கியினால் பிரிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம் அதாவது;

$$\frac{\text{நடைமுறை விலை மொத்த தேசிய உற்பத்தி}}{\text{தேசிய உற்பத்தி சுருக்கி}} \times 100$$

தேசிய உற்பத்தி சுருக்கி என்பது நிலையான நடைமுறை விலைகளிலான தேசிய உற்பத்தியை நூற்று வீதமாக புலப்படுத்தும் ஒரு சுட்டியாகும். இதனைக் கணிப்பிட

$$\frac{\text{நடைமுறை விலை மொத்த தேசிய உற்பத்தி}}{\text{நிலையான விலை மொத்த தேசிய உற்பத்தி}} \times 100$$

உற்பத்தி வழியிலான தேசிய வருமான கணிப்பீடுகள் மூலம் துறைசார் பொருளாதார அமைப்பையும் கட்டமைப்பு மாற்றத்தையும் பொருளாதார உறுதிப்பாட்டையும் திறம்பட விளங்கிக் கொள்ள பயன்படுத்தப்படுவதுடன் வளப் பயன்பாட்டின் உத்தம நிலையையும் பொருளாதார நிலை மாற்றத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் புலப்படுத்த பயன்படுத்துவதனால் பொருளாதார திட்டமிடலும் பகுப்பாய்விலும் இக்கணிப்பீடு மிக முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது.

வருமான வழிக் கணிப்பீடு:

உற்பத்திக் காரணிகளின் உடைமையாளர்கள் தமது உற்பத்திக் காரணிகளை உற்பத்தி முயற்சியில் ஈடுபடுத்தியபோது பெற்றுக்கொண்ட வருமானத்தைக் கூட்டி கணிப்பீடு செய்வதே வருமான வழியிலான கணிப்பீடாகும். உள்நாட்டில் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்ட காரணிகள் பெற்ற வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பவற்றைக் கூட்டி வருவது மொத்த உள்நாட்டு வருமானமாகும். இதனுடன் குறித்த நாட்டின் காரணிகள் ஏனைய நாடுகளில் ஈடுபட்டு உள்நாட்டு பொருளாதாரத்துக்கு அனுப்புதல் செய்த வருமானங்களின் தேறிய பெறுமதியைக் கூட்ட வருவது மொத்த தேசிய வருமானமாகும்.

தேசிய வருமான கணிப்பீட்டு விலைகளின் அடிப்படையில் நடைமுறை விலை காரணி விலை என்பன முக்கியப்படுத்தப்படும் இது போலவே பணபெறுமானம் மெய்பெறுமானம் என்பனவும் பிரயோகிக்கப்படும் நிலையான விலையான மொத்த தேசிய வருமானத்துடன் ஏற்றுமதிகளால் வர்த்தகமாற்று விகிதத்தில் ஏற்பட்ட விளைவினை இணைத்து விடுவதன் மூலம் மெய் தேசிய வருமானம் என்பது பெறப்படும் ஏற்றுமதிகளால் ஏற்பட்ட வர்த்தக மாற்று வீத விளைவுகள் உண்மையான வருமானத்தை நிரணயிக்க கூடியனவாகும் தேசிய வருமானத்தினை கொண்டு தனி நபருக்கான வருவாய் என்பதனை கணிப்பிட முடியும் இதுவே தலாவருமானம் (Per Captia Income) என அழைக்கப்படும். குறித்த நாட்டின் மொத்த தேசிய வருமானத்தினை அந் நாட்டின் சனத்தொகையினால் வகுக்கவருவது தனிநபருக்கான வருமானம் ஆகும். இருந்த போதும், மெய் நிலையில் இவ்வருமானம் எல்லோருக்கும் எட்டப்படுவதில்லை வருமானப் பங்கீட்டின் சமமின்மை என்பது நிலவுவதனால் ஆக்க சாதனங்களின் உடைமையை பெருமளவில் கொண்டிருப்பவர்கள் அதிகளவு வருவாயினை பெற்றுவிடுவதனால் தலாவருமானம் எப்போதும் தனி நபருக்கான மெய்வருமானத்தில் இருந்து வேறுபடும் இதே போல செலவிடத்தக்க வருமானம், குடித்தனத்

LIBRARY
...KACHCHERI HINDU COLL...

றந்தான வருமானம் என்பனவும் வேறுபட்டு அமையும் தேசியவருமானம் அந்நாட்டு குடிமக்களின் வருமானம் எனினும் அதனுடன் மாற்றுக் கொடுப்பனவுகளும் அவர்களின் கொள்வனவு வலுவை அதிகரிக்கும் அதேபோல் கூட்டுவரிகள் பகிரப்படாத லாபம். சமூக பாதுகாப்பு உதவு தொகைகள் என்பன கொள்வனவு வலுவை குறைக்கும் இவ்வகையில் தேசிய வருமானம் என்பது எப்போதும் குடித்தனத்துறை வருமானத்துக்கு அமைவாக இருப்பதில்லை இதேபோல் செலவிடக் கூடிய வருமானம் என்பது குடித்தனத்துறை வருமானத்தில் இருந்து தனிநபர் வருமான வரிகளை நீக்கிய பின்னர் உள்ள வருமானமாகும்.

## செலவுவழிக் கணிப்பீடு:-

உற்பத்திக் காரணிகளின் உடைமையாளர்கள் தமது காரணிகள் மூலம் பெற்றுக் கொண்ட வருமானத்தை முடிவுப்பொருட்கள் சேவைகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யும்போது ஏற்படும் செலவீனங்களைக் கூட்டி கணிப்பீடு செய்வதனையே செலவு வழிக் கணிப்பீடு எனப்படும். செலவின ரீதியான கணிப்பீட்டில் மக்களின் பொருட்தெரிவு என்பது நுகர்வு நடத்தைக்கானதாகவோ, முதலீட்டு நடத்தைக்கானதாகவோ காணப்படலாம். எனவே மொத்த நுகர்வுச் செலவினையும் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தையும் கூட்ட வருவது மொத்த உள்நாட்டு செலவு ஆகும். மொத்த நுகர்வு செலவு என்பதனுள் அரசாங்கத்துறை சார்ந்து மக்கள் நலனுக்கான நடைமுறை செலவீனங்களையும் தனிநபர் நுகர்வுச் செலவுகளையும் கவனம் கொள்கிறது. மொத்த மூலதன ஆக்கம் என்பதனுள் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் இருப்புகளில் ஏற்பட்ட மாற்றம் என்பன கவனம் கொள்ளப்படும் மூலதன ஆக்கம் என்பது ஒரு வருடத்துக்கு மேற்பட்ட கால பயன்பாட்டை தரும் மூலதனம் சொத்துக்களின் கொள்வனவைக் குறிக்கும் இருப்புக்களின் மாற்றம் என்பது உணவு ஆணையாளர் திணைக்களம் மற்றும் வடிசாலை கையிருப்பு போன்ற இருப்புநிலை மாற்றங்களை தரும் உள்நாட்டு காரணிகளின் வெளியீடு மட்டும் அந்நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்வதில்லை என்பதுடன் உள்நாட்டு உற்பத்தி முழுவதுமே உள்நாட்டு பாவனைக்கென திறந்த பொருளாதாரத்தில் வழங்கப்படுவதில்லை என்பதனால் பொருட்கள் காரணியல்லா பணிகளின் ஏற்றுமதியையும் இறக்குமதியையும் நாம் கவனம் கொள்ள வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தேறிய பொருட்கள் காரணியல்லாப் பணிகளின் இறக்குமதியைக்கூட்டி மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவை மதிப்பிட முடியும். இதனுடன் வெளி நாட்டில் இருந்து கிடைத்த தேறிய காரணி வருமானத்தை கூட்டுவதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவைக் கணிப்பிட முடியும்.

திறந்த பொருளாதாரம் ஒன்றிலே வீட்டுத்துறை வருமானத்தில் ஒரு பகுதி சேமிப்பாக செல்லக்கூடும் சேமிப்பு என்பது நிகழ்கால நுகர்வினை பின்போடுதல் என்பதனால் மொத்த மூலவளங்களின் பயன்பாடு என்பதில் சேமிப்பு பங்கு கொள்வதில்லை ஓர் நாட்டின் மூலவளங்களின் கிடைப்பனவு என்ற வகையில் நோக்கின் மொத்த உள்நாட்டு உற்பத்தியூடாகவும் பொருட்கள் காரணியல்லா பணிகளது இறக்குமதியூடாகவுமே ஏற்படுகிறது. பொருட்களின் நுகர்வு மூலதனவாக்கம் பொருட்கள் காரணியல்லா சேவைகளின் ஏற்றுமதி என்ற வடிவங்களில் மூலவளங்கள் பயன்படுத்தப்படும்.

## முடிவுரை:-

தேசிய வருமான கணிப்பீடுகள் வேறுபட்ட மாதிரிகளினூடாக அளவிடப்படினும் அவை ஒரு நாட்டின் மெய்யான தகவல்களை வழங்குவது என கூறமுடியாது இரட்டைக் கணிப்பீட்டு தவறு என்ற வகையில் ஒரு நிறுவனத்தில் இடைநிலை பொருட்களை பிறிதொரு நிறுவனம் மூலப்பொருளாக கொள்ளும்போது இந்த ஒன்றுக்கு

மேற்பட்ட இடங்களில் ஒரே அளவு தொகை கணிப்பீடு செய்வதனை இது குறிக்கிறது. இதனை தவிர்ப்பதற்கென கூட்டப்பட்ட பெறுமதி முறை பயன்படுத்தப்படினும். இத்தவறு நிகழ சந்தர்ப்பங்கள் உள்ளன? இதனுடன் குடித்தனத் துறையினது மெய் வருமானத்தை உயர்த்தும் மாற்றுக் கொடுப்பனவுகள் பற்றிய சீரான அனுகுமுறை பேணப்படுவதில்லை இதனைவிட சம்பளம் பெறாத சேவைகள் என்ற வகையில் குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களின் கடமைகள் போன்ற சேவைகளை இக் கணிப்பீடு கவனம் கொள்வதில்லை பொருளாதார ரீதியில் எல்லாப் பண்டங்களும் சேவைகளும் மாற்றுப்பயன்பாடு உடயன என்பதினால் அவை அமையச் செலவை உடயனவாகும் எனவே இவ்வகை சேவைகளை கவனம் கொள்ளாதது குறைபாடாகும் இருந்த போதும் நாடுகளின் பேரண்ட பொருளாதார கொள்கைகளின் ஒழுக்கமைப்புக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இக் கணிப்பீடுகள் மிக மிக அவசியமானதாக உள்ளது.

# இலங்கையில் தனியார் மயமாக்கலும் மக்கள் மயமாக்கலும்

## PRIVATIZATION AND PEOPLIZATION IN SRI LANKA

செல்வன் ஞா. இன்பகரன்
ஆண்டு (94 A/L) 13
வர்த்தகப் பிரிவு

உலகில் 1980 களில் இருந்து பேசப்படுகின்ற ஒன்றாக தனியார் மயமாக்கல் என்பது காணப்படுகின்றது.

தனியார் மயமாக்கல் என்பது அரச துறை நிறுவனங்களை முழுமையாகவோ, அன்றி பகுதியாகவோ அல்லது முகாமையினையோ தனியாரிடம் ஒப்படைக்கின்ற செயற்பாடாகும். இத்தகைய பண்பானது முற்று முழுதாகவே தேசிய மயமாக்கலுக்கு எதிரான நடவடிக்கையாக அமைகின்றது.

இன்றளவில் தனியார் மயமாக்கலானது உலகில் பல நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருவதொன்றாகும், உதாரணமாக அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை நோக்கலாம்.

இலங்கையை நோக்குமிடத்து 1977 ஆம் ஆண்டில் அரசாக பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி தாராள பொருளாதாரக் கொள்கையையும், ஏற்றுமதி மேம்பாடு, செலாவணித் தளர்வு, என்பனவற்றையும் அமுல்படுத்தியது. அத்தோடு தனியார் மயமாக்கலின் முக்கியத்துவத்தையும், அரசு தனித்த வகையில் பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சிகளை ஏற்படுத்த முடியாதென்பதையும், உணர்ந்த வகையில் தனியார் மயமாக்கல் அமுலாக்கப் பட்டது. இதன் பிரகாரம் 1987 ஆம் ஆண்டில் 23 ஆம் இலக்க பொது கூட்டுத்தாபனங்களையும், அரசினால் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும், கம்பனியாக மாற்றும் சட்டம் 1987 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி கொண்டுவரப்பட்டது மேலும் தனியார் மயமாக்கத்தை விரிவுபடுத்த 1985 இல் நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பொருட்டு பாரிய முதலீடுகள் பயனளிக்க நீண்டகாலம் எடுக்கக்கூடியதும் இலாபத்தை உச்சப்படுத்துவதுமான துறைகளில் தனியாரை ஈடுபட அனுமதித்ததோடு, தனியார் தனித்த வகையில் முதலிட முன்வராத சமயம் அரசும் தனியாரும் சேர்ந்து கூட்டாக முயற்சிகளை ஆரம்பித்து தனியார் அன்னிய முதலீட்டை (ஈடுபாட்டை) கவர்ச்சியுடையதாக்கி செலாவணி உட்பாய்ச்சலையும், உற்பத்தி துறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### தனியார்துறை ஊக்குவிக்கப் படுவதற்கு பின்னணியாகவிருந்த காரணிகள்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் தனித்த வகையில் அரசு மட்டும் முதலீடு செய்து வந்தபோது பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வது கடினமாயிற்று. இதனாலேயே விரைவான பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்பன இடம்பெற தனியார் துறையின் ஒத்துழைப்பு வேண்டிய தொன்றாயிற்று. இதனால் தனியார் மயமாக்கல் ஊக்குவிக்கப்பட்டது. இதுவரை காலமும் அரச நிறுவனங்களின் அசமந்த நிலையும், திறனற்ற முகாமையும் நிர்வாகமும் கொண்டிருந்தமை திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் தொடர்ந்து ஏதேச்சையாக நட்டத்தை அனுபவிக்க அரச இலக்கு அடையப்படாமல் போனது. ஆனால் தனியாரின் தொழிற்துறை திறனுடையதாக செயற்படுவதை கண்ணூடு உணர முடிந்தது. இதற்கான காரணங்களாக,

1) சேவை நோக்கிலான அரச துறை அமைப்புக்கள் நட்டங்களையும் தோல்விகளையும் தழுவிக்கொள்ள மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியாமல் போனது: அதாவது மேலதிக ஊழியர்கள் நியமனம் பெற சிவப்பு நாடாத் தன்மை (Red Tope System) நிர்வாக மட்ட ஊழல் போன்றவை மக்களுக்கும், பொருளாதாரத்திற்கும் சிறந்த பலாபலன்களை அளிக்கவில்லை.

2) இந்த வகையில் அரசதுறை முதலீடுகளுக்கு நிதி திறைசேரியினால் வழங்கப்பட நிதிப்பழு அதிகரித்ததுடன் மீண்டும் மீண்டும் நட்டங்களில் இயங்க இத்துறைகள் அரசின் திறைசேறி நிதிகளை உறிஞ்சிக் கொள்ள அரசிற்கு பெரும் நிதிச்சுமையை ஏற்படுத்தியது.

3) 1977 ஆம் ஆண்டு நிலவிய அரசமுறை பொதுப்பண்டம் பொதுச் சேவைகளை வழங்காமையால் மக்களின் வாழ்க்கைத்தரம் பொருளாதார நெருக்கடி உருவாகின இதனை நீக்க தனியார் துறை ஒத்துழைப்பு வேண்டியதாயிற்று.

4) அரச பகிவை நீடிக்க. மக்களுக்கு மானியங்களை வழங்குவதால் அரசின் செலவு அதிகரித்தது. இதனால் செலவினம் அதிகரித்து நிதிப்பற்றாக்குறை தோன்றி பணவீக்கம், பணச்சுருக்கம் ஏற்பட்டது. இதனால் பொருளாதார முதலீடுகள் குறைந்தது. எனவே அரசின் அபிவிருத்தி செயல் இடை வெளியைக் குறைக்க தனியார் துறை அவசியமாயிற்று.

5) அரசதுறை அமைப்புக்கள் தோல்விகள் நட்டங்களை ஒழிக்க திணைக்களங்களை கூட்டுத்தாபனமாக மாற்றிய போதிலும் அவை சிறந்த தன்மையினைக் கொண்டிருக்கவில்லை. இவை அரசின் நிதிச்சுமையை அதிகரித்தது. எனவே தனியார் மயமாக்கல் அவசியமாயிற்று.

6) இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்குப் போட்டியாக தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் போன்ற போட்டி அமைப்புக்களை உருவாக்கி அரசு தன் இலக்கினை அடைய எண்ணிய போதிலும் மக்களுக்கு சிறந்த பயனை வழங்க முடியாது போனது இதனால் இரு நிறுவனங்களுக்கு நிதியீட்டம் செய்ய வேண்டிய நிலையும் அரசுகளுக்கு தோன்றியது. இதனால் தனியார் மயமாக்கல் நடவடிக்கையை அரசுமேற்கொள்ள வேண்டியதாயிற்று.

7) அரச முயற்சிகள் தேசிய உற்பத்திக்குப் போதிய பங்களிப்பை வழங்கா நிலையில் அரச திறைசேரியில் நிதிப்பழு ஏற்பட அதனை நீக்க வெளிநாட்டு உதவிகளை நாடி நிற்க அது சென்மதி நிலுவைப் பிரச்சனைக்கு வழி வகுத்தது எனவே இந்நிலையினைப் போக்க தனியார் மயமாக்கல் கம்பனி அமைப்புக்கள் சிறந்தகாக அமைந்தது. இது எதிர்காலத்தில் பாரிய முதலீட்டுத் திட்டங்களுக்கு வழி கோலின. இது பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சிகள் இடம் பெற உதவும் என்பதால் தனியார் மயமாக்கல் அவசியமாயிற்று.

இலங்கையின் அரசதுறை அமைப்புக்களில் நவீன தொழில் நுட்ப முறைகளோ அன்றி புதிய உற்பத்தி முறைகளோ, ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக்களும் குறைவாக அமைய நவீன வியாபார நடமுறைகளையும் அரசு பின்பற்றாமை போன்ற உள்ளகக் காரணிகள் தனியார் மயமாக்கலை விரிவு படுத்தின.

வெளியகக் காரணிகள் என்ற வகையில் நோக்குமிடத்து இலங்கை வளர்முக நாடாகையால் அபிவிருத்தி முறையில் ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உலக நலன்புரி கடன் வழங்கும் நிறுவனங்களின் உதவிகள் (கடன்) கை கொடுத்தன. இவ் உலக நலன்புரி கடன் வழங்கும் நிறுவனங்களின் அழுத்தமும் தனியார் மயமாக்கலுக்கு ஒரு முக்கிய காரணி எனலாம்.

LIB A
KACHCHERI HIND COLL

அதாவது சர்வதேச நாணய நிதியம் (IMF) உலகவங்கி (IBRD) சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IAD) என்பனவற்றிடம் தொடர்ந்து வரும் காலங்களில் ஏற்பட்ட பற்றாக்குறைகளுக்கு நிதியீட்டம் செய்வதற்கு இலங்கையானது கையேந்தி நின்ற போது பெருமளவு கடனை தொடர்ந்தும் வழங்க இவ்வமைப்புக்கள் முன் வரவில்லை. எனவே விதந்துரைப்புக்கள் என்ற வகையில் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட மாற்று ஆலோசனையாக இந்நிறுவனங்களின் கட்டாய உந்துதலின் பெயரிலும் அதனை ஏற்க வேண்டிய தன்மையை தற்போதைய அரசு கொண்டுள்ளதாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் இலங்கையானது உலக அமைப்புக்களிடம் பெற்ற கடன்களை மீளவும் செலுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றமை. இவ்வித நிலையால் மீளவும் மீளவும் இலங்கைக்கான கடன்களை வழங்க இவ் அமையங்கள் முன் வராத நிலை காணப்படுகின்றது. எனவே வேறு எவ்வித வழிகளும் இல்லாத நிலையில் அரசு தனியார் மயமாக்கலை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளானது. அதனூடாக மக்களிடம் இருந்தே முதலீட்டைப் பெற்று மக்கள் நலனையும், நாட்டு நலனையும், வளர்ச்சியையும், இட்டுச் சென்று ஏனைய உலக நாடுகளிடமோ, நிறுவனங்களிடமோ, தங்கியிருக்கும் நிலையினைத் தவிர்க்க னியார் மயமாக்கலை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

## தனியார் மயமாக்கலும் மக்கள் மயமாக்கலும் நடைமுறைப் படுத்தப்படும் ஒழுங்கு.

அரச தொழில் முயற்சிகளை தனியாரிடம் கையளிக்கும் போது கூட்டுத்தாபனம் அல்லது அரசதுறை அமைப்பு ஒன்றை 1983 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்திற்கமையவும் பொதுக் கூட்டுத்தாபனங்களையும் அரசினால் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் கம்பனியாக மாற்றும் சட்டத்திற்கமையவும் அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் மறு சீரமைக்கப்படும் (Resturefune) பின்னர் அது ஒரு பொதுக் கம்பனியாக மாற்றப்படும். இதன் பிற்பாடு அரச உடமை நீக்கப்படும். பின்னர் இவ் தொழில் முயற்சி கம்பனிச் சட்ட விதிகளின் படி கம்பனிப் பதிவாளரின் அனுசரணையின் கீழ் இயங்கி வரும்.

## மக்கள் மயமாக்கல் (Peoplization)

மக்கள் மயமாக்கல் என்ற பதம் இலங்கையில் பேசப்படுகின்ற தொன்றாக அமைகின்றது. அதாவது இலங்கை அரசு ஒரு மக்கள் ஆட்சியைக் கொண்ட ஒரு குடியரசாக விளங்குவதால் மக்களின் நலனை பெரிதும் பேணி வருவதொன்று. எனவே தனியார் மயமாக்கல் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தபோது மக்கள் தமக்கான சேவைகள் இலாப நோக்குடைய தனியார் வழங்காமல் போய்விடுவார்களா என்ற நிலை உருவெடுத்ததனாலேயே இம் மக்கள் மயமாக்கலானது தோற்றம் பெற்றது. ஏற்கனவே தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனத்தின் பங்குகளை ஊழியருக்கும் பொதுமக்களுக்கும் வழங்கும் செயற்பாடே மக்கள் மயமாக்கலாகும்.

தனியார் மயமாக்கலைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் குறிப்பாக 1990 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4 ஆந் திகதி அரசாங்கத்தின் பிரதான நிகழ்ச்சித் திட்டமாக "மக்கள் மயமாக்கல்" அறிமுகப் படுத்தப்படுவதாக ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து நோக்குவது என்னவெனில் இலங்கையில் தனியார் மயமாக்கலின் பின்னராகவே மக்கள் மயமாக்கல் அறிமுகப்படுத்தப் பட்ட தொன்றாகும். அத்துடன் மிக வெற்றிகரமாக அண்மை ஆண்டுகளில் இது நடைமுறையில் இயங்கி வருவதனை அவதானிக்கலாம்.

மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகள் விற்கப்படும் முறைகள் வருமாறு

1) கேள்விப்பத்திர முறையின் ஊடாக விற்பனை செய்தல் (Tender)

2) கொழும்பு சரக்கு முதல் மாற்று நிலையத்தின் ஊடாக விற்பனை செய்தல். இவ்வாறு அமைக்கப்பட்ட மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகளின் பங்குரிமை (Share Holding) பின்வருமாறு காணப்படும்:

1) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கம்பனிகளின் மொத்தப் பங்கில் 51% — 60% வரையான பங்குகள்.

2) ஊழியர்களுக்கு, அதாவது ஏற்கனவே கூட்டுத்தாபனங்களில் வேலை புரிந்த ஊழியருக்கு அவர்களின் சேவைக் காலத்துக்கேற்றபடி பங்குகளும்.

3) பொதுமக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 30% பங்குகளும் வழங்கப்படும்.

மேலும் இம்மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனியானது பொதுக் கம்பனியின் இயல்பை ஒத்ததாக இருக்கும் இக்கம்பனியின் பங்குகள் விற்பனை செய்யப்படும் வரை திறைசேரியின் செயலாளரிடம் காணப்படும்.

இலங்கையில் மக்கள் மயமாக்கலானது மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1) அரச நிறுவனம் மக்கள் மயப்படுத்தப்பட்டதன் பின் விரிவுபடுத்தும் நோக்குடன் பெரும்பாலான பங்குகளை கொள்வனவு செய்யும் ஆற்றல்கொண்ட நிதித் தொழில் நுட்ப வசதிகளைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு விற்னை செய்வதன் மூலம் பங்குரிமையைக் கையளித்தல்.

2) அரசதுறை நிறுவனத்தின் பங்குகளை ஊழியர்களை நிறுவனத்தில் அக்கறை கொள்ளும் முகமாக ஊழியர்களின் சேவை காலத்திற்கேற்ப இலவசமாக பங்குகளை வழங்குதல்.

3) அரச நிறுவனத்தின் பங்குரிமையைப் பரவலாக்கும் நோக்குடன் மக்களையும் நிறுவனத்துடன் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 30% மான பங்குகளை வழங்குதல்;

தனியார் மயமாக்கலுக்கும் மக்கள் மயமாக்கலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அவை இலங்கையில் நடைமுறைப் படுத்தும் காரணிகளைக் கொண்டு அவை பற்றிய கருத்துக்களை நோக்குகையில்

1) 1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கை செலாவணிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் வர்த்தகம் வளர்ச்சியுற்று வெளிநாட்டு முதலீட்டாளரை கவரக்கூடியதாக இருந்தமை;

2) அன்னிய முதலீட்டாளர்கள் நிறுவனங்களின் பங்குகளை பெருமளவில் கொள்வனவு செய்ய அதனூடாக பெருமளவு வேலை வாய்ப்புக்களை பெற முடிந்தது. உதாரணமாக தனியார் மயமாக்கலின் ஊடாக முதலாவது வர்த்தக வலயம் கட்டுநாயக்காவில் 1978 இல் ஏற்படுத்தப்பட்டபோது 72 தொழில் முயற்சியினூடாக 50,000 ற்கு மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது. இரண்டாவது வலயம் 1986 ல் பியகமவில் 28 தொழில் முயற்சிகளையும் 16000 பேருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கியது; மூன்றாவது சுதந்திர வர்த்தக வலயம் கொக்கலையில் 1991 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட போது ஒன்பது தொழிற் துறைகள் மேற் கொள்ளப்பட்டு 1300 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கியது.

3) அரசினால் தொழில் முயற்சி ஒன்றை மேற்கொள்ள எத்தனித்தும் செய்ய முடியாத நிலையிலான தொழில்களைச் செய்ய தனியார் மயமாக்கல் உதவும். உதாரணமாக இலங்கை அரசும், பிரித்தானிய அரசும், இணைந்து

British Ceylon Corparation ( Bcc ) போன்ற தொழிற் துறையை அரசு குறைந்தளவான மூலதனத்தை ஈடு படுத்தி மேற்கொள்ள தனியார் மய மாக்கல் சாத்தியமாகும்.

4) இலங்கை ஒரு ஜனநாயக நாடு ஆகை யால் மக்கள் தமது சொத்துரிமையை தனியார் மயமாக்கலின் ஊடாக அதி கரிக்க வாய்ப்பாயுள்ளது. இதுவும் தனியார் மயமாக்கலுக்கு ஒரு சாதக மான காரணியாகும்.

5: இலங்கையில் அரசதுறை அமைப்பி னூடாக முற்று முழுதாக வழங்க முடி யாத தேவையான வசதிகளை மக் களுக்கு தனியார் மயமாக்கலின் ஊடாக தனியாரும் சேர்ந்து வழங்க போட்டி அடிப்படையில் தரமான பொருட்கள் சேவைகள் மக்களுக்குக் கிடைக் கின்றன.

6 இலங்கையில் காணப்படும் தொடர்ச் சியான விலைமட்ட உயர்வினை நீக்க அரச துறையைப் போல் அல்லாமல் தனியார் துறை செலவினங்களை கட் டுப்படுத்துவதில் பெரிதும் அக்கறை காட்டுவதால் விலை மட்டங்கள் குறை வடையலாம்.

போன்ற காரணிகளால் தனியார் மய மாக்கலையும் மக்கள் மயமாக்கலையும் இலங்கையில் நடைமுறைப் படுத்துவ தற்கு சாத்தியமாக அமைந்தது;

## இலங்கையில் தனியார் மயமாக்கப்பட்ட நிறுவன அமைப்புக்களும் அதற்கான காரணங்களும்

| தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் | இலங்கை தனியார் மயமாக்கப்பட்டதன் காரணங்கள் |
|---|---|
| 1) புடவை உற்பத்தி நிலையம்<br>அ) துல்கிரிய 100% வியாங்கொட, வெள்ளவத்தை.<br>ஆ) பூகொட புடவை ஆலை (இந்தியாவின் லக்மி நிறுவனத்திற்கு 60% பங்கினையும் ஊழியருக்கு 10% பொதுமக்களுக்கு 30% வழங்கியுள்ளது) | பாரம்பரியமானதும், அத்தியாவசியமானதுமான அரசின் புடவைக் கைத்தொழில் அமைப்புக்கள் நட்டத்தில் செயற்பட்டதனால் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. |
| 2) பிறிமா ஆலை திருகோணமலை Prima Flour (Factory) | நாட்டு மக்களது உணவுத் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் உணவு உற்பத்தி தனியார் துறை முதலீட்டுக்கு இடமளித்தமை. |
| 3) அ) துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் 4 வலயத்தில் எண்ணெய் விதைகளைப் பயிரிடும் முயற்சியில் "சித்தி" நிறுவனம் முதலீடு செய்துள்ளது.<br>ஆ) இதேபோல் சிலோன் ரொபிக்கோ கம்பனி பயிர்ச் செய்கையில் முதலீடு செய்துள்ளது. | நாட்டு மக்களின் பாரிய அபிவிருத்தி முயற்சிக்கு தனியாரின் முதலீடுகள் தவிர்க்க முடியாதவையாக அமைந்தமை. |

| | |
| --- | --- |
| 4) அ) நக்குல, செவனகல, பெல்வத்த மொனறாகலை, சீனித் தொழிற். சாலைகளைக் குறிப்பிடலாம்.<br>ஆ) பால்பண்ணைத் தொழில் (நெஸ்லே லங்கா லிமிட்டட்) | இலங்கையின் விவசாயக் கைத்தொழில்கள் கிராமிய விவசாய விளை பொருட்களின் ஏற்றுமதி நோக்கிய சந்தைப்படுத்தலுக்காக தனியாரிடம் ஒப்படைத்தமை. |
| 5) அ) கல்வி - கொழும்பு தனியார் மருத்துவக் கம்பனி<br>ஆ) போக்குவரத்து - வீதி புகையிரதப் போக்கு வரத்தக்கு "விலமன் லிமிட்டட்". விமானப் போக்கு வரத்துக்கு "உபாலி நிறுவனம்" | பொதுச் சேவைகளைப் பொறுத்த வரையில் தனியார்துறை முதலீடு, சிறந்த சேவையினையும், கூடிய முக்கியத்துவத்தையும் கொண்டிருந்தமை. |
| 6) அ) ரெலிகொம் நிறுவனம். மூகவர் தபால் நிறுவனம்.<br>ஆ) மின்சாரம் - செங்கா எலக்ரிக்கல் பிரைவேட் லிமிட்டட்.<br>இ) காப்புறுதி - ஈகிள் இன்சுரன்ஸ் லிமிட்டட் சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி. | தொலைத் தொடர்பு அஞ்சல் அலுவலகங்கள் விரைவான சிறந்த தொழில் நுட்ப வசதியுடையதான சேவை வழங்க தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. |
| 7) மத்தேகம புடவை ஆலை. புத்தளம் சீமெந்து தொழிற்சாலை. | அரச தொழில் துறையில் மக்களின் பங்கினையும் ஏற்படுத்திக் கொள்ள மக்கள் மயப்படுத்தப்பட்டன. |

போன்ற அமைப்புக்கள் இலங்கையில் தனியார் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களாகவும் அதற்கான காரணங்களாகவும் உள்ளன

இலங்கையில் தனியார் மயமாக்கல் மக்கள் மயமாக்கலைமேற்கொள்வதன் சாதக பாதக நிலைமைகள்.

சாதக விளைவுகள்

1) வேறுபட்ட தொழில் முயற்சிகளை ஒப்படைப்பதன் மூலம் அரசு நிதிச் சுமைகளைக்குறைத் கடன்படுகைகளையும் தங்கியிருத்தல் நிலமைகளையும் குறைத்துக்கொள்ள முடியும்.

2) மக்கள் மயமாக்கல் நடவடிக்கையின் மூலம் ஊழியர்களுக்கு பங்குகளை வழங்கி அவர்களின் அந்தஸ்தினை உயர்த்தி நிறுவனத்தில் அதிக அக்கறை கொண்டவராக திறம்பட இயங்க வைக்க முடியும்.

3) மக்கள் மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் அரசியல் தலையீடு இன்றி இயங்குவதால் திறனான முகாமையினைக் கொண்டு திறம்பட இயங்க முடியும்.

4) தனியார் மயமாக்கலின் ஊடாக அன்னிய முதலீடுகள் வரவழைக்கப்பட்டு அன்னியச் செலாவணி உட்பாய்ச்சல், நவீன தொழில் நுட்பத்திறன் ஆகியவற்றைப் பெற முடிதல்.

5) தனியார் போட்டி அடிப்படையில் சிறந்த தொழில் முயற்சியை நடாத்துவதால் மக்கள் சிறந்த சேவையினைப் பெறமுடிதல்.

6) தனியார் மயமாக்கலால் தனியார் துறை வளர்ச்சியடைய அதனூடாக அரசின் வருமானம் அதிகரிக்க இது நாட்டின் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களுக்கும் பயன்பட வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது:

7) தனியார்துறை இலாப ரீதியில் செலவுகளை கட்டுப்படுத்துவதனால் பொருட்களின் விலை குறைவாக இருக்க வழி செய்யும். இது விலைமட்டத் தளம்பல்

LIBRARY
CHAVAKACHCHERI HINDU COLLEGE

அடையாமல் இருக்க பொருளாதார மாறிகளின் தளம்பலை தடை செய்யலாம்.

போன்ற தனியார்மயமாக்கலை மக்கள் மயமாக்கலின் பாதக நிலைமை எடுத்து நோக்கலாம்;

பாதக விளைவுகள்

1) தனியார்துறை இலாபம் ஈட்டுவதை நோக்கமாகக்கொள்ள வருமானம் கூடியவர்கள் பொதுப்பண்டங்கள் பொதுச் சேவைகளை அதிகளவில் நுகர வருமானம் குறைந்தோர் குறைந்தளவில் நுகர்வர். இது வருமான சமமின்மை வாழ்க்கைத்தர வேறுபாடு என்பவற்றை விரிவடைய செய்யும் இந்நிலையில் பொருளாதார வளர்ச்சி தடைப்படும்.

2) தனியார் அமைப்புக்கள் அதிக லாப நோக்கில் செயற்படுவதால் அதிக இலாபங்களை ஏற்படுத்திக் கொடுக்க தவறுகின்றன;

3) தனியார் மயமாக்களில் அன்னிய முதலீடுகள் அதிகளவில் காணப்பட ஈட்டப்படும் இலாபங்கள் வெளிநாடுகளுக்கே சென்றடையும் அன்னிய செலாவணி வட்டி இலாபம் என்ற வகையில் மூலதன வெளியேற்றத்திற்கு வழி செய்கின்றது.

4) இவ் அன்னிய முதலீடுகள் உள்நாட்டு ஊழியர் சுரண்டல், உள்நாட்டு மூலவளங்களின் சுரண்டலை ஏற்படுத்துவதோடு கலை கலாச்சார பாரம்பரியம் போன்றவை அழிவடைய வாய்ப்பை ஏற்படுத்துகின்றன.

5) தனியார்துறை அரசதுறை அமைப்புக்களை தம்வசம் ஆக்கும் பொழுது மானியவசதிகளை இழக்கின்றன இது பொருட்களில் விலை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லது

6) இலங்கை தனியார் மயமாக்கல் செயற்பாட்டால் அன்னியச்செலாவணி கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டியதோடு நவீன தொழில் நுட்பம் புதிய தொழில் நுட்பத்துடனான இயந்திர சாதனங்களின் பழுதுபார்த்தலுக்கு வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நிலை ஏற்படும்.

7) தனியார் மயமாக்கலின் தாராள இறக்குமதியால் பெருமளவு நுகர்வுப் பொருட்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட இது தங்கியிருத்தலுக்கு இட்டுச் செல்கின்றது. அத்தோடு உலக சந்தையில் மாற்ற ஏற்றுமதிப் பொருட்களின் விலையானது தன்னிச்சையாக நிர்ணயித்து உறுதியாக நிலைபெற முடியாது தளம்பலடைந்து காணப்படுகின்றன;

போன்ற காரணிகள் மக்கள் மயமாக்கல் தனியார் மயமாக்கல் செயற்பாட்டின் பாதக விளைவுகளாக காணப்படுகின்றது;

முடிவாக:

இலங்கையில் தனியார் மயமாக்கல் மக்கள் மயமாக்கல் செயற்பாட்டிற்கு இன்றைய நடைமுறை அரசு அதிக முக்கியம் கொடுக்காத சந்தர்ப்பத்திலும் 1993ம் ஆண்டுக்கு முற்பட்ட அரசு கூடிய முக்கியத்துவம் வழங்கி தனியார் மயமாக்கல் மக்கள் மயமாக்கல் செயற்பாட்டை இலங்கையில் விரிவடையச் செய்துள்ளது இந் நடவடிக்கை 1993ம் ஆண்டில் அதிக முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தவகையில் தனியார் மயமாக்கல் என்ற உலகளாவிய செயற்பாடானது இலங்கையில் மக்கள் மயமாக்கப்படல் என்ற வகையில் செயற்படுத்தப்படுகின்றது. இது இலங்கை போன்ற வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் நயப்பாடுகளையும் தீமைகளையும் ஒருங்கே கொண்டமைந்துள்ளது பெருமளவில் இந் நடைமுறை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கே பொருத்தமானதொன்றாக கொள்ளலாம். ஏனெனில் வளர்முக நாடுகளில் பெருமளவான மக்களின் வருமான வாழ்க்கைத்தரம் குறைவாக உள்ளது. இது தனியார் முதலீட்டு குறைவையே உணர்த்தும். எனவே தனியார் மயமாக்கல் மக்கள் மயமாக்கல் நடவடிக்கையானது வளர்முக நாடுகளுக்கு உருவாக்கத்தின் போது பெருமளவு நன்மை உடையதாகவும். பின்னர் வழமைக்குத் திரும்பும் நிலையும் உள்ளது எனலாம்.

# பிரித்தானியாவின் இரும்புருக்குக் கைத்தொழில் வளர்ச்சியின் அண்மைக்காலப் போக்குகள்

தளையசிங்கம் ரவீந்திரன் B.A. (Hons)
உதவி விரிவுரையாளர்,
புவியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

இன்றைய உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளுள் பிரித்தானியாவும் ஒன்றாகும். இது ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கு ஓரத்தில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவாகும்.

பிரித்தானியாவின் கைத்தொழில் வளர்ச்சியில் இரும்புருக்குக் கைத்தொழில் மிகவும் முக்கியமானது. இந் நாடானது 19 ம் நூற்றாண்டின் இறுதிவரை முதன்மையான நாடாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது. உலகெங்கும் காலனித்துவ நாடுகளைக் கொண்டிருந்த பிரித்தானியாவுக்கு இரும்புருக்கு கைத்தொழிற் பொருட்களை இலகுவாக விற்றுப் பெரும் வருவாயைப் பெற முடிந்தது. இத்துடன், 19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி, இலகுவான புகையிரதப்போக்குவரத்து, தொழில்நுட்ப மாற்றங்கள் முதலானவை பிரித்தானியாவின் இரும்புருக்கு கைத்தொழிலில் செல்வாக்குச் செலுத்தின.

1870 இல் பிரித்தானியாவிலும் 1890 இல் ஐக்கிய அமெரிக்காவிலும், 1983இல் ஜேர்மனியிலும், 1934 இல் சோவியத் சமவுடைமைக் குடியரசிலும், 1971 இல் பிரான்சிலும் யப்பானிலும் இரும்புருக்கு கைத்தொழில் வளர்ச்சி அடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பிரித்தானியாவின் இரும்புருக்கு உற்பத்தி யப்பானின் இரும்புருக்கு உற்பத்தியிலும் பார்க்க 4 மடங்கு மிகவும் அதிகமாகும். காலனித்துவ நாடுகளை நிர்வகிக்கவும், போர்களில் ஈடுபடவும், சிறந்த போர்க்கப்பல்கள் தேவைப்பட்டமையினால் இரும்புருக்குக் கைத்தொழில் உச்ச வளர்ச்சியடைய வாய்ப்பு உண்டாயிற்று. கப்பல்களைக் கட்டுவதற்கு இரும்புருக்கு அதிகமாகத் தேவைப்பட்டது.

கைத்தொழிற் புரட்சியின் பிரதான கூறாக இரும்பும் நிலக்கரியும் அமைந்திருந்தது. 1870 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இரும்புருக்கு மையங்கள் காடுகளை அண்டியே (Forest-Land) காணப்பட்டது. காரணம், ஆரம்ப காலங்களில் இரும்புத்தாதை உருக்க மரக்கரி (Chacoal) பயன்பட்டது.

19 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானியாவின் நிலக்கரி வயல்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால் இரும்புருக்கு கைத்தொழில் பாரியமாற்றத்துக்குட்பட்டது. உதாரணம்: ஒரு மெற்றிக்தொன் இரும்பை உருக்க 14 மெற்றிக் தொன் நிலக்கரி வலுவாகப் பயன்படுத்தப்பட்டமையால் இரும்புருக்கு மையங்கள் யாவும், நிலக்கரி வயல்களை நோக்கி நகர்த்தப்பட்டன

பிரித்தானியாவின் இரும்புருக்கு கைத்தொழில் வளர்ச்சியினை பிரதானமாக நான்கு கட்டங்களாக வகுத்து நோக்கலாம். அவையாவன:

1. 1870 - 1930
2. 1930 - 1945
3. 1945 - 197
4. 1970 பிற்பட்ட காலம் - 1970 1990

## 1870 - 1930

பெரிய பிரித்தானியாவில் நிலக்கரி வளம் இருக்கின்ற அளவுக்கு இரும்புத்தாது வளமில்லை. இரும்புருக்குக் கைத்தொழில் 2 வகையில் நோக்கப்படும்.

1. உருக்குதல்
2. இரும்புப்பாளங்களை உருவாக்குதல்

1870ற்கு பின்பு (Abraham Jtardv) என்பவர் இரும்புத்தாதை உருக்க நிலக்கரி பயன்படுத்த முடியும் எனக் கூறியதும் (Bessemer) என்பவர் மிகப்பாரிய அளவில் இரும்புத்தாதை உருக்கப் புதிய முறையை அறிவித்ததைத்தொடர்ந்து இரும்புருக்குக் கைத்தொழிலானது முன்னேற்றம் கண்டதுடன் வளர்ச்சியும் அடைந்தது. இக்காலப் பகுதியில் கடற்படைக்குத் தேவையான பீரங்கிகளையும், பீரங்கிக் கப்பல்களையும் கட்டுவதற்கே இரும்புருக்கு பெரும்பாலும் பயன்பட்டது.

## 1930 1945

இக்காலப்பகுதியில் பெரிய பிரித்தானியாவின் பொருளாதார வீழ்ச்சி உள்நாட்டில் இரும்புருக்கு கைத்தொழில்களைப் பாதித்ததுடன், வெளிநாடுகளில் இரும்புருக்கு உற்பத்திக்கான கேள்விகளையும் குறைத்தது எனலாம். நிலக்கரி வயல்களை யண்டியுள்ள இரும்புருக்குக்கைத்தொழிற் சாலைகளில் அவற்றின் உற்பத்தித்திறனிலும் வீழ்ச்சி காணப்பட்டது.

## 1945 - 1970

பிரித்தானியாவின் இரும்பு நிலக்கரிச் சுரங்கங்கள் யாவும் இன்று முடியும் தறுவாயில் உள்ளது, பல தொழிற்சாலைகள் பிரித்தானியாவின் கரையோரப்பிரதேசங்களை நோக்கி நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதே நேரம் ஏனைய நாடுகளில் இருந்து இரும்புத்தாதை இறக்குமதி செய்வதும் இலாபகரமானதாகக்காணப்படுகிறது. சிறந்த கப்பல் போக்குவரத்து மூலவளங்களின் இறக்குமதிச்செலவை கணிசமான அளவு குறைத்துள்ளது.

பின்வரும் அட்டவணையானது மொத்த தேசிய உற்பத்தியில் இரும்புருக்குக் கைத்தொழிலின் வருமானத்தைப்புலப்படுத்தி நிற்கின்றது.

அட்டவணை 1

| ஆண்டு | மொ. தே. உற்பத்தி (இரும்புருக்குக்கைத்தொழில் வருமானம்) |
|---|---|
| 1805 | 5.9 |
| 1851 | 6.2 |
| 1907 | 6.5 |
| 1946 | 12.7 |
| 1957 | 21.7 |
| 1968 | 36.5 |

1957ல் 4 60,000 பேர் இரும்புருக்குக் கைத்தொழில் மூலம் வேலைவாய்ப்பை பெற்றிருந்ததுடன், 1959ல் 3.2 மில்லியன் தொன்னும் 1963 இல் 3.6 மில்லியன் தொன்னும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் உருக்கு (Steel) இரும்புப்பாளங்கள், எந்திரவியற் பொருட்கள், எந்திர சாதனங்கள் முதலியன உள்ளடக்கியிருந்தன.

பிரித்தானியாவின் இரும்புருக்கு உற்பத்தி - பிரதேசரீதியான உற்பத்தி வீதத்தில்

Steel Production of the United Kingdom.

Regional Steel Production. %

| இடங்கள் | 1913 | 1950 | 1965 | 1980 |
|---|---|---|---|---|
| தெற்கு வேல்ஸ் | 24 | 21 | 25 | 25 |
| வடகிழக்கு | 27 | 21 | 18 | 17 |
| செவ்வீற் | 11 | 14 | 12 | 13 |
| லங்காசயர் | 08 | 13 | 14 | 12 |
| லிங்கன்சயர் | 03 | 10 | 12 | 12 |
| ஸ்கொட்லாந்து | 10 | 15 | 12 | 12 |
| மேற்கு மிட்லாந்து | 05 | 05 | 07 | 07 |

Source: Year Book = 1988 — 1989

பெரும்பாலான இரும்புருக்கு மையங்கள் யாவும் நிலக்கரி வயல்களையண்டியே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று உலகின் 9 வது இரும்புருக்கு உற்பத்தி நாடாகப் பிரித்தானியா திகழ்கின்றது. இங்கு உற்பத்தி செய்யப்படும் இரும்புருக்கு உற்பத்திப்பொருட்களில் 65 % மானவை உள்நாட்டு நுகர்வாகும். இவ்விரும்புருக்கு கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டே கப்பல் கட்டும் தொழில், மோட்டார்வாகனக் கைத்தொழில் முதலிய பாரிய பருமப்படியாகக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன.

## 1970 - 1990

இக்காலத்தில் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட மாற்றம், போக்குவரத்தில் ஏற்பட்ட மாற்றம், வலுப்பொருட்களில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, இரும்புருக்கு மையங்கள் கரையோரங்களை நோக்கி நகர்த்தப்பட்டன. 20ம் நூற்றாண்டில் மூல வளங்கள் இறக்குமதி செய்யப்பட்டதுடன் ஸ்பெயின், சுவீடன், வட ஆபிரிக்கா, பிரான்ஸ், வெனசுவெலா, கனடா முதலிய நாடுகளிலிருந்து இரும்புத்தாது இறக்குமதி செய்யப்பட்டது. இதற்குரிய அடிப்படைக் காரணம் பிரித்தானியாவின் சிறந்த கப்பற்போக்குவரத்தே காரணமாகும்.

இன்று இரும்புருக்கு மையங்கள் யாவும் துறைமுகங்களிலேயே அமைந்துள்ளன.

1970 1990 காலப்பகுதியில் இரும்புருக்குக் கைத்தொழிலன்றி இரும்பும் உருக்குமே (Steel & Pig Pig Iron) முக்கியமான இடத்தினை வகித்தது எனலாம்.

பின்வரும் அட்டவணை இதனை விளக்குகிறது.

| ஆண்டு | பன்றியிரும்பு Pig Iron | பதனிடப்படாத உருக்கு Grude Steel | பூர்த்தியாக்கப்பட்ட உருக்கு F. Steel Products |
|---|---|---|---|
| 1975 | 12 . 131 | 20 . 098 | 9 . 498 |
| 1976 | 13 . 835 | 22 . 274 | 9 . 673 |
| 1977 | 12 . 232 | 20 . 411 | 7 . 784 |
| 1978 | 11 . 434 | 20 . 311 | 10 . 690 |
| 1979 | 12 . 674 | 21 . 474 | — |
| 1980 | 12 . 790 | 23 . 236 | — |
| .984 | 9 . 563 | 15 . 120 | 11 . 451 |
| 1985 | 10 . 458 | 15 . 722 | 11 . 855 |
| 1´86 | 9 . 785 | 14 . 730 | 12 . 14 |
| 19°7 | 12 . 110 | 17 . 425 | — |
| 1988 | 14 . 648 | 16 . 730 | 14 . 264 |
| 1989 | 14 . 880 | 16 . 467 | 14 . 476 |
| 1990 | 14 . 740 | 17 . 500 | 14 . 700 |

Source: Britain an official hand Book (000 Metric Tons)

1. Pig Iron — பன்றியிரும்பு
2. Grude Steel — பதனிடப்படாத உருக்கு
3. Finished Steel Products — பூர்த்தியாக்கப்பட்ட உருக்கு

மேற்படி அட்டவணையில் இரண்டினதும் உற்பத்தியும் அதிகரித்து வருவதனைக் காணலாம். பெரிய பிரித்தானியா உலக உற்பத்தியில் 6 வீதம் இரும்புத்தாதை வைத்துள்ளது. ஆனால் இரும்புருக்குக் கைத்தொழிலில் 9 வது இடம் வகிக்கிக்கக்காரணம் சிறந்த கப்பல் போக்குவரத்தே எனலாம். இன்று எக்ஸ் வின் தொடங்கி சவுத்ஷ்லட்ஸ் வரையுள்ள 7 மைல்களுக்கு உள்ளே ஏராளமான கப்பல்கட்டும் தொழிற்சாலைகள் இரும்புருக்கு மையங்களை நோக்கியே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் இரு தன்மைகளை நோக்கலாம்.

1. அரசதலையீடு
2. தேசியமயமாக்கல்

பிரித்தானியாவின் இரும்புருக்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்ய அரசதலையீடு மிகவும் அவசியமாயிற்று எனலாம் ஆரம்பத்தில் 13 பாரிய இரும்புருக்கு கம்பனிகள் காணப்பட்டாலும்கூட அவை தனியார் வசமே இருந்தது.

உதாரணம்: வேல்ஸ் இரும்புருக்குக் கம்பனி

பல கம்பனிகள் 1949 ஆம் ஆண்டில் 'இரும்புருக்குச்சட்டம் 1949' (1948 Iron & Steel Act) என்னும் பெயரில் தனியார் வசம் இருந்த பெரும்பாலான கம்பனிகள் அரச உடமையாக்கப்பட்டாலும்கூட 1967 இல் உருக்குத் தொழிலில் 90 வீதம் பிரித்தானிய உருக்குக்கூட்டுத்தாபனம் என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்டது. 200 பெரிய கம்பனிகளும் 40 சிறிய கம்பனிகளும் இதனுள் உள்ளடங்கிக்காணப்பட்டன. அரச தேசியமயமாக்கல் பின்வரும் தன்மையில் அமைந்திருந்தது.

1) உற்பத்தியை பன்முகப்படுத்தல்
2) இரும்புருக்கு உற்பத்தியை 20 ம் நூற்றாண்டின் முடிவில் 33 மில்லியன் அதிகரித்தல்.
3) கடற்போக்குவரத்து மூலம் இரும்புத்தாதை பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும்பொருட்டு பாரிய வர்த்தக கப்பற்போக்குவரத்தை விருத்தியாக்கல்
4) மின்சாரத்தால் இயக்கப்படும் இரும்புருக்கு ஆலைகளையும், இரும்பித்தாது சுத்திகரிப்பு ஆலைகளையும், நவீனமயப்படுத்தல், உதாரணமாக ஸ்கொட்லாந்துப் பிரதேசத்திலுள்ள ஆலைகளைக் குறிப்பிடலாம்.
5) புதிய பல இரும்புருக்கு மையங்களை ஸ்தாபித்தல்.

   உதாரணம்: ரீஸ்தென்கரை.
6) நவீனமயமாக்கலின்கீழ் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
7) உருக்கு ஆலைகளை நவீனமயமாக்க அல்லது அதன் அமைவிடத்தை மாற்றவோ முயலும்போது அப்பிரதேசத்தில் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சி. வேலையின்மை முதலியன ஏற்படாத வாறுமாற்ற நடவடிக்கை எடுத்தல்.

   உதாரணம்: மேற்கு மிட்லாந்து வடமேற்குப்பிரதேசம்.

இன்று இரும்புருக்கு உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரித்தானியா 9 வது இடத்தை வகிப்பதுடன், 1988 இல் பிரிட்டனின் மொத்த ஏற்றுமதியில் 16.7 மில்லியன் பெறுமதியான இரும்புத்தாதினை ஏற்றுமதி செய்தது மேற்கு ஐரோப்பாவின் இரும்புருக்கு உற்பத்திசெய்யும் நாடுகளில் பிரித்தானியா 46 வது இடத்தை வகிப்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவானது நாடுகள், குழாய்கள் துருப்பிடிக்காத பாரிய பொறிகளுக்குத் தேவையான அனைத்து உருக்குப் பாளங்களையும் உற்பத்தி செய்கிறது. 1991 இல் 6.2 மில்லியன் தொன் உருக்கு ஏற்றுமதி செய்து 593 மில்லியன் பவுண்ஸை வருமானமாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இன்று பிரித்தானியா இக் கைத்தொழிலில் பாரிய பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றது எனலாம்.

1 இரும்பை உருக்க (ஒட்சிசன்) Oxygen) L. D. Process மின்சாரத்தால் இயங்கும் உலைகள், மேற்படி கைத்தொழிலில் புகுத்தப்பட்டதனால் பலர் வேலை

வாய்ப்பு இழந்தனர். இதனால் பொருளாதார மாற்றம், பொருளாதார வளர்ச்சி பின்னடைவு முதலானவை ஏற்பட்டன.

2. ஐரோப்பியச் சந்தையில் பிரித்தானியாவின் இரும்புருக்கிற்கு இருந்த போட்டியில் அல்லது கேள்வியில் வீழ்ச்சி காணப்பட்டது.

   உதாரணம்: மேற்குஜேர்மனியிடம் இருந்து வந்த போட்டி

3) பெரும்பாலான இரும்புருக்கு உற்பத்திப் பொருட்கள் யாவும் பொதுநலவாய (Common Wealth) நாடுகளிக்கே ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால் கிடைக்கும் வருமானத்தில் வீழ்ச்சி

4) பெரும்பாலான கம்பனிகள் அரசு உடமையாக்கப்பட்டமையால் சரியான கவனிப்பு இல்லாமல், உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டது.

முதலிய பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியே வருகின்றது. எனினும் பிரித்தானியாவின் பதனிடப்படாத உருக்கு உற்பத்தி 78 வீதம் ஆகும். இதன் உருக்கு உற்பத்திப்பொருட்களாக, தகடு, பாரமான பொருட்கள், குழாய்கள், துருப்பிடிக்காத பொருட்கள், கைத்தொழில் நிறுவனங்களுக்கான பொறியியல் பொருட்கள், உருக்கு வயர், வயர்க்கம்பிகள், கட்டுமானப் பொருட்கள் போன்றனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றை உருவாக்கும் முக்கிய மையங்களாக ஸ்கொட்லாந்து, வேல்ஸ்மிட்லாந்து, லங்காசயர், யோக்சயர் வட இங்கிலாந்து என்பன காணப்படுகின்றன.

இன்று பிரித்தானியா ஐரோப்பிய இரும்பு உருக்கு சமுகத்தில் ஓர் அங்கத்துவ நாடாக உள்ளமையால் ஏனைய நாடுகளுடன் கூட்டுறவு நடவடிக்கையினை பேணி இரும்புருக்குக்கைத்தொழிலை வெற்றிகரமாக முன்னேற்றி வருகின்றது. அத்துடன் அரசினால் கிடைக்கின்ற மானியம் நீண்ட, குறுங்காலக் கடன்களை கட்டுப்படுத்தி வேறு நாடுகளில் வலு போக்குவரத்து, தொழிலாளர்செலவு, பராமரிப்புச்செலவு போன்றவற்றிற்கு மறைமுக உதவி வழங்கியதன் மூலம் இந்நிலையைப் பேணுகின்றது.

அண்மையில் பிரித்தானியாவின் இரும்புருக்குக் கைத்தொழில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. பல்வேறு விரிவான செயல் திட்ட நடவடிக்கைகள். முற்றுமுழுதான இயந்திரமயமாக்கல், அயல் நாடுகளிலான கனியவளக்கொள்வனவு போன்ற பல சிறப்பான நடவடிக்கைகள் மூலம், அனேக நிறுவனங்கள் இலாபகரமாக இயங்குகின்றன. இவ்வகையில் கைத்தொழில் சிறப்பான மாற்றங்கள் ஏற்பட்டமையால் அதன் வளர்ச்சி மேலும் விரிவடையும் என்பது திண்ணம்.

# புவியியல்

## மண்ணின் விருத்தி, குறுக்கு வெட்டுமுகம், அதன் வகைகள்

செல்வன். மா. தயாகுமரன்
வர்த்தகப் பிரிவு
ஆண்டு 94 C

---

### மண் விருத்தி

பாறைகளின் மிகச் சிறிய துணிக்கையே மண்ணாகும் மண் சிக்கலான தரை அமைப்பு இரசாயன செயற்கை தாவரவியற் தொழிற்பாடு கொண்ட பலமான இயற்கை வலயத்தில்தோன்றுகின்றது இரசாயனபொறிமுறைகள் மூலம்பிரதான தாய்ப் பாறைகள் சிதைவுறுவதால் மண் உருவாகும் இரசாயனமுறை என்பது ஒருகுறிப்பிட்ட இரசாயனப்பொருள தாய்ப்பாறையில் உள்ள கனிப் பொருளுடன் இணையும் போது ஆற்றல் மிக்க தொரு புதிய இரசாயன சேர்க்கையை உருவாக்குகின்றது இப் புதிய சேர்க்கையால் பாறைகள் சிறுசிறு துணிக்கைகளாகவோ கரைசல் பொருளாக மாறி நாளடைவில் மண்ணாகின்றது. இதுவும் பலவழிகளில் நடைபெறலாம் வழிமண்டலத்தின் ஊடாக புவியை வந்தடையும் மழை நீரானது சுண்ணாம்பு கற்பாறையில் விழும்போது காரநீர் அமிலமாக மாறுகின்றது. அமிலம் அரிக்கும் தன்மை கொண்டது. இவ்வரிக்கும் தன்மையினால் தாட்செல் என்னும் பாறையை அரித்துக் கரைசலாகி இக்கரைசல்கள் நீர்வற்றியதுடன் மண்ணாக பெரும்பாலும் செம்மண்ணாக மாறுகின்றது.

வழிமண்டலத்தில் உள்ளபல வகையான வாயுக்கள் இரசாயன கனிப்பொருட்களுடன் இணையும் போது பல்வேறு வகையான அமிலத்தன்மை பெறுகின்றது. இவ்வமிலங்கள் பாறையைக் கரைத்து இறுதியில் மண்ணாக மாறுகின்றது. தாய்ப்பாறை அல்லது அடித்தளபாறை பலவித கனிப் பொருட்களின் சேர்க்கையால் உருவான தாகையால் புவியின் காலநிலைபிபற் தாக்கத்தினால் தொடர்ச்சியான மாற்றங்களிற் குள்ளாகின்றது. உதாரணமாக பகல் நேர வெப்ப நிலையின் போது பாறையில் உள்ள கனிப்பொருட்கள் விரிவடைகின்றன. இரவு வேளைகளில் சுருங்குகின்றன தொடர்ச்சியான ஒழுங்கற்ற விரிதல் சுருங்குதலிற்கு உள்ளாகும் பாறை நாளடைவில் பல்வேறு துணிக்கைகளாக மாறி இறுதியில் மண்ணாக மாறுகின்றது.

தாவரங்களும் விலங்குகளும் மண்ணின் உருவாக்கத்திற்குக் காரணமாகின்றது. இவை பௌதீக இரசாயன மாற்றங்களிற்கு உதவுகின்றன, பாறையில் உள்ள சிலிக்கன் தாவரங்களின் தன்மைக்கு ஏற்ப உருமாற்றம் பெற்று இறுதியில் மண்ணாகின்றது. நிலத்திலுள்ள மண்புழு எண்ணற்ற நுண்ணுயிர்கள் மண்ணைத் துளைத்தும் உட் சென்றும் மண்ணின் விருத்திக்கு உறுதுணையாகின்றன தாவர வேர்கள் கீழ் நோக்கிச் செல்வதால் மண்ணை பெருமளவில் உருவாக்குகின்றன.


மண்ணாக்கம் தாய்ப்பாறையில் தொடர்ச்சியாக இடையறாது நடைபெறுவதால் மண்ணை உயிர் உள்ள பொருள் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். மண் தாவர வளர்ச்சிக்கு பல வழிகளில் உதவுகின்றது

விதைகள் அரும்பவும் வளர்ந்த தாவரங்களிற்கு நின்று விளங்கத் தேவையான ஆதாரமாகவும் ஈரத்தன்மையை சேமித்துவைத்து தாவரங்களிற்கு அளிப்பனவாகவும் உணவை சேமித்து வழங்குவதாகவும் விளங்குகின்றது

மண்ணின் குறுக்கு வெட்டுமுகம்:
மட்பக்கப்பார்வை

மண்ணை அதன்பார்வைகளில் மூன்று பிரதான படைகளாக அறிஞர்களால் வகுக்கப்பட்டுள்ளது. A, B, Cஎன்பன அவையாகும் மண்ணின்மேற்படை A படையாகும் இது சிலவேளைகளில்

$A_0$ $A_1$ $A_2$ என உபபிரிவுகளாகப் பிரிகலாம் நடுப்படை Bபடையாகும் Aபடையும் Bபடையும் உண்மையான மண் ஆகும் அடியில் உள்ளபடை Cபடையாகும். இது மூடுபாறையின் தன்மையைக் கொண்டது.




Aபடையில் அதி உயர்படையான $A_0$ படை தாவரத்தினால் மூடப்பட்டிருக்கும் தாவர வேர்கள் காணப்படும் தாவர கழிவுகளை கொண்டதாக பெரிதும் காணப்படும் மக்குகள் இருக்கும் Aபடையானது சேதன உறுப்புக்களை அதிகம் கொண்டிருக்கும்

$A_2$ படை மென்நிறமானதாகவும் அதிகம் உரிவழிதற்கு உட்பட்டதாகவும் காணப்படும் கனிப்பொருள் உப்புக்கள் கழுவப்பட்டிருக்கும் பொதுவாக Aபடையில் தாவரம் போர்த்திருப்பதில் அரித்தல் தடைப்படும்.

Bபடையில் நுண்மையான துணிக்கைகள் படிந்திருக்கும் Aபடையில் இருந்து நழுவிய நுண் துணிக்கைகள் இப்படையில்காணப்படும் Aபடையைவிட நிறத்தில் மென்மையானது மண்ணிறம் சிவப்பு அல்லது மஞ்சள் நிறமானது நீர்மட்டம் நிலைமாறும் பகுதியாக இது உள்ளது.

Cபடையானது A Bபடைகளில் தாய்ப்பாறை ஆகும் இது அதிகம் வாணிலையால் அழிதலுக்குட்பட்டிருக்கும் உடைந்த பாறைத்துண்டுகளை கொண்டதாகவும் இரசாயன வாணிலை அழிதல் நிகழும் படையாகவும் உள்ளது நீரை உட்புக விடாப்படையாக சிலவேளைகளில் இருக்கும்.

மண்வகைகள்

மண் பலவகைப்படும் இதன் இரசாயன சேர்க்கை அமைப்பு பௌதீக இயல்பு கனியுப்பு நிறம் என்பன இடத்திற்கிடம் வேறுபடுகின்றன. இவற்றிற்கு அடிப்படையாக அமைவது மண் தோன்றிய தாய்ப்பாறை ஆகும், உப்பு மூலப்பாறை கருவீ கற்பாறை சுண்ணாம்புப்பாறை என்பவற்றைப் பொறுத்து மண்ணின் இயல்பு வேறுபடும். உதாரணமாக மணற்கற் பாறையில் இருந்து உருமணல் கருமணி கொண்டனவாகவும் நீர் வழிந்தோடக் கூடியனவாகவும் விளங்கு

கின்றன. அமிலப் பாறையில் இருந்து பெறப் பட்ட மண் படிதல் தன்மையை கொண்ட தாகவும் உப்பு மூலப் பாறையில் இருந்து உருவான மண் உப்பு பொருட்கள் கொண் டனவாகவும் காணப்படுகின்றன. மண்ணின் வேறுபாட்டிற்கு அமைய தாவரப் பரம்பல் பயிரினம் பயிரிடும் முறை என்பன வேறு படும். புவியின் மேற்பரப்பில் இயற்கையாக உருவாகிய முக்கிய மண்வகைகள் அதிகள வில் எல்லா இடங்களிலும் காணமுடியாது மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள் இயற்கை காலநிலை இயற்கைத் தாவரம் மண்ணரிப்பு. அடித்தள பாறை போன்றவற் றின் உருகுலைவாலும் மண்ணின் வகை களும் இயல்புகளும் மாற்றமுற்று வருகின் றன.

உலகில் காணப்படும் மண்வகைகள் பல ரும் பலவிதமாக பிரித்து ஆராய்கின்றனர். எனினும் பொதுவாக மூன்று பெரும் பிரிவு களில் அவையாவன

1. வளையமண்
2. இடைவளையமண் அல்லது பலவலயங் களிலுள்ள மண்வகை.
3. வளையமில்மண் அல்லது வலயங் கொள் ளா மண்வகை.

## 1. வளைய மண்வகைகள்

இவ்வளைய மண்கள் தாவரவியற் செய ற்பாடு சிறந்த வடிகால் தன்மை நீடித்த காலநிலைத் தன்மை கொண்டபாகங்களில் காணப்படுகின்றது, இதை அ. வறள்மண் ஆ. ஈரலிப்புமண் என இரண்டு வகையா கப் பிரிக்கலாம்,

மேலும் அ, வறள்மண்ணை

1. சேணசோம்மண்
2. செஸ்நட்மண்
3. பாலைமண்
4. பிறேமண்

ஆ. ஈரலிப்புமண்

1. அயணசெம்மண்
2. உப அயன செம்மண் அல்லது மஞ்சள் மண்
3. நரைகபில சாம்பல் நிற மண்
4. சாம்பல் மண்

என நான்கு பிரிவாகவும் பிரிக்கலாம்

### அ) 1. சேணசோம்மண்-:

இவை புகள் பெற்ற தெப்பு வெளிகரு மண் வகைகளாகும் புல்லில் இருந்து உண் டாகும் மட்கட் பொருட்களை கீழேகொண்டு செல்வதற்கும் போதியளவு மழையின்மை யால் இவற்றில் மக்கற் பொருள் குறைவாக உண்டு சேணசோம் வலயம் மத்திய ஆசி யாவுக்கூடாக மஞ்சூரியாவில் இருந்து (மலை களால் ஏற்படும் தடைகள் நீங்களாக) தென் சைபீரியா, மத்திய இரஷ்யா ஆகியவற்றைக் கடந்து உக்கிறேன் வரையும் (இங்கு இது உயர்வான விருத்தியடைந்துள்ளது) பின்னர் உருமேனியா, அங்கேரி மொரேலியா ஆகிய நாடுகள் வரையும் பரந்து செல்கின்றது. கனடாவிலுள்ள கருமண் வகைகளும் ஐக்கிய மாகாணங்களின் வடக்கு தன்கோற்றாவிலி ருந்து தென்புறமாக தெட்சாத வரயுள்ளது கருமண்வகையும் இவ்வகையின. ஆஜென் னாவின் பம்பாஸ் தென்கிழ் அவுஸ்திரேலி யாவின் புன்னிலம் ஆகியவற்றின் சிலபகுதி களிலும் உண்மையான சேணசோம்மண் இன த்தைச் சார்ந்த மண்கள் காணப்படுகின்றன

தாய்ப்பாறைதிரவியத்தில் அதிகம் தங்கி இருக்காமல் காலநிலை காரணமாக உற்பத் தியாகும் மண்வகைகளிற்கு இவை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஏனென் னில் இவைபல் வேறுபட்ட அடித்தளபாறை களில் ஏராளமாக காணப்படுகின்றமையால் எனக. சேணசோம்மண் வகைகள் தளர் வான பொடியும் தன்மை உடைய இழை வுடையனவாய் இருந்தாலும் இயற்கையா கவே தாவர உணவு பொருட்கள் அதிகம்

இருந்தாலும் இம்மண்வகைகள் காணப்படும் நிலங்கள் மென்றொடரல் அமைப்புப் பெற்று மிகப்பரந்து கிடப்பதாலும் காலநிலை ஏற்றதாய் இருப்பதாலும் இப்பகுதி உலகின் மிகப்பெரிய கோதுமை செய்கை நிலங்களாக உள்ளன.

2 செஸ்நட் மண் அல்லது கருஞ்சிவப் புமண்:-

இம் மண் புல்நிலங்களை சார்ந்து, குறைந்த அழுகள் பொருட்களைக் கொண்டது இதில் சுண்ணமும் கனிப்பொருட்களும் அதிகம் உண்டு சேணோசோம் மண்ணுடன் ஒப்பிடும் போது இம்மண்வளம் குறைவானதாகும். எனினும் ஏனைய மண்வகைகளுடன் ஒப்பிடும் போது ஓரளவு வாங்கக் கூடியதாகும் கருங்கபில நிறத்தைக் கொண்ட இம் மண் தாவர செயற்பாடுகளை குறைவாகக் கொண்டது. இம்மண் பல்வேறு பகுதிகளிலும் பரந்து கிடக்கின்றன. இவை இரஷியாவின் சோம் தெற்கே வருண்ட தெப்பு வெளிகளில் இருந்து மேற்குபுறமாக உருமேனியா கங்கேரி ஆகிய நாடுகளிற்கு பரவுகின்றது ஐக்கிய மாகாணங்களில் உயரமான சமவெளிகளிலும் ஆஜெந்தீனாவில் பம்பாசியன் வறண்டபகுதியிலும் தென் ஆபிரிக்காவின் வெளிநிலும் இவை காணப்படும்

3 பாலைமண்:-

இவை வெப்பமான பிரதேசங்களில் குறிப்பாக பாலைநிலப் பிரதேசங்களில் காணப்படுகின்றன. இவை பிரதானமாக மணற்தன்மை உடையன. இங்கு வெப்பம் அதிகமாக உள்ளதால் மண் சிறுதுணிக்கைகளாக காணப்படும் அத்தோடு தாவரச் செயற்பாடுகள் அரிதாக காணப்படுவதால் மண்ணுடைய வளம் குறைவாகும் அத்தோடு கனிப்பொருட்களும் மிகவும் அரிதாக காணப்படுகின்றன

4 பிறேரிமண்:-

குறைந்த வருட வெப்பநிலை நிரந்தரமாக உறைந்துள்ள கீழ் மண் மந்தமான ஆவியாக்கல் ஆவியாக்கவீதம் குறுகிய தாவரவளர்ச்சி பருவம்ஆகியனவே இவ்வகைமண் விருத்தியாவதை நிர்ணயிக்கும் முக்கியமான காரணமாகும். ஆகவே இரசாயன முறை அழிதல் உயிரியற் தொழிற்பாடும் ஆகிய இரண்டும் குறைந்த அளவிலேயே நிகழ்கின்றன.

ஆ 1 அயனச் செம்மண்

அயனமண்டலப் பகுதிகளில் உயர்ந்த வெப்பநிலையும் ஈரத்தன்மையும் குறிப்பிடக் கூடியவாறு பருவ ஒழுங்கில் பெய்யும் மழையுடன் சேர்ந்து தீவிரமான இரசாயன அழிவை உண்டாக்கும் இதனால் களிமண்ணும் படிகமும் கொண்ட ஈரக் களிமண் கலவைஉருவாகின்றது இப்பகுதிகளில் பாறை பிரிந்தழிதல் ஒரு கணிசமான ஆழத்திற்கு நிகழக் கூடும் சிலவேளைகளில் இவ் ஆழம் 50 வரை இருக்கும் பரந்திருக்கும் இரும்பு சேர்க்கைகள் இம்மண்வகைக்கு சிறப்பாக உரியசெந் நிறத்தைகொடுக்கும் கரையும்தன்மையுள்ள சில உப்புமூலங்கள் நீர்முறை அரித்தலால் அரிக்கபபடுகின்றன செய்கை பண்ணப்படாத புது மண்ணில் பயிரிட்டால் அதிக விளைச்சலை சிலகாலங்களிற்கு கொடுக்கும் அதன் பின் மண் விரைவில் தாவர உணவுப் பொருட்களை இழந்து விடுவதால் அதிக வழமாக்கிகளை உபயோகிக்க வேண்டி இருக்கும் இச் செம்மண் வகைகள் பிறேசில் பிரித்தானியா கயானா கிழக்காபிரிக்கா தென் தக்கனம் இலங்கை ஆகிய நாடுகளில் அயன மண்டல சவன்னா மேட்டுநிலங்களில் பரவி இருக்கின்றன. இலங்கையிலே தேயிலைச் செடிகளின் கரும்பச்சை நிறம் குன்று சாய்வுகளின் செந்நிறத்தோடு மாறுபட்டுத் தோன்றும் மேலும் இம்மண் வகைகளை பேமா இந்தோனேசியா ஆகிய

நாடுகளின் அயனமண்டல பருவக்காற்று காடுகளில் உள்ள நிலங்களிலும் உண்டு.

2 உப அயனச் செம்மண் அல்லது மஞ்சள் மண்:—

இது வெப்பவலய சவன்னா இடைவெப்பக் காடுகளில் காணப்படுகின்றது. இதில் உயர்ந்த வெப்பம் காணப்படுவதனால் நுண்ணுயிர்கள் தோன்றுகின்றன இம்மண் இரும்புசத்தும் அமிலத்தன்மையும் கொண்டது.

3 நரைகபில சாம்பல் நிறமண் அல்லது கபில நிறமண் அல்லது கபில நிறக் காட்டு மண் வகைகள்:—

இவை மேற்கு ஐரோப்பாவின் உதிர் காடுகள் முன்னர் மூடியிருந்த இடங்களின் பெரும் பகுதிக் குரிய மண்வகைகளாகும். இலைகள் குவிந்து அழுகுவதனால் உண்டான சேதனப் பொருட்களை இவை அதிகம் உடையன. பயிர்செய்கைக்கு இவை சாம்பல் நிறமண் வகைகளை விடச் சிறந்தன. ஈரமான காலநிலையிலும் சிறிது நீர் முறை அரித்தல் நிகழ்வதனால் மேற்பரப்பு மண் சாதாரணமாக சற்று அமிலத்தன்மை பெற்றுள்ளது. இம்மண்வகைகளில் பெரும்பாலானவை பல நூற்றாண்டுகளாகப் பயிர் செய்கையின் பொருட்டு பண்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதியில் இருந்த காடுகள் நீண்ட காலத்திற்கு முன்னரே அழிக்கப்பட்டதனால்இப்பொழுது இடைவிடாதபசளையும் சுண்ணாம்பும் இடல் வேண்டியதாக உள்ளது.

4 சாம்பல்நிற மண் வகைகள்:—

ஈரமுள்ள குளிர்ச்சியான இடைவெப் காலநிலையை உடைய இடங்களில் இம்மண் கூட்டங்கள் அதிகமாக காணப்படுகின்றன. இம்மண் ஊசியிலை காட்டுப் பகுதிகளில் காணப்படுகின்றது. இம்மண்ணில் நுண்ணுயிர்களின் தோற்றப்பாடு குறைவு. இங்கும் அமிலத்தன்மையே காணமுடிகின்றது. மண்ணில் உள்ள அழுகற் பொருட்கள் குறைவாக உள்ளது.

2) இடை வலைய மண்வகை அல்லது பல வலயங்களில உள்ள மண்வகை:—

இவ் இடைவெப்ப வலய மண் சிறந்த வடிகால் அமைப்பு காணப்படாத இடங்களில் அல்லது பிரதேசங்களில் காணப்படுகின்றது. இது உப்புத்தன்மை கொண்டது.

I உலர் மண் வகைகள்

II முற்றா நிலக்கரி மண் வகைகள்

III சுண்ணாம்புக் கல் மண்வகைகள் என வகுக்கலாம்.

1 உலர் மண் வகைகள்

கரையும் தன்மையுள்ள ஒருகணிசமான அளவில் கொண்ட மண்வகைகள் பல வலயங்களிலும் உள்ள மண்ணிற்கு எடுத்துக்காட்டாகும். ஆவியாக்கல் போதியளவிற்கு நிகழும் இடங்களில் அவை அதிகம் உண்டு. மண் மயிர்த்துளைத் தன்மையுடைய தாகையால் வன்மையான உப்புக் கரைசல்கள் மேல் எழுகின்றன. இவ்வுப்புக்கள் மேற்பரப்பில் நரை நிறமுடைய ஒரு பெருக்கை உண்டாக்கும் இதற்கு கீழே உப்பு நிறைந்த மணியுருவத் துணிக்கைகளை கொண்டவொரு வரைவுண்டு. இம் மாதிரி உலர் மண்வகைகள் சொலன் சாக்கு எனப்படும். சிறிது அளவு மழைவீழ்ச்சி இருந்தால் மேற்பரப்பில் சிவு உப்புக்கள் நீர் முறையால் அரிக்கப்படுகின்றன. இதனால் கீழே நடுவரை மிகவும் உலர் தன்மையுள்ள படைகாணப்படும், சொலனற்சு மண்வகை எனப்படும்,

## 2 முற்றா நிலக்கரி மண் வகைகள்:

மண்ணில் நீர் நிரம்பி இருக்கும் காற்று முற்றாகவே இராது இதன்விளைவாக அங்கு மிகச் சில சேதனப் பொருட்களே வாழ்தல் முடியும் இதனால் நுண் கிருமிகளின் தொழிற்பாடு குறைகின்றது. நைத்திரேற்றுக்கள் காபனீரொட்சைட்டு, சல்பேற்றுக்கள் ஆகியவற்றை உண்டாக்கல் ஒட்சியேற்றம் எனப்படும். இரசாயன முறைக்குப் பதிலாக அமோனியா சேற்றுவாயுக்கள் சல்பைட்டுக்கள் பெரசு ஒட்சைட்டுகள் ஆகியவற்றை தாழ்தல் எனும் இரசாயனமுறை நிகழ்கின்றது. தாவரத்தின் அரைகுறையானசிதைவு காரணமாக ஒரு கணிசமான அளவு தடிப்புள்ள நிலக்கரி குவிகிறது. இது அதிகரிக்கப்படலே கீழ்படை அமுக்கப்படுகின்றன. ஆனால் அவை ஓரளவு நாருருவத்தை தொடர்ந்து பாதுகாத்து கொள்கின்றன.

முற்றா நிலக்கரி ஒரு மண்ணன்று. அது மண்ணை உண்டாக்கும் ஒரு பொருளாகும். ஆனால் அதிகரிக்கும் வரட்சி போன்ற இயற்கை மாற்றங்கள் மூலமே விசேடமாக வடிகால் அமைத்தல் ஆழ உழுதல் போன்றன மூலமோ மனித செயல்கள் மூலமோ மண்ணுக்கு முறைகள் முற்றா நிலக்கரி குவியலில் அம் முற்றா நிலக்கரி சேதனப்பொருட்கள் நிறைந்துள்ள மண்ணை உண்டாக்க பலநிறம்பட்ட முற்றா நிலக்கரி மண் வகைகளை வேறுபடுத்திக் காணலாம். அவையாவன

1 பென்னிலத்து முற்றா நிலக்கரிமண்
2 புற்றரை மண்வகைகள்
3 சதுப்பு நிலத்து முற்றாநிலக்கரிமண்
4 உலர்ந்த முற்றா நிலக்கரி மண்வகைகள்

## 3 சுண்ணாம்புக் கல் மண்வகைகள்

சுண்ணாம்பு பாறைப் பொருட்களில் இருந்து இரஞ்சினா தெரா உறெசா என்னும் இரு முக்கிய மட்கூட்டங்கள் உண்டாகின்றன. தெரா உறேசா வரட்சி கூடிய இடங்களிலேயே உள்ளது.

### இரஞ்சினா:

இம் மண்வகைகள் கருநிறமுடையன இவை நெருங்கல் கூடிய மணிபுருவத்துணிக்கைகளையுடைய ஈரக்களிமண்ணால் அமைந்தமேற்பரப்பு வரைவினை உடையது. இவ் ஈரக் களிமண் சுண்ணாம்பு கற்துண்டுகளைக் கொண்ட கீழ் மண்ணின் மேல் உள்ளது. சுண்ணாம்பு கற் துண்டுகளோ திண்ணிய சுண்ணாம்புப் பாறையால் உண்டாகும். விளைவுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும் வேறு இடத்தில் இது போன்ற காலநிலைத் தன்மைகளில் கபிலநிற மண்வகைகள் உண்டாகும்.

### தெரா உறேசா:

சாதாரணமாக அரைகுறையான வரட்சி நிலமைகளிலேனும் அல்லது மத்திய தரைப்பகுதிகளிற் போன்று நீடித்த கோடைகால வரட்சியுள்ள நிலமைகளிலேனும் சுண்ணாம்புக்கல் இருக்கங்களிலே குவிகின்ற பல மீதிச் செம்மண் வகைகளை பொதுவாக இப்பெயரால் சுட்டுவதுண்டு. ஸ்பெயினிற் சில பகுதிகளிலும் தென்பிரான்சின் கோதகளிலும், வட இத்தாலியிலும் யூகோஸ்லாவியாவின் காசித்திலும் வடகிரீசிலும் குத்தான சாய்வுகள் கடுமையான மாரிகாலமழை விரைந்தோடும் கழிவு நீர் ஆகியவற்றின் காரணமாக கரையாத சுண்ணாம்பு மீதிப் பொருட்கள் நிலவெடிப்புக்களிலும் குழிகளிலும் வடிநிலங்களிலும் அடைகின்றன.

## 3) வளையமில் மண் வகைகள் அல்லது வலையங் கொள்ளா மண் வகைகள்:

வலயமில் மண்வகைகள் மேல் மண்களாகும். நன்கு முதிர்ச்சியடையாத பாறை மண்ணாகும். புதிதாக உருவான மண்வகைகளை குறிக்கும். இம் மண்வகைகளாவன

1. மலை மண் வகைகள்
2. வண்டல் மண்வகைகள்

LIBRARY
JAFFNA CHAVAKACHCHERI HINDU COLLEGE

3. கடல் சார் மண்வகைகள்
4. பனிக்கட்டியாற்று மண் வகைகள்
5. காந்த தந்த மண் வகைகள் என்பனவாகும்.

## 1. மலை மண் வகைகள்:

உடை கங்குவைச் சாய்வுகள் போன்ற கற்கள் செறிந்த உறுதியில்லாத மேற்பரப்புகளில் அல்லது பனிக்கட்டியற்ற படிவுகளில் உள்ள மண் பெரும்பாலும் பாறை துண்டுகளை கொண்டது. இத்துண்டுகள் பௌதீக முறைகளால் பிரிந்தழியும் ஆனால் இவற்றில் உண்டாகும் இரசாயன மாற்றங்கள் மிக அற்பமாகவே இருக்கும். இவையெல்லாம் உடைகற்குவை மண்வகை என்று தொகுத்துச் சுட்டலாம்,

மண் கழுவலாலும் மண்ணரிச்சியாலும் சாதாரணமாக நுண்பொருட்கள் பள்ளத்தை நோக்கி கொண்டு செல்லப்படுகின்றன. நீர் முறையரித்தலால் உண்டாக பொருட்கள் பள்ளத்தின் வழி சென்று கீழ் சாய்வுகளை அல்லது பள்ளத்தாக்கின் அடிப்பாகத்தை அடைந்து ஒன்று சேர்ந்து உப்பு மூலங்கள் நிறைந்த மண்வகைகளாகின்றன. இவை நீரடித்த மண்வகை எனப்படும்.

## 2. வண்டல் மண்வகை:

இம்மண் வகைகள் மணல் மண்டிகளி, மண் ஆகியவற்றை ஒரு கலவையில் இருந்து உண்டாகின்றது. ஓடும் நீரானது கொண்டு செல்லப்பட்டு மட்டமான படுக்கைகளில் மறுபடியும் படிவிக்கப்பட்ட நன்கு கலந்த பாறைத்தேய்வை இக்கலவை கொண்டுள்ளது. இது வெள்ளப் பெருக்கு காலங்களில் மேலும் நிரப்பப்படும் வண்டல் மண் நுண்ணியதான இழையுடையதாய் மட்டமான தகரகளாகப் படிதலினால் அது பயிர் செய்கைக்கு ஏற்றமண்ணாக அமைகின்றது. அது ஓர் இளம் படிவு ஆகையால் அதில் உள்ள கனிப் பொருட்களை அது இழந்து விடுவதில்லை.

## 3. கடல் சார் மண்வகைகள்:

கடல்சார் திரவியங்கள் இயற்கை முறைகளால் அல்லது செயற்கை முறையான நில மீட்சியாற் சேற்றக் கரைகள் மணற் குன்றுகள் மணற்கரைகள் என்பனவாக ஆழமற்ற கடற்கரை வழியே அமைந்திருக்கும் இவ்வாறு பெல்சியம், நெதர்லாந்து, ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளின் கடற்கரை வழியே முன்னாட் கடலாய் இருந்த பகுதிகளினைச் சூழ கடல் மதில்கள் நிறுவப்படுவதோடு அங்கு நீரும் வெளியேற்றப்படுகின்றது, இவ்வாறு பல்வேறுபட்ட மண்வகைகள் கடல்சார் களிமண் வகையில் இருந்து விருத்தியடைகின்றது.

## 4. பனிக்கட்டியாற்று மண்வகை;

பனிக்கட்டியற்று திரவியங்களில் இருந்து விருந்தியான மண் வகைகள் வடவரைக் கோளத்தில் நிறைந்து கிடைக்கின்றது. பனிக்கட்டியாற்று நுகர்வு படிவுகளும் வெளியடையல் மணல் பரலாகியனவும் பனிக்கட்டியாற்று ஏரிகளில் படிவுள்ளிருக்கும் மீறப் பிரித்த களிமண் வகைகளும் உட்பட பல திரும்பட்ட பனிக்கட்டியாற்றுப் படிகள் தோன்றியுள்ளன. இவற்றில் இருந்து பலவகை மண் வகைகள் தோன்றியுள்ளன.

## 5. காந்த தந்த மண்வகை:

மணற்றகரங்கள், மணற்குன்றுகள், நுவர் மண் படிவுகள் என்பனவற்றை உண்டாக்கும் காற்தரின் படிவுகள் இதனுள்ளடங்கும் சினாவின் வடமேற்கு பகுதியிலும் ஐரோப்பாவின் பேரிலாந்திலும்உள்ள நுண்மண்படிவும் இது

போன்ற இலிமண் என்னும் மண்ணும் நுண்ணிழையுள்ள இலகுவிற் பயன்படுத்தக் கூடிய ஆழமான நீர் வெளியேறக்கூடிய மண் வகைகளை விருத்தியாக்கிப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலத்தை தரக்கூடும்.

6. எரிமலை மண் வகை:-

பழைய எரிமலைத் தாய்ப்பாறைகளிலிருந்து பெறப்பட்ட மண்வகைகளை விட மிகவும் சமீப காலத்தில் உயிர் பெற்ற எரிமலைக் குழம்பு, சாம்பல்நுரைக்கல் என்பவற்றைப்படிவித்துள்ளன. இவை இலகுவாக வானிலையால் அழிவுறும் பின்னர் இவை மழைநீரால் விரைவாகச் செல்லும் நீரோட்டத்தாலும் சாய்வுகள் வழியாக கீழே கொண்டு செல்லப்படும். மேலுள்ள எரிமலைக் குழம்பு வெறுமையான சாம்பல் நிறமுள்ள தகடுகள் ஆகின்றன. ஆனால் வானிலையால் அழிந்துண்டான கீழ்மண்கள் மிகவும் செழிப்பானவை.

இவ்வாறு உலகில் உள்ள மண்களை பலவகையாகப் பாகுபடுத்தியுள்ளனர்

---

## இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைந்துள்ள இடங்கள்:

1. கட்டுநாயக்கா
2. பியகம
3. கொக்கல
4. மிகிந்தலை
5. பன்னேகல

## இலங்கை வங்கியின் குத்தகை ஒப்பந்த சேவை

இலங்கை வங்கி அதனது வர்த்தக நடவடியின் ஒரு பகுதியாக குத்தகை ஒப்பந்த சேவையை நடாத்துகின்றது. இத்திட்டத்தின் கீழ் வழங்கபடவிருக்கும் சேவையானது முதலீட்டு பொருட்களுக்கான சேவையாக இருக்கும் குறிப்பாக இயந்திர சாதனங்கள் சேவையில் ஈடுபடவல்ல கருவிகள் பாரம் தூக்கிகள் மண் அகற்றும் இயந்திரங்கள் அலுவலக உபகரணங்கள், கார், பஸ், லொறி, வவுசர், டிரக்போன்ற வாகனங்கள் மற்றும் தொழில் சார் கருவிகள் போன்றவை வழங்கப்படுகின்றது.

இவற்றை வங்கியின் வாடிக்கையாளர்கள் அல்லது வாடிக்கையாளர் அல்லாதவர்களோ பெற்றுக்கொள்ளலாம். இவ்வங்கி அவ்வாடிக்கையாளரின் தகமையை அறிந்து குத்தகைஒப்பந்த சேவையை நடாத்தி வருகின்றது,

## ஏற்றுமதியை ஊக்குவிக்க இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள்

- ☐ ஏற்றுமதி சார் கைத்தொழில்களுக்கு வரி விடுமுறை வரிச்சலுகை அளித்தல்.
- ☐ ஏற்றுமதி பன்முகப்படுத்தப்பட்டமை.
- ☐ ஏற்றுமதியாளருக்கு சலுகை அடிப்படையில் கடன்வழங்கல்.
- ☐ ஏற்றுமதியாளருக்கு தகவல் சேவை அளித்தல்.
- ☐ சுதந்திர வர்த்தக வலையம் அமைக்கப்பட்டமை.
- ☐ ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தேசிய பொதிகட்டல் நிலையம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பன அமைக்கப்பட்டது.
- ☐ ஜனாதிபதி விருது வழங்கப்பட்டமை.
- ☐ ஏற்றுமதிக் கருத்தரங்குகள் நடாத்தல்
- ☐ சர்வதேச கண் காட்சிகளில் பங்கு கொள்ளல்.

இந்து வணிகனே

வாழிய!! வாழிய!!

சிறந்த முறையில் பிறேம் போட்டுக் கொடுப்பவர்கள்
உங்கள் மனைகளின் எழில் வண்ணப் படங்களுக்கு நாடவேண்டிய
தாபனம்

# நிருத்தபடமாடம்

யாழ் வீதி, ★ சாவகச்சேரி.

இந்து வணிகனின் இரண்டாவது இதழ்
மணம்பரப்ப வாழ்த்துக்கள்!!

நவநாகரிகமான புடவை தினுசுகளுக்கு
நம்பிக்கையான தாபனம்

சேட்டிங் சூட்டிங் முகூர்த்த பட்டுப்புடவைகள் அனைத்துக்கும்

# றஞ்சனாஸ்

# புடவைமாளிகை

8 நவீனசந்தை, ● யாழ்வீதி, ● சாவகச்சேரி.

இந்துக் கல்லூரியின் இலியகமலம்
''இந்து வணிகன்'' மலர்
இரண்டாம் இதழ் மலர்ந்து
மணம்பரப்ப
இதய பூர்வ வாழ்த்துக்கள்.

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு

சிறந்த தாபனம்



22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதத்துடன் செய்து தருபவர்கள்

# வீ. எம். கே
# தங்க மாளிகை

யாழ் வீதி, சாவகச்சேரி.

# சைவசித்தாந்த நோக்கில் ஆன்ம பற்றிய எண்ணக்கரு

KRISHNAVENEY A. N.
(B. A. (Hons), M. A, M. Phil)
Lecturer,
Department of Fine Arts,
University of Jaffna.

## அறிமுகம்

சைவசித்தாந்தம் தமிழ்நாட்டு மதமாகப் போற்றப்பட்டு வருகிறது. இந்தியாவின் வடபகுதியில் காஷ்மீர் பிரதேசத்தில் வழங்கும் சைவம் காஷ்மீர சைவம் எனவும், கன்னடப் பிரதேசத்தில் நிலவும் சைவம் வீரசைவம் எனவும் அழைக்கப்படுகின்றது. காஷ்மீர சைவம் ஒரு வகை ஒருமைக் கொள்கை (Monism) அல்லது இருமை இன்மை (Non-Dualism) என்று அழைக்கப்படும். இது சிவசூத்திரத்தை மூலமாகக் கொண்டது வசுகுப்தரைப் பின்பற்றி கல்லட்டர் எழுதிய ஸ்பந்தசர்வாஸ்வம், சோமநாதரின் சிவதிருஷ்டி, அபிநவகுப்தரின் பரமார்த்த சாரம் போன்றவை காஷ்மீரசைவத் தத்துவக் கருத்துக்களை விளக்கும் நூல்களாகும். காஷ்மீரசைவ தத்துவம், 'பிரதியபிக்ஞான தரிசனம்' என்ற பெயரில் வழங்குகிறது.

வீரசைவம் கி. பி. 12ம் நூற்றாண்டளவில், பசவண்ணர் என்பவரினால் கன்னடப் பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றிருந்தது. வீரசைவர்கள் தீவிரமான லிங்க வழிபாடு உடையவர்களாகவும், லிங்கத்தைக் கழுத்தில் தாயத்தாக அணிவதனாலும் அவர்கள் 'லிங்காயதர்' என்று அழைக்கப்படுகின்றனர். வீரசைவ தத்துவம் சக்தி விசிஷ்டாத்து என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

தென்னாட்டு சமய மரபாகிய சைவசித்தாந்தம் மெய்கண்ட சாஸ்திரங்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் கி.பி. 14ம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்றவை. இவை எண்ணிக்கையில் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இலக்கண முறைப்படி கூறப்படுவதற்கு முன்னர் தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள், சங்க மருவிய கால இலக்கியங்கள், பல்லவர்கால பக்தி இலக்கியங்களான நாயன்மார்களினால் அருளப்பட்ட தேவாரப்பதிகங்களிலும் விரவிக் கிடக்கின்றன. சைவசமயத்தின் முடிந்த முடிபான கொள்கையான சைவசித்தாந்தம் வேதங்களைப் பொது நூல்களாகவும் ஆகமங்களை சிறப்புநூல்களாகவும் கொண்டு வளர்ந்துள்ளது.

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல் ஒதிற் பொதுவும் சிறப்பு மென்றுள்ளன" என்ற, திருமந்திரப் பாடல் இதனை விளக்குகிறது. வேதங்கள் ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்களுக்கிடையிலுள்ள தொடர்பை

வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் [நால்வர்
ஓதுதமிழ் அதனுள்ளூறு நெய் போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண் [ணெய் மெய்கண்டார்
செய்ய தமிழ் நூலின் திறம்

என்ற பாடல் உணர்த்துகிறது. 'தேவாரம்' வேதசாரம் என்று போற்றப்படுவதும் குறிப்பிடத்தக்கது வேதங்கள் பொது நூலாகக் கொள்ளப்பட்டமையால், வேதத்தில் ஞானகாண்டப் பகுதியாகிய உபநிடதங்களின், சாரமாகவும் சைவசித்தாந்தம் விளங்குகிறது. "வேதாந்தம் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறன் தெரிக்கலுற்றாம்" என்ற சிவஞானசித்தியார் அடிகள் உபநிடதங்களின் தெளிவே சைவசித்தாந்தம் என்ற

கருத்தை புலப்படுத்துகிறார். கி. பி 14 ம் நூற்றாண்டில் நீலகண்டர் உபநிடதங்களின் சுருக்கமாகிய வேதாந்த சூத்திரத்திற்கு சைவதத்துவ நோக்கில் உரை எழுதியமை குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கினுள் முதல் நூலாக சிவஞானபோதமும் வழி நூலாக சிவஞான சித்தியாரும், சார்பு நூலாக சிவப்பிரகாசமும் கொள்ளப்படுகின்றன. உமாபதிசிவாச்சாரியாரால் எழுதப்பட்ட எட்டு சாஸ்திர நூல்களும் சித்தாந்த அட்டகம் என்று அழைக்கப்படுகின்றன.

## முப்பொருளுண்மை

தத்துவம் உண்மை, மெய்மை என்ற விளக்கங்களைக் கொண்டுள்ளது சைவசித்தாந்தம், பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை விளக்குவதனால் உண்மைக்கோட்பாடாக கொள்ளப்படுகிறது பதி என்பது பரம்பொருளாகிய சிவனையும் பசு என்பது மலங்களினாற் பதிக்கப்பட்ட ஆன்மாக்களையும், பாசம் என்பது ஆன்மாக்களையும் பந்தித்து நிற்பவனாகிய மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயையையும் குறித்து நிற்கிறது. கடவுள், ஆன்மா, உலகம் என்ற முப்பொருட்களிலும் மேலானது பதியாகிய இறைவன் "பல கலை ஆகம வேதம் யாவையிலுங் கருத்துப் பதிபசுபாசம் தெரித்தல், பதி பரமே" என்ற சிவப்பிரகாசப்பாடல் முப்பொருட்களிலும் மேலானது பதி என்ற கருத்து வேதாகமங்கள், அவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய நூல்கள் யாவற்றினதும் கருத்து எனக் கூறுகிறது. சைவசித்தாந்த கொள்கைப்படி பதி, பசு பாசம் என்ற முப்பொருட்களும் அநாதியானவை, பசு பாசத்தோடு கூடிய நிலையில் பதியினை அடையமுடியாது என்பதனை திருமந்திரம் 115 ஆவது பாடல் பின்வருமாறு கூறுகிறது.

> பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
> பதியினைப் போல் பசு பாசம் அநாதி
> பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
> பதி அணுகில் பதி பாசம் நிலாவே.

என்ற இப்பாடலில் விளக்கியுள்ளார். பாசங்களின் பந்திப்பில் இருந்து விடுபட்ட நிலையில் பதியாகி இறைவனோடு இரண்டறக் கலந்து விடுகின்றன. இதுவே ஆன்மாக்களின் உயர் குறிக்கோள். இத்தகைய உயர்ந்த முத்திநிலை 'சுத்தாத்துவைதம்' எனப்படும்.

## ஆன்மாவின் உண்மை

சைவ சித்தாந்தக் கொள்கைப்படி ஆன்மா என ஒரு வஸ்து உண்டு என்ற கொள்கை வலியுறுத்தப்படுகிறது. மனிதனுக்கு அடிப்படைச் சக்தியாக உள்ள ஆன்மா பசு, சிவன், உயிர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. பௌத்தம், உலகாயதம் போன்ற மதங்கள் ஆன்மா என நிலையான வஸ்து இல்லை என்று கூறுவர். இவர்களை மறுத்து ஆன்மா உண்டு, அது எண்ணிக்கையில் பல என்ற கருத்து சைவசித்தாந்திகளினால் முன்வைக்கப்படுகிறது.

> உளது இலதென்றலின் எனதுடலென்றலின்
> ஐம்புலனொடுக்கமறிதலின் கண்படின்
> உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
> மாயா இயந்திரதநுவினுள் ஆன்மா.
> (சிவஞானபோதம் 3ம் சூத்திரம்)

ஆன்மா இல்லை என்று கூறுவதற்குக் காரணமாக உள்ள சத்தியே ஆன்மா உடல்தான் ஆன்மா, உடலுக்கு வேறாக ஆன்மா இல்லை என்று வாதிப்போரை மறுத்து, ஒருவன் எனதுடல் என்று கூறும் போதே ஆன்மா உடலுக்கு வேறாகவுள்ள பொருள் என்ற கருத்துப் பெறப்படுகிறது; ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவை ஒடுங்கிய நிலையிலும் கனவின் கண் நிகழும் சம்பவங்களைப் பார்த்தும், கேட்டும், அறிந்தும் அனுபவிக்கும் தன்மையுடையதாகிய ஆன்மா ஐம்புலன்களுக்கும் வேறாக உள்ளது. உணர்த்தினால் உணரும் தன்மையுடைய ஆன்மாக்கள் சிற்றறிவுடையனவே.

இதனால் பேரறிவுடைய பொருளாகிய பதியினின்றும் வேறாக சிற்றறிவுடைய ஆன்மாக்கள் உள்ளன. இவை மாயையின் காரியமாகிய உடலின்கண் உள்ளன என்றும் மெய்கண்டதேவர் விளக்கத் தருகிறார். அருணந்திசிவாச்சாரியாரும் ''உயிரெனப் படுவதித்தவுடலின் வேறுளது'' என்ற கருத்தை மொழிகிறார்.

## பசுவிலக்கணம்

ஆன்மாவின் உண்மைத்தன்மை ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், அதற்குரிய இலக்கணம் விளக்கப்படுகிறது. உடல் இயங்குகிறது' பொறிகள், அந்தக்கரணங்கள் யாவும் இயங்குகின்றன. இவற்றுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது போன்ற விபரங்களுக்கு விடை தரும் வகையில் ஆன்ம இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மெய்கண்டதேவர்.

''அந்தக் கரணம் அவற்றுள் ஒன்றன்று [அவை
சந்தித்த தான்மா சகசமலத்துணராது
அமைச்சு அரசேய்ப்ப நின்று
அஞ்சவத்தைத்தே''

என்ற சிவஞானபோதம் 4ம் சூத்திரத்தில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்களில் (Internal Organs) ஒன்றாவது ஆன்மா அல்ல, அந்தக்கரணங்களின் இயக்கத்துக்குக் காரணமாக உள்ளது ஆன்மா. அது அநாதியாகவே ஆணவ மலத்துடன் தொடர்பு கொண்டிருப்பதனால் அந்தக்கரணங்களுடன் சேர்ந்து, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம், துரியாதீதம் என்ற ஐந்து அவஸ்தைக்குட்படுகிறது. உடல்பொறிகள், கரணங்களின் இயக்கத்துக்குக் காரணமாக உள்ள ஆன்மா, அவற்றுக்கு வேறாக உள்ள பொருளே.

உணர்வன கரணமென்னில் ஒன்றையொன்றுணரா வெவ்வே
றணைதருஞ் செயல்கள் நான்கு மறிந்தவை யடக்கியாங்கிப்
புணருமுட் கரு வியாக்கிப் புறக்கருவியிலும் போக்கி
இணைதருமிவற்றின் வேறாயானென தென்பதான்மா
(சிவஞானசித்தியார் 91 ஆவது பாடல்)

என்ற அருணந்திசிவாசாரியார் மேற்கூறிய கருத்தைத் தெளிவுபடுத்துகிறார். அந்தக் கரணங்களே ஆன்மா எனக் கொள்ளும் அந்தக் கரணான்மவாதிகள் அந்தக்கரணங்களே அனைத்தையும் அறிவன, அவற்றுக்கு வேறாக ஆன்மா என்பது ஒன்றில்லை என்பர். ஆனால் மனம் அகங்காரத்தையும் அதன் தொழிலையும் அறியாது, அகங்காரம் மனத்தையும் அதன் தொழிலையும் அறியாது. அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றும், தம்முள் ஒன்றையொன்று அறியாதிருப்பதனால், இவையனைத்தையும், அவற்றின் தொழிற்பாட்டையும் தனித்தோ ஒருமித்தோ அறிந்தும் அடக்கியும் அவற்றை ஆளும் ஆற்றல் கொண்ட ஆன்மா இவற்றுக்கு வேறாக உள்ளது என்று சைவசித்தாந்திகள் அந்தக் கரணான்மவாதிகளை மறுத்துரைக்கின்றனர்;

ஆன்மா என ஒரு பொருளின் உண்மைத்தன்மை, அதன் இயல்புகள், இலக்கணங்களை அவதானிக்கும் போது ஆன்மாக்களின் மேலான இலட்சியம் விடுதலை அல்லது வீடுபேறு என்ற கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. உடலியக்கத்திற்குக் காரணமாக உள்ள உயிர் 'பசு' என்ற சிறப்புப் பெயரினால் அழைக்கப்படுவதில் இருந்து, பாசங்களினால் பந்திக்கப்பட்ட தன்மை கொண்டது என்பதனையும், அத்தகைய பந்திப்பிலிருந்து விடுபடுதலே அவற்றின் நோக்கம் என்பதனையும் அறியலாம்.

சைவசித்தாந்தம் ''ஆன்மாக்கள் எண்ணிக்கையிற் பலஎன்ற கருத்தை முன்வைப்பதுடன் அவற்றுக்கு ஒரு பிறவியல்ல, பல பிறவி உண்டு எனவும் கூறுகின்றன. ஆன்மாக்கள் செய்த நல்வினை, தீவினைகளா

கிய கர்மமே மறுபிறவிக்குக் காரணம் என்ற கருத்து இடம்பெறுகிறது. 'கர்மம்' என்ற சொல் 'செயல்' அல்லது 'வினை' என்று பொருள்படும். நல்வினை தீவினை இரண்டுமே பிறவிக்குக் காரணம். இவ்விரு வினைகளையும் அவற்றின் பயன்களுக்கு ஏற்ற வகையில் ஆன்மாக்களிடம் சேர்ப்பிப்பவன் இவற்றுக்கு அப்பாற்பட்ட இறைவன் ''இருவினையிற் போக்குவரவு புரிய ஆணையின் நீக்கமற நிற்குமற்றே'' என சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரத்திற் கூறுகிறது. உமாபதி சிவாச்சாரியாரும் ''செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும் உய்வான் உளன் என்றுனர்'' என்ற திருவருட்பயன்பாடலில் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறார்.

ஆணவத் தொடர்பினால் அறியாமைக்குட்பட்ட ஆன்மாக்கள், அஞ்ஞானம் காரணமாக நல்வினை, தீவினைகளைச் செய்து மாயகாரியமாகிய தனு, கரண, புவன போகங்களைப் பொருந்தி, பிறப்பிறப்புக்குட்பட்டு, வினைப்பயன்களை நுகர்ந்து முடிந்த காலை, இறையருள் காரணமாக, இறைவனை அடையும் நெறிமுறைகளைப் பின்பற்றி உய்வடையும் தன்மை கொண்டவை. ஆன்மாக்கள் பல்வேறு அவஸ்தைகளுக்குட்படுகின்றன, ஆணவ மலத்தோடு மட்டும் சேர்ந்த கேவலாவத்தை, ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களோடும் கூடிய சகலாவத்தை ஆகிய இருநிலைகளுக்கும் ஆன்மாக்கள் மாறி மாறிச் செல்லும் நிலையில் இறப்பும், பிறப்பும் நடைபெறுகிறது வினைப்பயன் நுகர்ந்த காலை இறையருளைப் பெற முயற்சிக்கும் நிலை சுத்தாவத்தை எனப்படும். கேவலாவத்தை இருநிலையாகவும், சகலாதத்தை மருள்நிலையாகவும், சுத்தாவத்தை அருள் நிலையாகவும் வர்ணிக்கப்படுகிறது.

### சைவநாற்பாதங்கள்

சைவசமயத்தில் இறைவனை வழிபடுவதற்கு இறையருள் வேண்டும், என்ற கருத்து முதன்மை பெறுகிறது. ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்று மணிவாசகர் பாடுவது நோக்கற்குரியது. எனவே வீடுபேற்றினை அடைவதற்கு திருவருள் (Concept of Grace) அவசியம். மோட்ச சாதனங்களான சரியை, கிரியை, யோகம், ஞானத்தைப் பின்பற்றுவதன் மூலம் பற்றுக்களின்றும் விடுபட்டு, இறையருளைப் பெறமுடியும். ஆன்மாக்கள் நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளையும் ஒப்ப நோக்கும் நிலை 'இருவினையொப்பு' என்று சிறப்பித்துக் கூறப்படும். இருவினையொப்பு' என்று சிறப்பித்துக் கூறப்படும். இருவினையொப்பு ஏற்படுமிடத்து ஆணவ மலம் பரிகாரம் அடைகிறது. வறுத்த வித்து மீண்டும் முளைக்கும் சக்தியை இழந்துவிடுவது போல ஆணவம் ஆன்மாக்களைப் பந்திக்கும் தன்மையை இழந்துவிடுகிறது. ஆன்மாக்களின் அறிவை அடக்கி, இருள் நிலையில் வைத்திருந்த ஆணவமலம் வலி குன்றிய நிலையில், அதன் திரோதான சக்தி அருட்சத்தியாக மாறி இறையருளைப் பெறத்துணை புரிகிறது. இந்நிலையில் இறைவனின் அருட்சக்தி ஆன்மா மீது பதிகிறது. இதனை சைவசித்தாந்த சாஸ்திரங்கள் 'சத்திநிபாதம்' என்று அழைக்கின்றன.

இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம் பல நீக்கித்
தருமென ஞானத்தாற் தன்செயலற்றல்
திரிமலந்தீர்ந்து சிவனவனாமே.

திருவருளைத் துணைக்கொண்டு ஆன்மாக்கள் வீடுபேற்றினை அடைகின்றன.

### பாசநீக்கமும் சீவன்முத்தியும்

இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் போன்ற நிலைமைகளைக் கடந்து ஆன்மா வீடுபேற்றினைப் பெறுகிறது சைவசித்தாந்தம் கூறும் சீவன்முத்தி, விதேகமுத்தி என்ற இருவகை முத்திநிலைகளில் சீவன்முத்தி உடலோடு கூடிய நிலையில் அடையப்படுகிறது. சீவன்முத்தர்கள்

LIBRARY
CHAVAKACHCHERI HINDU COLLEGE

உடலோடு கூடியிருந்தாலும் உலகத்திற் வாழ்ந்தாலும் உடல், உலகப்பற்றுக்களில் இருந்து விடுபட்டவர்கள். திருமுறை இலக்கியங்களிற் பெரியபுராணம் அறுபத்துமூன்று நாயன்மார்களையும் சீவன்முத்தர்களாகக் கொள்கிறது. சிவஞானபோதம், 12 ம் சூத்திர அடிகள் இலக்கணத்தை சீவன் முத்தர்

'மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே'

என மலங்களினால் வரும் மருள் நீங்கிய நிலையில் சிவனடியார்களையும், சிவன் கோயில்களையும் சிவனாகக் கண்டு வணங்கும் இலட்புடையவர் எனக் கூறுகிறது. சைவசித்தாந்திகளது கொள்கைப்படி சீவன் முத்தர்கள், தேகம் நீங்கிய நிலையில், விதேக முத்தியடைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முத்திநிலையில் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு 'அத்துவிதம்', 'துவி' என்ற அடியாகத் தோன்றிய 'துவைதம்' இரண்டு எனப் பொருள்படும். துவைதத்தின் முன்னால் இடம்பெறும் 'அ' என்ற சொல் இரண்டில்லை என்ற கருத்தையே தருதல் வேண்டும்; ஆனால் சைவசித்தாந்தம் அன்மைப்பொருளில் 'அல்ல' என்ற கருத்தைக் கொடுத்து ஆன்மாவும் இறைவனும் மோட்சநிலையில் 'ஒன்றும் அல்ல, இரண்டும் அல்ல' எனக் கூறக்கூடிய வகையில் அத்துவிதமாகக் கலந்து விடுகிறது என்ற கருத்தை முன்வைக்கிறது திருவருட்பயன் ஆசிரியர்

''தாடலை போற் கூடியவை தாளி
[ழாவேற்றின்பக்
கடலை நீ ஏகம் எனக்கொள்''

என்ற பாடலில் தாள் + தலை என்ற இரண்டு சொற்களும் புணருமிடத்து 'தாடலை' என்ற சொல் வருகிறது. இது ஒரு சொல்லும் அல்ல, இரண்டு சொற்களும் அல்ல. ஒருவகையில் ஒரு சொல்லாகவும், இன்னொருடத்து இருசொற்களின் சேர்க்கையாகவும் காணப்படுகிறது. இது போன்ற கலப்பு நிலையே 'அத்துவிதம்' ஆகும்.

பாசங்களோடு கூடிய பெத்த நிலையில் பாசங்களோடு சேர்ந்து பாசங்களின் இயல்பைப் பெற்று விளங்கும் ஆன்மா, முத்திநிலையில் இறைவனோடு சேர்ந்து இறை இயல்பைப் பெற்று விளங்கும். ஆன்மாக்கள் ஒருபோதும் தனித்து நிற்பதில்லை. அவை சார்ந்ததன் வண்ணமானவை. சத்தோடு சேர்ந்து சத்தாகவும் அசத்தோடு சேர்ந்து அசத்தாகவும் இருப்பதனால் ஆன்மா சதசத்து என்ற பெயரையும் பெற்றுவிடுகிறது.

# சங்ககால சமய மரபு

செல்வன் ந. அகிலன்
வர்த்தகப் பிரிவு
ஆண்டு (94 C1)

சங்க காலத்தை இயற்கை நெறிக் காலம் என்பர். இதற்குக் காரணம் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை முறையினைக் கொண்டிருந்தமையாகும்: சங்க நூல்களில் இருந்து நாம் காதலையும் போரையுமே அதிகம் காணலாம். பிற்கால நூல்கள் ஒழுக்கத்தினையும் கடவுளையும் கடவுளை அடையும் வழியையும் பாடின. சங்க நூல்கள் ஆங்காங்கு சமய வழக்கங்களைப்பற்றிக் கூறிச்சென்ற போதும் ஒரு நூலாயினும் சமயச்சார்பான நூலாக அமையவில்லை. எனினும் சங்கநூல்களில் இருந்து தமிழ்மக்களுடைய பண்டைய சமயவாழ்வை அறியலாம்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு இடையிலான காலம் சங்ககாலமாகும். சங்க காலத்தில் ஆண்டது தமிழ் மன்னன் ஆழப்பட்டது தமிழ் மக்களை. எனவே போட்டி பூசல் காணப்படவில்லை பிரச்சினைகள் குறைவாக இருந்தன எனவே சமயம் உயர்ச்சி பெறவில்லையாயினும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு இலக்கியங்கள் வாயிலாக சங்ககால சமயநிலை பற்றிய சான்றுகளைக் காணலாம். உதாரணமாக குறுந்தொகை, பதிற்றுப்பத்து பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை போன்ற சில சான்றுகள்.

சங்ககால வழிபாட்டிற்குரிய தெய்வங்களை எடுத்தால் தொல்காப்பியனார் பொருளதிகாரத்தில் நிலங்களுக்குரிய தெய்வங்களை வகுத்துள்ளார்.

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமுஞ்
வேந்தன் மேய தீம்புன லுலகமுஞ்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலென்று
சொல்லிய முறையாற் சொல்லவும்
படுமே'

தொல்காப்பியத்திற்கு உரைகண்ட உரையாசிரியர்கள் மாயோன் என்பது விஷ்ணுவையும் சேயோன் என்பது முருகனையும் வேந்தன் என்பது இந்திரனையும் குறிக்கும் என்பர்.

மற்றும் சிவவழிபாடு இலக்குமி ஏனைய தெய்வங்கள் வழிபடப்பட்டுள்ளன.

சிவன்; சங்கச் செய்யுட்களில் சிவன் என்னும் பெயர் இடம்பெறவில்லை. ஆனால் சிவனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அடைமொழிச் சொற்களால் சிவனை சங்கச்செய்யுள்கள் கூறுகின்றன. முக்கட்செல்வன், கறைமிடற்றண்ணல், தாழ்சடை பொருந்திய அருந்தவத்தோன், தாழ்ந்த நீண்ட சடையினை உடையவன், சடையிலும் மார்பிலும் கொன்றைமாலை அணிந்தவன், முடிமேல் பிறைச்சந்திரனை அணிந்தவன், கங்கையைத் தாங்கியவன் போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

ஐங்குறு நூற்றில் இக்கடவுளுடைய தன்மையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது; அர்த்த நாரீஸ்வரர் தோற்றம் வர்ணிக்கப்படுகிறது. மூவுலகும் அவன் தலைமையின் கீழ் இயங்குவது எனச் சொல்லப்படுகிறது.

மதுரைக் காஞ்சியில் ஐம்பூதங்களைப் படைத்தவன் என்றும் மழுவினை உடையவன் என்றும் நஞ்சை உணவாக உட்கொண்டவன் என்றும் மலையை உறைவிடமாகக் கொண்டவன் என்றும் சில குறிப்புகள் அங்கு காணப்படுகிறது.

திருமுருகாற்றுப்படையில் சிவனைப் பற்றி வருமாறு சொல்லப்படுகிறது. நெற்றிக்கழுத்தில் உயர்ந்த இடபக் கொடியைக் கொண்டிருக்கிறான்; அவனுடைய ஒரு 'பக்கத்தில் உமை உறைகிறாள். அவன்

உலகம் புகழும் தோளை உடையவன் இமையாத கண்ணை உடையவன் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

வேதகாலத்தில் உருத்திரன் என்ற தெய்வம் சிவன் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. சங்க காலத்திற்குப் பின்பு சிவன் முழுமுதற் கடவுளாகப் போற்றப் பெற்றான்.

கொற்றவை:- பாலை நிலத்திற்குரிய தெய்வம் கொற்றவை, எல்லாம் உணர்ந்தவள், பெரிய காட்டிடை வாழ்பவள், பெரிய கண்ணை உடையவள் வெற்றித் தெய்வம் கொற்றி எனப்பட்டாள்.

குறுந்தொகையிலும் பல குறிப்புக்கள் காணப்பட்டன. இக் கொற்றவை திராவிடரின் வெற்றித் தெய்வமாக இருப்பதுடன் முருகனுடைய தாய் எனவும் வர்ணிக்கப்பட்டாள். நெடுநல் வாடையிலே அரசன் வெற்றி பெறுவதற்காக கொற்றவைத் தெய்வத்திற்குப் பலி கொடுக்கப்படுகிறது.

கொற்றவையை, வெறியாடலுடன் தொடர்புபடுத்தி வழிபடுவர். பலிகொடுத்தும் வழிபாடாற்றியுள்ளனர் அத்தெய்வம் பிற்காலத்தில் துர்க்கையோடு தொடர்புபடுவதைக் காணலாம் கொற்றவை வழிபாட்டின் நோக்கம் பிரிந்தவர் மீண்டும் சேர்தலும் பிரியாமல் வாழ்வதற்குமாம் தொல்காப்பியம் கொற்றவைக்கு பலி கொடுத்து வழிபடுதலை கொற்றவை நிலையெனக் குறிக்கிறது.

முருகன்; சிவனின் குமரன் என்றும் கொற்றவையின் மைந்தன் என்றும் சொல்லப்படுகிறான். குறிஞ்சி நிலத்தில் சோலைகளும், மலைகளும் அழகாகக் காணப்பட்ட இடங்களில் இத்தெய்வத்தின் தோற்றத்தை அழகாகக் கண்டனர். இதனால் சேயோன் என்று முருகனைக் குறிப்பிட்டனர். முருகனது முருகு இளமையானதாகவும் குறிஞ்சி நிலத்தோடு ஒத்திருந்த காரணத்தினாலும் அந்த நிலத்திற்குரிய தெய்வம் முருகனானான். "வெல்லும் போரை வல்ல முருகன்" என மலைபடுகடாம் அவனைச் சிறப்பிக்கிறது.

திருமுருகாற்றுப்படையில் முருகனை வழிபடும் முறையை நக்கீரர் பாடுகிறார். இதில் ஆறபடை வீடுகள் பற்றிச் சொல்லப்படுகிறது. "திருப்பரங்குன்றம்" என்ற பகுதியில் தமிழ்க் கடவுளாகிய முருகனுக்குத் தமிழ் முறையிலே பேய்மகள் ஒருத்தி ஆடிய துணங்கைக் கூத்து சித்தரிக்கப்படுகிறது.

குன்று தோறாடல் என்ற பகுதியில் முருக வழிபாட்டுடன் தொடர்புடைய குரவைக் கூத்து கூறப்படுகிறது இதனைப் "பைங்கொடி நறைக்காய் யிடையிடுபு வேலன்"... என்ற பாடலடி விளக்கும்.

வருணன்:- நெய்தல் நிலத் தெய்வமாக வருணன் வழிபடப்பட்டான் எனத் தொல்காப்பியம் கூறும். நிலாக் காலங்களில் பரதவர் மகளிரோடு கூடி மலர் மாலை சூடி பானங்கள் குடித்து விழாக் கொண்டாடினர். இவ்வாறு சங்க நூல்கள் கூறும்.

இந்திரன்:- மருத நிலத்தில் இந்திரன் வழிபடப்பட்டான் என தொல்காப்பியம் கூறும். மக்கள் இந்திரனுக்கு கோயில் கட்டி வணங்கி வழிபட்டனர், என புறநானூறு கூறும். ஆயிரம் கண்களை உடையவன் நூறு வேள்விகளை நடத்தியவன் இந்திரன் இவன் யானையின் பிடரியில் ஏறி வருபவன் எனத் திருமுருகாற்றுப்படை கூறும்.

விஷ்ணு: முல்லை நிலத் தெய்வமாக விஷ்ணு வணங்கப்பெற்றான். அவன் பாம்பின் அரவணைப்பில் பள்ளி கொள்பவன் என பெரும்பாணாற்றுப்படை கூறும்.

"மாயோன் மேய காடுறை யுலகம்" என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. மதுரைக் காஞ்சியிலே காக்கும் கடவுளாகிய திருமாலை மக்கள் பூவும் புகையும் கொண்டு குடும்பம் குடும்பமாக வணங்கினர், முன்

லைப்பாட்டில் நீலமேனி கருடக் கொடி யோன் சங்கு சக்கரமுடையவன் என்றும் திருமாலை போற்றப்பெற்றான்.

இதிகாச புராணங்களில் கண்ணன் விஷ்ணுவின் ஒரு அவதாரமாகவும் போர்த்தெய்வமாகவும் காட்சியளிக்கிறான்:

இவ்வாறாக சங்ககாலத் தெய்வங்கள் பற்றிய கருத்துக்கள் அமைய; சங்ககால வழிபாட்டு முறையை எடுத்தால்; வெறியாட்டம, குரவைக்கூத்து, நடுகல் வழிபாடு படையல், நம்பிக்கை அடிப்படையிலான வழிபாடு போன்றன காணப்பட்டன.

வெறியாட்டம்: இது முருகனை வழிபடுகின்ற முறையில் ஒன்றாகும். துன்பம் எல்லாவற்றிற்கும் காரணம் முருகன் எனக்கொண்டு வேலை ஏந்திய ஒருவன் வழிபட இசை வாத்தியங்கள் ஒலிக்க மகளிர் குறிஞ்சி முதலிய மலர்களைச் சூடி கைகோர்த்து வெறியாட்டம் ஆடினர். போரிலே இறந்தவர்களின் குடல்களை மாலையாக அணிந்தும் ஆடினர்.

குரவைக் கூத்து! பெண்கள் பலர் சேர்ந்து முருகனை நினைத்து ஆடுகின்ற கூத்தாகும்.

நடுகல் வழிபாடு: இவ்வழிபாட்டின் நோக்கம் போரில் வீழ்ந்த வீரனின் ஆற்றலை கல்லிலே உருவகித்து வழிபடல் இதிலே ஐந்து விதிகள் உண்டு. அவை காட்சி, கால்கோல், நீர்ப்படை, நடுகல்விழா, வாழ்த்து என்பனவாகும்;

காட்சி என்றால் வீரனின் நினைவிற்காக கல்லை தெரிந்து இடங்காணல் எனப்படும். கால்கோல் என்பது கல்லைத் தெரிந்தெடுத்து நிலை நிறுத்தல். நீர்ப்படை என்பது நீராலே கல்லை குளிப்பாட்டலை கருதும்; விழா என்பது நட்ட கல்லிற்கு விழா எடுத்தலையும் வாழ்த்து என்பது அதற்கு வாழ்த்து சொல்லுதலையும் குறித்து நிற்கும். இவ்வழிபாடானது பிற்காலத்திலே வளர்ச்சியடைந்து நடைமுறையில் நிலவி மிளிர்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

படையல்! சங்க காலத்திலே பசலை எனும் காதல் நோய் காரணமாக காதலி மெலிந்து போவது இயல்பு. இதனை அறியாத பெரியோர் இதற்கு முருகன் தான் காரணம் என நினைத்தனர்: இதனைத் தீர்ப்பதற்கு முருகனுக்குப் படையல் செய்தனர். இதற்கு பலநிறச்சோறுகள் சமைத்து சிறு ஆட்டுக்குட்டியை வெட்டி அந்த இரத்தத்தை அப்பெண்ணின் தலையிலே தடவி முருகனுக்குப் பலியாகக் கொடுத்தனர். இச் சம்பவங்கள் குறுந்தொகையிலும், ஐங்குறுநூறிலும் காணப்படும்.

நம்பிக்கை அடிப்படையிலான வழிபாடு:

இவ்வழிபாட்டினுள் அவிவழங்கல், அமரரைப் போற்றுதல். புனித நீராடல், அறன் வலியுறுத்தல், கற்பைப் பேணுதல், நிலையாமையை உணர்த்த முற்படுதல், நல்வினையை வற்புறுத்தல், ஊழ் போன்ற விடயங்கள் அடங்கும்.

சங்ககால சமய மரபினுள் ஒன்றாக அடங்கும் சமய நம்பிக்கைகளை எடுத்தால். இவற்றுள் ''பேய்மகளிரும் பேய்களும்'' குறிப்பிடத் தக்கது. இறந்த மக்களின் உடலை சுடுகாட்டிலும் போர்க்களங்களிலும் உண்ணும் பேய்மகளிரைப் பற்றிச் சங்க நூல்கள் பல இடங்களில் கூறுகின்றன. போரில் வீழ்ந்த மன்னரின் குருதியைக் காய்ச்சி வெற்றி கொண்ட வீரர்க்குப் பேய்மகள் வழங்குவான்.

பேய்கள் பற்றிய நம்பிக்கையை எடுத்தால், தமிழ்மக்கள் பேய்களுக்குப் பயந்து வாழ்ந்தனர். பேய்கள் மரங்களிலும் சுடுகாட்டிலும் வாழ்ந்தன. நள்ளிரவில் பேய்களும் பிசாசுகளும் நகரத்து வீதிகளில் உலாவுவன என மக்கள் நம்பினர். நடுச்சாமத்தில் பேய்கள் உலாவித் திரிவன; என மதுரைக் காஞ்சி கூறும் ''பானாட் கொண்ட கங்குலிடையது'' என்ற பாடலடி இதனை விளக்கும்.

கண்ணாறு இது பேய்களைப் பற்றிய நம்பிக்கையோடு தொடர்புடையது. இரு

LIBRARY
KATARAGAMCHERI HINDU COLLEGE

தாம் நூற்றாண்டிலும் இந்நம்பிக்கை நிலவுகிறது. தீமை பயக்கும் கண்களுக்கு மாற்றாகக் கதவு நிலைகளில் வெண்கடுகும் பூசும் வழக்கம் இருந்தது. மதில்களின் கதவுக்குக் காவலாக புற வாயிலிலே தூக்கப்படும் துலா ஐயவி எனப்படும்;

நிமித்தமும் சமய நம்பிக்கையாகக் கொள்ளப்பட்டது. வீட்டிலிருந்து புறப்படவும் திரும்பி வரவும் நல்நிமித்தம் பார்ப்பது பழந்தமிழ் மக்களின் வழக்கமாகும்; ஆரம்பத்தில் பறவைகளால் நிமித்தம் பார்க்கும் முறை இருந்தது; இது புள்நிமித்தம் எனப்பட்டது. புறநானூற்றில் இவைபற்றி அறியலாம்;

பல்லி சொல்லைக் கவனிக்கும் வழக்கமும் சங்க காலத்தில் இருந்தது. நற்றிணைப் பாடலில் இதனையறியலாம்.

குறிபார்த்தல் வழக்கமும் இருந்தது. தலைவனின் பிரிவால் தலைவியின் நுதலில் பசலை நோய் ஏற்பட, இதனையறியாத பெற்றோர் முருகனது குறைபாட்டால் தான் ஏற்பட்டதோ என அறிய வேலன் குறிபார்த்தல் காணப்பட்டது.

காக்கைகளுக்குச் செஞ்சோற்றுப் பலியிடும் வழக்கமும் அக்காலத்தில் நிலவியது. இன்னும் உணவு அருந்தும் முன்பு உணவிலே ஒரு பகுதியை காக்கைக்கு எடுத்து வைக்கும் பழக்கத்தைக் காணலாம். காகம் கரைதல் விருந்தினர் வரவைக் குறித்தது. எட்டுத்தொகை நூல்களில் இந்த நம்பிக்கைகளைக் காணலாம். குறுந்தொகைப் பாடல் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

''விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே'' என்ற அடி இதனை விளக்கும்.

இவ்வாறாக சமய நம்பிக்கைகள் அமைய சங்ககாலசமய மரபினால் ஏற்பட்ட பங்களிப்புக்களை எடுத்தால்

1) சங்ககால வழிபாட்டிற்குப்பின் தான் சிவன் முழுமுதற் கடவுளாகப் போற்றப்பட்டான்.
2) கொற்றவை வழிபாட்டிலே கொற்றவை பிற்காலத்தில் உமையுடனும் துர்க்காதேவியுடனும் ஒப்பிடப்பட்டாள்
3) முருகவழிபாடு பிற்பாடு கிராமிய தெய்வங்களிற்கு வழியமைக்கிறது.
4) முல்லை நிலத்தில் வழிபடப்பட்ட திருமால் பல்லவரது ஆட்சிக்காலத்தில் இந்துமதம் எனும் நதியில் 'வைணவ மதம்' எனும் கிளை பெருக்கெடுக்க உதவியது.
5) கச்சியப்பர் 'மூவிரு முகங்கள் போற்றி' என்று பாட அடியெடுத்துக்கொடுத்தது
6) 'ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே' என்ற திருப்புகழிற்கு அடியெடுத்துக் கொடுத்தது.
7) திருமுருகாற்றுப்படையில் வரும் சூரன் போர்தான் கந்தபுராணத்தில் வருகிறது. இதிலிருந்து சங்ககால மக்களும் சூரன்போர் கொண்டாடியுள்ளனர்;
8) சங்க காலத்தில் இந்திரனுக்கு எடுத்த விழா சிலப்பதிகாரத்தில் வந்துள்ளது.
9. சங்ககாலத்தில் காணப்பட்ட நம்பிக்கை அடிப்படை வழிபாடு பிற்காலத்தில் ஒழுக்கநெறி வரை வித்திட்டது உ+ம் மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றில் ஒழுக்கக் கோட்பாடு போற்றப்படுகிறது என்பதை அறிய முடிகிறது

முடிவாக நோக்கும் போது இயற்கை நெறிக்காலம் எனப்பெறும் சங்ககாலத்தில் இயற்கையோடு ஒட்டியதான வாழ்க்கை முறையே பெருவளர்ச்சியடைந்திருந்தது. அங்கு காதலும் வீரமுமே போற்றப்பெற சமய உணர்வு பெருவாரியாக எழவில்லை. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் வாயிலாக அக்காலத்தில் சமயஉணர்வு ஓரளவு இருந்துள்ளதென்பதை அறியலாம் ஐவகை நிலத் தெய்வங்களும், அவற்றின் வழிபாட்டு முறைகளும் சமய நம்பிக்கைகளும் இவற்றில் விளக்கப்பெறுகின்றன. சங்ககால இலக்கிய ஆதாரங்கள் பிற்கால இந்துமத வளர்ச்சிக்கு அடிக்கல்லாக அமைந்தனை என்பதும் குறிப்பிடத்தக்கவை.

※※※

இந்து வணிகனே வாழிய!!

மொத்தமாக மளிகைப்பொருட்களை கொள்வனவு செய்ய
நாடவேண்டிய ஓரே ஸ்தாபனம்

# சேரன் பல்பொருள் வாணிபம்

எமது கிளைகள்.

கொடிகாமம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை.

எமது விசேட கிளைகள் யாழ்நகரில்:
சேரன் காகிதாதிகள் வாணிபம்

மங்கையர் ஆடவரிற்கு;- எழினி புடவை வாணிபம்

வாகன உரிமையாளருக்கு:- விக்ரர் இயந்திர உதிரிப்பாக வாணிபம்

அழகுசாதனப் பொருட்களுக்கு;- எழிற் கூடம்

மருந்துப் பொருட்களுக்கு:- சேரன் மருந்து வாணிபம்

வேளாண் இடு பொருட்களுக்கு நாடுங்கள் சேரன் வேளாண் இடுபொருள் வாணிபம்

சிறப்பாக சில்லறை விற்பனையில் உங்கள் அபிமான ஸ்தாபனம்

யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம்.

1991ல் க. பொ. த. உயர்தர பரீட்சையில்

## பல்கலைக் கழக அனுமதி பெற்றோர்

க. அஞ்சலன்

நா. கிரிசா

க. உமாவதி

இ. ரேணுகா

பெ. தர்மினி

1992ல் க. பொ. த. உயர்தர பரீட்சையில்

## பல்கலைக் கழக அனுமதி பெற்றோர்

வே. கலைச்செல்வன்

க. கமலரூபன்

இ. சுதர்சினி

த. சுமங்கலா

ம. சிவகுமாரி

து. மஞ்சுளா

சு. கவிதா

க. அனுசமலர்

என். அருட்செல்வி

1993ல் பொ. த. உயர்தர பரீட்சையில்

## தோற்றியோர் 73

## பல்கலைக் கழக அனுமதிக்கான தகுதி பெற்றோர் 50

# கண்ணீர்த் துளிகள்

## செல்வி. சுஜீவா தெய்வேந்திரம்

(93ம் வருட வர்த்தகப்பிரிவு)



மலர்வு

**10-01-1974**

உதிர்வு

**12-10-1994**

இந்துவின் புத்திரியாய்
இரண்டு வருடங்கள்
வர்த்தகக் கல்வி பயின்று
வாஞ்சையுடன் பரீட்சை முடிவுகளை
எதிர்பார்த்து காத்திருந்த வேளை
எங்கிருந்தோ ஓர் சேதி
ஓர் ஜீவா!
ஈர்பத்து வயதினில்
இனிய உன் வாழ்க்கை
அஸ்தமனம் ஆனதோ?
அழும் நெஞ்சோடு
கண்ணீர்த் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்
அமைதியில் துயில்வாய் எம் சோதரி

**உயர்தர வர்த்தக மாணவர் மன்றம்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

AKAKACHCHERI HINDU COLLEGE

# ★ நிதியுதவி வழங்கிய கரங்களிற்கு நன்றி ★

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. சாந்தநிர்மலா இராஜேந்திரன் | 1000 |
| 2 | திருமதி. இராஜசங்கரி வசந்தநாயகி | 500 |
| 3 | செல்வி. முருகுப்பிள்ளை | 250 |
| 4 | அம்பிகா டிஸ்பென்சரி | 250 |
| 5 | வித்தியா ரெக்ஸ் | 200 |
| 6 | மருதலிங்கம் | 200 |
| 7 | கீதா ஜீவல் ஹவுஸ் | 200 |
| 8 | அருள் புடவை மாளிகை | 150 |
| 9 | கஞ்சைன் கூல் பார் | 150 |
| 10 | மங்களா அழகுசாதன மாளிகை | 100 |
| 11 | சத்தியா மதுபான நிலையம் | 100 |
| 12 | சிவராசா | 100 |
| 13 | செல்வம் குளிர்பான நிலையம் | 100 |
| 14 | சி. அரியரட்ணம் | 100 |
| 15 | சறோஜா தங்க மாளிகை | 100 |
| 16 | சிவம் புத்தகசாலை | 100 |
| 17 | அம்மா அப்பா புடவையசம் | 100 |
| 18 | சிறி வெற்றிலைக் கடை | 100 |
| 19 | வதனி ஜுவலறி | 100 |
| 20 | இராசேஸ் ஸ்ரோர்ஸ் | 100 |
| 21 | சிறி முருகன் களஞ்சியம் | 100 |
| 22 | திருவருள் வியாபார நிலையம் | 100 |
| 23 | சின்னையா வர்த்தக நிலையம் | 100 |
| 24 | ந. சிவசுப்பிரமணியம் | 100 |
| 25 | சிவசக்தி உதிர்ப்பாகம் | 100 |
| 26 | ஆர். பிரி. அன்கோ | 100 |
| 27 | விஜிதா புடவை மாளிகை | 100 |
| 28 | கணேசானந்தா | 100 |
| 29 | குணம் ஜுவலறி | 100 |
| 30 | கவிதா தேனீர்ச் சாலை | 100 |
| 31 | ராஜன் ஜுவலறி | 50 |
| 32 | மணியம் நகை மாடம் | 50 |
| 33 | ஆசீர்வாதம் புத்தகசாலை | 50 |
| 34 | வசந்தா பாமசி | 50 |
| 35 | பூச்சரம் | 50 |
| 36 | வ. ரவிச்சந்திரன் | 50 |
| 37 | ஜீவனா | 50 |
| 38 | சுமங்கலி | 50 |
| 39 | நியூ ஷெலக்சன் | 50 |
| 40 | அம்பாள் களஞ்சியம் | 50 |
| 41 | இ. கமலநாதன் | 50 |
| 42 | வாலாம்பிகை | 50 |
| 43 | கண்ணன் ஸ்ரோஸ் | 50 |
| 44 | சிறி கணேஸ் | 50 |
| 45 | டினேஸ் தையலகம் | 50 |

வே. சிவாகரன் (பொருளாளர்)

★

# இன்றைய இனிய நாளில் "இந்துவணிகன்"

# இவர்களுக்கு இரு கரமும் ஒருகரமாய் நவில்கின்றான்

## நன்றிகளை!!

- ஆசிச் செய்தி வழகிய தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. புஸ்பா கணேசலிங்கம் அவர்களுக்கும்;
- வாழ்த்துச் செய்தி அனுப்பிய வலயம் I வணிகவியல் சிறப்பவலுவலர் திரு. வ. க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும்;
- வாழ்த்துச் செய்தி தந்த உயர்தர வர்த்தக மாணவர் மன்ற முன்னைனாள் தலைவர் செல்வன். சி. தவாசன் அவர்களுக்கும்;
- வணிகன் புதுப் பொலிவுடன் விளங்க பல்வகைக் கட்டுரைகள் வழங்கி சிறப்பித்த யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்கட்கும்;
- எமது கல்லூரி முன்னேற்றத்துக்கும், இம்மலரின் உதயத்துக்கும் அயராது ஊக்கமளித்த அதிபருக்கும், துணை அதிபர்களுக்கும;
- எம் வணிக மன்ற வளர்சிக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்த மன்றப் பொறுப்பாசிரியருக்கும், எமக்கு நேர் வழிகாட்டும் நேரிய வல்ல நல்லாசான்களுக்கும்;
- அதிஸ்டலாப சீட்டிழுப்பின் மூலம் பெருநிதியை திரட்ட ஊக்கமும், ஒத்துழைப்பும் வழங்கிய நல் உள்ளங்கள் யாவருக்கும்;
- விளம்பரம் தந்து பெருநிதியுதவிய வர்த்தக பெருமக்களுக்கும், நிதியுதவிய பெருந்தகைகட்கும்;
- மன்றத்தின் சார்பில் கட்டுரைகள் எழுதிய மாணவர்களுக்கும்;
- செயற்குழுவில் இருந்து சேவை ஆற்றியவர்களுக்கும்;
- நிழற்படங்களை அழகுற எடுத்துதவிய ஜெயா புகைப்பட கலையகத்துக்கும்;
- துரிதகதியில் புளொக்கை தயாரித்து வழங்கிய அழகன் நிறுவனத்தாருக்கும்;
- ''இந்து வணிகனை'' மிக அழகாகவும், விரைவாசவும் பதிப்புச் செய்து வழங்கிய ஸ்ரீலங்கா புத்தகசாலை அன் அச்சகத்திற்கும்;
- இன்னும் ''இந்து வணிகன்'' நல்மனம் கமழ உதவிய அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் இறையருள் இறைஞ்சி நன்றிகளை நவில்கிறேன்.

நன்றி.

பீ தோமஸ் எடிசன்
(செயலாளர்)

## தேனீர் பிரியர்களிற்கு

## ஓர் நற்செய்தி!

**புதிய யுகத்தின் ஆரோக்கிய பானம்!**

**தனித்துவமான புதுச்சுவை!!**

**"லிவர் பிறதேஸ்" அமைப்பின் மற்றுமோர்**

**புதிய அறு உன்னத படைப்பு**

**லிப்டன் — சிலோண்டா**

**லிப்டன் — லாவோஜி**

- மிகுதியான உழைப்புத் தேவைப்படும் இக்காலத்தில் ஏற்படும் அதிகமான களைப்பினைப்போக்கி உற்சாகம் ஊட்டி புத்துணர்வை அளிக்கின்றது.
- இங்கிலாந்தின் அனுமதியுடனும் அனுசரணையுடனும் பல்லாண்டுகளாகத் தரமான உற்பத்திகளை வழங்கிவரும் லிவர் நிபுணர்களால் விசேடமாக தேர்ந்து கலவை செய்யப்படும்.
- அன்றே கொய்த அருஞ்சுவைத் தேயிலையின் அதே நறுமணமும் நறுஞ்சுவையும் குன்றாத வகையில் விசேடமாக அடைக்கப்பட்ட 400, 200, 100 கிறாம் கொண்ட உறைகளில் கிடைக்கிறது.

**விநியோகஸ்தர்கள்:-**

# சிறி விக்னேஸ்வரா களஞ்சியம்

இல. 148, யாழ் வீதி, சாவகச்சேரி.

## ஸ்ரீ லங்கா புத்தகசாலையும் அச்சகமும்

"இந்து வணிகனே"

வாழிய! வாழ்த்துகின்றோம்!!

- மருத்துவ / விஞ்ஞான / வரலாறு / வர்த்தக/புத்தகங்களுக்கும்;
- பாடசாலைப் புத்தகங்கள் / அப்பியாசப் புத்தகங்கள் / கொப்பிகள்;
- பாடசாலை / அலுவலக / உபகரணங்கள் / காகிதாதிகளும்;
- (வருட) கலண்டர்கள் / டயறிகள் / மொத்தமாகவும் / சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள;

(மற்றும்)

- அச்சக வேலைகள் / றபர் சீல்கள் / உடனுக்குடன் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்

இன்றே நாடுங்கள்

# ஸ்ரீ லங்கா புத்தகசாலையும் அச்சகமும்

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

"நல்ல புத்தகம் ஒன்றைப் போல் சிறந்த உறவினனும் நண்பனும் இப்பூவுலகில் யாருமில்லை"

## SRI LANKA BOOK DEPOT & PRESS
## 234, K. K. S. ROAD, JAFFNA.

---

ஸ்ரீலங்கா புத்தகசாலை அன் அச்சகம் 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.